OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 21 FEB 1911 MADRAS.

# விவேகபோதினி

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்" 

தொகுதி III } ஸாதாரண௵ மார்கழி௴ 1911-௵ ஜனவரி௴ { பகுதி 7

## நற்பாவனைகள்

### RIGHT ATTITUDES

ஆத்மாவின் உண்மை நிலையை அறிந்து தேற ஆவல் கொண்டிருக்கும் முமுக்ஷுக்களுக்கு எல்லாம், ஸங்யாஸம் பலித்து நிஷ்டை ஆதியில் கைகூடுவது அபூர்வம். பெரும்பாலும் முமுக்ஷுக்கள் உலகில் பழகி அதில் மொத்துண்டு வருந்தி முடிவில் விடுபடுபவர்கள். இவர்கள் உலகில் பழகும் காலத்தில் அதனுள் சிக்கிக்கொண்டு உழலாது ஒதுங்கி வாழவேண்டியது அவசியம். இவ்வாறு வாழ்வதற்குப் பின்வரும் நான்கு நற்பாவனைகள் மிகுந்த ஸஹாயமாக இருக்கும் என்று பெரியோர் கூறுவர். அவையாவன மைத்ரி, கருணை, முதிதை, உபேக்ஷை ஆகிய இவைகளே. இவைகளின் ஸ்வரூபத்தையும், இவைகளால் முமுக்ஷு எவ்வாறு உலகில் அகப்பட்டுக்கொள்ளாது வாழலாம் என்பதையும் வித்யாரண்யஸ்வாமிகள் தமது ஜீவன்முக்திப்பிரகரணத்தில் எடுத்து விஸ்தரித்தவாறு இங்கு எடுத்து எழுதுவோம்.

1. மைத்ரி என்பது உலகில் உள்ளவர்கள் எல்லோரும் நம்மைச் சேர்ந்தவர்கள் என்று பாராட்டுவதே. இது முக்யமாக ஒவ்வொரு முமுக்ஷுவுக்கும் உலகில் ஸுகப்படுபவர் விஷயத்தில் அவசியம் உண்டாகவேண்டும். இவ்வாறிருந்தால் தன் பிள்ளைக்கு வரும் ஸுகங்களைக் கண்டு ஓர் அன்புள்ள தகப்பன் எவ்வாறு திருப்தி அடைவானோ அவ்வாறே முமுக்ஷுவும் பிறர் சுகங்களைக் கண்டு, பொறாமை கொள்ளாமலும், தனக்கு அவைகள் உண்டானால் நலமாக இருக்கும் என்ற ராகம் இல்லாமலும், தனக்கு அந்த ஸுகங்கள் உண்டாக, வேண்டிய ஸாதனங்கள் இல்லையே என்ற ஏக்கம் இல்லாமலும், நல்ல திருப்தியை அடைந்து ஸுகிப்பான். மேலும் இதனால் பிறரிடம் இருக்கும் குற்றங்களையே பெரிதாக எண்ணிக் கூறும்படியான பரநிந்தையும் ஈர்ஷையும் முமுக்ஷுவை விட்டு அகல, அவன் எல்லா மனிதர்களிடத்தும் உள்ள நன்மையைப்பார்க்கும் திறனுடையவனாவான்.

2. கருணை.—தனக்கு எப்படியோ அப்படியே பிறர்க்கும்; அதாவது தன்னுயிர்போலமன்னுயிரைப் பாவித்தலே கருணையாகும். இது முக்கிமாகத் துக்கப்படுபவர்கள் விஷயத்தில் ஒவ்வொரு முமுக்ஷுவுக்கும் இருக்கவேண்டும். இதனால் தனக்குத் துக்கம் வேண்டாம் என்ற துவேஷமும், தனக்குத் தீங்கிழைப்பவர்களுக்குப் பதில் தீங்கிழைத்தலும், தனக்கு வரும் தீங்கு வரவொட்டாமல் தடுக்க முடியவில்லையேஎன்ற ஏக்கமும் நீங்க, எந்தத் துக்கஸமயத்திலும் அவனிடம் சாந்தி குடி கொள்ளும். மேலும் தனக்குத் துக்கம் இல்லாத காலத்தில் தான் பிறரைவிட அதிர்ஷ்டமுள்ளவன், தான் கடவுள் விசேஷ கருணைக்குப் பாத்திரமானவன் என்ற வீண் கர்வம் தலை தூக்காது அழிந்துபோகும்.

3. முதிதை என்பது ஸந்தோஷம் என்று பொருள்படும். புண்ணிய விஷயங்களையும் புண்ணியவான்களையும் காணுங்கால் இந்த ஸந்தோஷம் முமுக்ஷுவுக்கு வரவேண்டும். ஜனங்கள் பொதுவாகப் புண்யபலனான ஸுகத்தைக் கோருகிறார்கள். அதற்கு வேண்டிய புண்யத்தில் ஒருவரும் பிரவர்த்திக்கிறதில்லை. இப்படிக் காலத்தைப் போக்கி மரணகாலத்தில் 'புண்யம் ஒன்றும் செய்யவில்லையே, என்ற துக்கத்திற்கு ஆளாகிவருந்துவார்கள். இவ்வித வருத்தம் இந்த முதிதையால் முமுக்ஷுவுக்கு வராமல் தடைபடும்.

4. உபேக்ஷை என்பதற்குக் கவனியாதிருத்தல் என்பது பொருள். உலகில் எல்லோருக்கும் பாபபலனாகிய துக்கம் வேண்டாம் என்று தோன்றும். ஆயினும் பாபத்தையே ஜனங்கள் விடாது செய்வார்கள். மரணகாலத்தில் 'அநியாயமாக இவ்வளவு பாபம் செய்து விட்டோமே!' என்று துக்கிப்பார்கள். பாபிகள் விஷயத்தில் முமுக்ஷு உபேக்ஷையாக இருந்தால் த்வேஷம் உண்டாகாது; இந்தத் துக்கத்திலிருந்து நீங்குவான்.

ஆகவே இந்நான்குவித பாவனைகளிலும் ஒவ்வொருவரும் பழகிவந்தால், மலம் நீங்கி மனம் வர வர சுத்தப்பட அதில் சாந்தம் குடிகொள்ளும்.

விவேக போதினி

தொகுதி 3] ஸாதாரணஹு மார்கழிமீ [பகுதி 7

# முக்கிய உபநிஷத்துக்கள்
## THE PRINCIPAL UPANISHADS
### VIII அயித்ரேய உபநிஷத்
### THE AITAREYA UPANISHADS

இவ்வயித்ரேய உபநிஷத்தும் தைத்திரீய உபநிஷத்தைப் போன்றது. இதிலும் உபாஸனு காண்டம் ஸ்ருஷ்டி விஷயம் தேஹவிவரணம் முதலியன உண்டு. ஆயினும் இங்கு இவைகள் எல்லாம் வெகு சுருக்கமாகக்காணப்படும். இதுவும் அல்லாமல் இதன் உபாஸனுபாகம் பெரும்பாலும் கர்மகாண்டத்தோடு அதிகமாக ஸம்பந்தப்பட்டிருப்பதால் அதை இவ்வுபநிஷத்திற்கு முகவுரையாகக்கொண்டு இதனுேடு அது பெரியோரால் சேர்க்கப்படவில்லை. ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள் இவ்வுபநிஷத்திற்கு வியாக்யானம் எழுதுங்கால் இதன் மற்றைய பாகங்களைப்பற்றிப் பின்வருமாறு சுருக்கிக் கூறுகிறுர். "த்விஜர்களாகப் பிறந்தவர்கள் முதலில் செய்யவேண்டிய கடமை, யாகம் முதலிய வைதிக கர்மங்கள் செய்தல். இவைகளை, ஸம்ஹிதை, பிராஹ்மணங்கள், ஆர்ண்யகங்கள் ஆகிய இப்பாகங்களில் வேதம் எடுத்து விஸ்தரிக்கின்றது. இதன் பின்னர் ஞானம் பெறவேண்டும் என்ற ஆவல் மனிதனுக்கு உண்டாகும். இது மனம் ஒருமைப்பட்டாலன்றி வித்திக்காது. இது கைகூடுவதற்காக வேதம் அநேகவித உபாஸனைகளை விதிக்கின்றது. இவைகளே இவ்வயித்ரேய உபநிஷத்தின் முற்பாகங்கள். இவ்வுபாஸனை இரண்டுவிதம். அவையாவன பிரஹ்மோபாஸனை, ப்ரதிகோபாஸனை என்னும் இவைகளே. பரம்பொருளைச்சிற் சிலகல்யாண குணங்களுக்கு இருப்பிடமாக எண்ணிப் பாவிப்பதே பிரஹ்மோபாஸனையாகும். சிற்சில வெளி வஸ்துக்களைப் பிரஹ்மமாகக் கருதி மனதை ஒருமைப்படுத்துவதற்கே ப்ரதீகோபாஸனை என்று பெயர். இதனுல் நமது மனதைச் சின்னுபின்னமாக வெளியிழுத்துச் சென்று ஒருமைப்படாது தடுக்கும் இந்திரியாதிகள், வெளியே ஓடுவது நீங்க மனம் வரவர ஒருமைப்பட்டு வரும். இந்த உபாஸனைக்கு ஸாதனமான வஸ்துக்கள் இருவகைப்படும். வைதிக கர்மங்களோடு ஸம்பந்தப்பட்டவை, அவ்வாறு ஸம்பந்தப்படாதவை என்பவைகளே. இவ்வுபநிஷத்தின் முன்பாகத்தில் முன்வித ப்ரதீக உபாஸனையையே எடுத்து விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இதனுலே வைதிக கர்மங்கள் செய்ய யோக்யமான த்விஜர்கள், அக்கர்மங்கள் செய்யும் பொழுதே அதற்கு உபயோகமாகும் வஸ்துக்கள், மந்திரங்கள் முதலியவைகளைத் தகுந்தபடி பிரஹ்மமாகக் கருதி பிரஹ்மத்தைப் பிராணனுகை மதித்து முடிவில் ஆராதனை செய்ய வேண்டியது. இதையே பகவான் கீதையில் இவ்வாறு செய்யவேண்டியது யாகஸமயத்தில் மாத்திரம் தான் என்பதும், ஆங்காங்கு ஒவ்வொரு மந்திர விஷயத்தில் மாத்திரம்தான் என்பதுமல்ல எந்த ஸமயத்திலும் எவ்வித மந்திரங்கள் விஷயத்திலும் யுக்திக்குப் பொருந்தும்படி பிரஹ்ம விஷயத்தை ஸம்பந்தப்படுத்தி ப்ரதீகோபாஸனை செய்யலாம். (இரண்டாவது விதமான ப்ரதீகோபாஸனை தான் எல்லாஜாதி ஜனங்களுக்கும் பொது. இதிலிருந்துதான் நமது பெரியோர் விக்ரஹாராதனத்தை ஏற்படுத்தி யிருக்கின்றனர். வேதத்தில் விக்ரஹ ஆராதனத்திற்கு ஆதாரமே இல்லை என்று அவஸரமாக மதிக்கும் குதர்க்க வாதிகள் இதை உற்று நோக்கட்டும்). இவ்விதமான ப்ரதீகோபாஸனைகளும் அவைகளை ஸம்பந்தப்படுத்த வேண்டிய மஹாவர்தம் என்ற யாகமுமே இவ்

வுபநிஷத்தின் முன் உள்ள ஆரண்யக பாகங்களில் இருப்பவை. ப்ரச்ஞோபநிஷத்தில் பார்கவர் கேள்விக்குக் கொடுக்கப்பட்ட விடையில் உள்ளகதை ஒன்று இங்கும் காணப்படுகிறது.

I. இனி அயித்ரேய உபநிஷத்தில் அடங்கிய விஷயங்களை எடுத்துக் கூறுவோம். முதலில் இவ்வுபநிஷத்து பிரபஞ்ச ஸ்ருஷ்டியைக் கூறுகிறது. ஆதியில் எல்லாம் பரம்பொருளாகவே இருந்தது: ஓர்வித சலனமும் இல்லை. இந்நிலை முடியும் காலத்தில் பரம்பொருள் ‘நான் ஸ்ருஷ்டிக்க வேண்டும்’ என்று நினைத்தார். உடனே பிரபஞ்சம் முழுவதும் ஒழுங்காக அவரிடமிருந்து வெளிவந்தன. இவைகளுக்கு அதிஷ்டான தேவதைகளை உண்டாக்க பிரளயோதகத்திலிருந்து ஓர் மனிதன்போன்ற உருவமுடையவனை எடுத்து அவனைத் தன் த்யானத்தால் தாக்கினார். உடனே அவன் இந்திரியங்கள் முதலியன பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டபடி ஸ்ருஷ்டிக்கப்பட்டான்.

| உண்டான இந்திரியங்கள். | தொழில்கள் | அதிஷ்டான தேவதைகள். |
| --- | --- | --- |
| 1. வாய் | வாக்கு | அக்னி |
| 2. மூக்கு | சுவாஸம் | வாயு |
| 3. கண் | பார்வை | ஆதித்யன் |
| 4. காது | கேட்டல் | திசைகள் [கள் |
| 5. தோல் | (ரோமங்கள்) | ஓஷதி தேவதை |
| 6. ஹ்ருதயம் | மனஸ் | சந்திரன் |
| 7. நாபி | அபானவாயு | யமன் |
| 8. உபஸ்தம் | ரேதஸ் | வருணன் |

இது விராட்ரூபம் ஸமஷ்டி ஸ்ருஷ்டி. இவ்வாறு ஸ்ருஷ்டிக்கப்பட்ட தேவதைகள் பிரபஞ்சத்தோடு ஸம்பந்தப்பட்டதும் அவர்களுக்குத் துக்கம் உண்டாயிற்று. அது பசிதாக ரூபமாகத் தோன்றிற்று. உடனே அவர்கள் பரம்பொருளை நோக்கி ‘நாங்கள் தங்கி நிலைத்திருந்து எங்களுக்கு வந்திருக்கும் பசிதாகங்களைத் தீர்த்துக் கொள்ளவேண்டும். எங்களுக்குத் தகுந்த இடம் கல்பியும்’ என்று கேட்டனர். உடனே பரம்பொருள் பிரளயோதகத்திலிருந்து முறையே பசு, குதிரை முதலியவைகளை வெளிப்படுத்த தேவதைகள் தமக்கு இவை தகுந்தவை அல்ல என்று மறுத்து விட்டனர். முடிவில் பரம்பொருள் மனிதனை வெளிக்கொண்டு வர ‘இதுவே எமக்குத் தகுந்தஇருப்பிடம்’ என்று கூறிப் பரம்பொருள் உத்தரவுப்படி மனிதனுள் புகுந்து தத்தம் ஸ்தானங்களில் அமர்ந்து மனிதனது இந்திரியங்கள் ஆயினர். பசிதாகங்களும் மனிதனுள் குடி கொண்டுவிட்டன. ஆகவே எந்தத் தேவதைகளுக்கு ஆஹுதி கொடுத்த போதிலும் அது பசிதாக சாந்தியாகவும் முடியும். இவ்வாறு மனிதனுள்ளும் அண்டத்திருப்பதுபோலப் பாகங்கள் அமைந்துள்ளன. இக்கதையினால் மனிதன் ஸகல ஸ்ருஷ்டிகளிலும் சிறந்தவன் என்பதை உபநிஷத்துக் குறிப்பாகக் காட்டுகின்றது என்று பெரியோர் அபிப்பிராயப் படுகின்றனர்.

இவைகளுக்குத் தகுந்த ஆஹாரம் ஸ்ருஷ்டிக்க வேண்டும் என்று பரம்பொருள் எண்ணிய மாத்திரத்தில் அது ப்ரளயோதகத்திலிருந்து வெளிப்பட்டது. அது பயத்தால் கதறிக் கொண்டு ஓடத்தலைப்பட்டது. உடனே பரம்பொருள் ஸ்ருஷ்டியாகி இருந்த வாய், மூக்கு, கண், காது, தோல், ஹ்ருதயம், உபஸ்தம் முதலியவைகளால் அதைப் பிடிக்கப் பார்த்தார். முடியாமல் போய்விட்டது. அவ்வாறு இவைகள் எதனாலாகிலும் பிடிபட்டிருக்குமாயின் ஆஹாரத்தை, வர்ணித்தல், முகர்தல், பார்த்தல்,(பற்றிக்)கேட்டல், தொடுதல், நினைத்தல், வெளியிடுதல் முதலிய இத்தொழில்களில் எதனாலாவது நமக்குத் திருப்தி உண்டாக இடமுண்டு. முடிவில் நாபியினால் பிடிக்க முயன்று பிடித்துவிட்டார். ஆதலால் அபானவாயுவே ஆஹாரத்தை உண்பது.

‘இவைகள் தத்தம் தொழிலைச் செய்ய

என்னை அல்லாது இவைகளுக்குத் தனியிருப்பு உண்டோ?' என்று எண்ணிப் பரம்பொருள் மனிதன் உச்சியில் தொளைத்துக்கொண்டு அவனுள் புகுந்தார். இவ்விடம் தான் பிரஹ்மரந்தரம் ஆனந்த ஸ்தானம் என்பது. உட்சென்று முற்கூறியவைகளுக்குத்தன்னைத் தவிர வேறு ஆதாரம் ஒன்றும் இல்லை என்று கண்டு 'நான் கண்டேன்' என்று நினைத்தார். இதனால் இப்பரம்பொருளுக்கு இதேந்த்ரன் என்று பெயர்வந்தது. எப்பொழுதும்எதையும் ரஹஸ்யமாக்கவேண்டும்என்ற ஆவலையுடையதேவதைகள் இந்தப்பெயரை இந்த்ரன் என்று மாற்றிச் சிதைத்து விட்டனர். ஆகவே எந்த விஷயம் அனுபவித்தாலும் எல்லாம் அந்தப் பரம்பொருளையே சென்றடைவது, அவரைத்தவிர வேறு ஆதார வஸ்து இல்லை, அவரோ நமது தேஹத்துள் ஆஹாரம் உண்பவர், என்பதை இக்கதையால் இவ்வுபநிஷத் நன்றாக வெளியிடுகிறது.

II. இந்தப் பாகத்தில் ஆத்மாவின் பிறப்பு முதலியவைகள் விஸ்தரிக்கப் படுகின்றன. ஆத்மாவுக்கு மூன்று பிறப்பு. அவைகளுள் தாயின் வயிற்றில் கர்ப்பமாக ஏற்படுவது முதலாவது. கர்ப்ப ஸமயத்தில் கணவன் ஸ்வரூபத்தையே மனைவி வைத்துக்காப்பதால் அவளைக் கணவன் வெகு கவனமாகக் காக்கவேண்டும். தகப்பன் பிரஹ்மோபதேசம் செய்து உபநயனம் செய்வதே இரண்டாவது பிறப்பு. பின்னர் முடிவு காலத்தில் எல்லாவற்றையும் தன் பிள்ளையிடம் ஒப்புவித்துவிட்டுத் தகப்பன் உலகம் நீங்குவது மூன்றும் பிறப்பு. ஆகவே இங்கு சுருதி தகப்பனுக்கும் பிள்ளைக்கும் உள்ள ஆத்மா ஒன்றே என்று கூறுகின்றது. அதனால் தான் கர்ப்பம் தரித்தல், பிரஹ்மோபதேசம் இரண்டையும் மகனோடு ஸம்பந்தப்படுத்தியும் மறு பிறப்பிற்குக் காரணமாகிய மரணத்தைத்தகப்பனோடு ஸம்பந்தப்படுத்தியும் இருக்கிறது." இதனால் தகப்பனே பிள்ளை என்பது சுருதியின் நோக்கம். தகப்பனே மறுபடியும் அதே குடும்பத்தில் பேரனைப் பிறக்கிறான், ஆதலால் பேரனுக்குப் பாட்டன் பேரிடவேண்டும் என்றும் ஏற்பட்டுள்ள வழக்கத்திற்கு வேதத்திலும் ஆதாரம் இருப்பதைக்காண்க.

இம்மாதிரி ஆத்மா பிறந்து இறந்து ஓயாது சுற்றி வரவேண்டிய நிலைக்கு வந்திருக்கிறது. 'கர்ப்பவாஸத்திலிருக்கும் பொழுதே இம்மாதிரி தேவதைகள் உண்டாகி என் தேஹத்துள் புகுந்து இந்திரியங்கள் ஆனதை அறிந்து, வெளிவந்தேன்' என்றார் வாமதேவர் என்னும் ரிஷி. மரணகாலத்தில் இவைகளுக்கு ஆதாரமாகிய பரம்பொருளை உணர்ந்து திருப்தி பெற்று இவ்வாமதேவர் அழிவற்றவரானார்.

III. இவ்வாமதேவர் அடைந்த ஞானத்தை இவ்வுபநிஷத்துப் பின் வருமாறு எடுத்து விஸ்தரிக்கின்றது. "பரம்பொருள் என்று த்யானம் செய்யும் வஸ்து எது? எது பரம்பொருள்? இந்திரியங்கள் முதலியவைகள் தொழில்களுக்கு ஆதாரமாகவுள்ளதா? இந்தத் தொழில்கள் யாவும் பிரஞ்ஞானத்தின் (அறிவின்) ரூபபேதங்கள். இந்தப் பிரஞ்ஞானமே பிரஹ்மம் (ருக்வேத மஹாவாக்யம்.) இது தான் இந்திரன், இதுதான் பிரஜாபதி, தேவதைகள், பஞ்ச பூதங்கள், நான்குவிதப் பிராணிபேதங்கள். ஸகல சர அசரவஸ்துகள் எல்லாம் பிரஞ்ஞையாகிய கண்ணுடைய பிரஹ்மத்தாலாவது. எல்லாம் பிரஹ்மத்திலேயே தங்கியிருப்பது. இந்தப் பிரஹ்மமே இந்தப் பிரஞ்ஞானம். எவனொருவன் இந்த உணர்ச்சியோடு மரணம் அடைகிறானோ அவன் அழிவற்றவனாவான்.

இவ்வுபநிஷத் விஷயத்தை ஸ்ரீமத் சங்கராசாரியர் பின் வருமாறு சுருக்கி வெளியிடுகிறார். "இந்த உபநிஷத் முறையே பிரபஞ்ச ஸ்ருஷ்டி, வியஷ்டி அல்லது ஜீவாத்மஸ்ருஷ்டி, ஜீவாத்மா மோக்ஷம் அடையும்வழி ஆகிய இவைகளைப்பற்றிப் பிரஸ்தாபிக்கின்றது. இந்த உபநிஷத்தானது 'ஜீவாத்மா பிரபஞ்சம் எல்லாம் ஓர் பிரஞ்ஞையின் ரூபபேதங்கள். அந்தப் பிரஞ்ஞானமே பிரஹ்மம். இதை உணருபவனே அழிவற்றவனாகி விடுபடுவான்' என்று கூறி முடிக்கின்றது."

# தமிழ்மொழியின் பரிபாலனை

## PATRONAGE IN TAMIL LITERATURE

இங்கே எடுத்துக்கொண்ட விஷயம் மிகப் பெரியது. இரண்டொரு வியாஸங்களுக்குள் ளாகச் சொல்லி முடிக்கக் கூடியதன்று. எனினும், அதனை ஒருவாறு ஆராய்ந்து, தமிழ்ப் பாஷையை விருத்தி செய்தலையே தமது முழு நோக்கமாகக் கொண்ட சில பாஷாபிமானிகளின் பெருமையையும், பிரபுக்கள் உள்ளங் கனிந்து உதவாத வழி, பொருட் செல்வத் தினும் மேன்மையான கல்விச் செல்வத்தினை இயற்கையாகவே படைத்துள்ள தமிழ்ப் புலவர்கள் தமது இகழ்ச்சி தோன்ற அன்னோரைப் பார்த்துத் தைரியமாகச் சொல்லியுள்ள வார்த்தைகளின் சிறப்பையும், சிறிது எடுத்துக்கூறத் துணிந்தேன்.

எந்தப் பாஷையினும் பரிபாலிப்பு இல்லாவிடில் நூல்கள் வெளிவரா. இது பொதுவான அபிப்பிராயமே யன்றி இதற்கு விலக்குகளும் உண்டு. முக்கியமாக, பாஷாபிமானிகளான புலவர்கள் பிறர் தமக்கு உதவி செய்யப் போகிறார்களென்பதை உத்தேசித்து நூல்களியற்றியவர்களல்லர். அவர்கள் உலோ கோபகாரமாகிய மனத்தோடும், தமக்குத் தோற்றும் அரிய பெரிய கருத்துக்களை யெல்லாம் அப்போதைக்கப்போது வெளியிடுவார்கள். அப்படிப்பட்ட பெரியோர்களைத் தேடி அவர்கள் எடுத்துக்கொண்ட விஷயம் இடையூறின்றி இனிது முடியும்படிச் செய்யவேண்டுமென்று பிரபுக்கள் தாமாகவே வலிந்து புலவர்களுக்கு உதவிசெய்வார்கள். ஒரோவிடத்துப் புலவர்களே பிரபுக்களைக் காண்பதும் உண்டு.

ஆக, இவ்விருவகையானும் புலவர் ஆதரவு தொடங்கியுள்ளது. அரசர், மன்னர், சேனைத்தலைவர், வர்த்தகர், வேளாளர், முதலிய பலர், அநேகம் தமிழ்ப் புலவர்களை ஆதரித்திருக்கிறார்கள். இதன்றி, ஓர் புலவர் மற்றொரு புலவரை யாதரித்திருக்கிறார். முதன் முதல் தமிழ்நூற் பரப்பை யுத்தேசிக்குமிடத்தில், அகத்தியரும் அவர் மாணாக்கர்களும் பிறர் ஆதரவை எதிர்பார்த்தவர்க ளல்லர். கடைச்சங்கத்தார் காலந்தொடங்கியே புலவர் பரிபாலனம் ஆரம்பித்ததென்று சொல்லலாம். முதல் முதல் எல்லாம் வல்ல இறைவனாகிய ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரக் கடவுளே புலவர்களுக்கெல்லாம் தலைமை பூண்டு அவர்களை அரும் பொருளாக மதித்துப் பாதுகாத்து வந்தனர். சங்கத்தாருக்கு ஓர் அளவுகோல் போன்ற பலகையைக் கொடுத்தருளினதன்றி, இடைக்காடரிடத்தில் தமக்குள்ள அபிமானத்தைச் செய்கையாலும் காட்டி யருளினர்.

மதுரையில் குலேசபாண்டியன் அரசாண்ட நாளில் அப்பாண்டியன் கல்வி கேள்வியுடையவனென்று கேட்டு இடைக்காடர் அவனைப் போய்ப் பார்த்து ஓர் செய்யுளைப் படிக்க, அச்செய்யுள், சொற்குற்றம் பொருட்குற்ற மில்லாதிருக்கக்கண்டும், அவன் அதனைப் பாராட்டாமற் சும்மா விருக்கக்கண்டு, இடைக்காடர் மனம் வருந்தினர். உடனே அவர் "தமிழறியும் பெருமானாகிய" இறைவன் கோயிற் புக்கு அவரை வணங்கி நடந்த விஷயங்களைச் சொன்னவளவில், கடவுள் கோபமுற்றுத் தமது ஆலயத்திலிருந்தும் வெளிப்பட்டு வேறோரிடத்திற்குச் சென்றார். மறுநாட் காலையில் இறைவன் திருக்கோயிலில் மூர்த்தியில்லாதிருக்கக் கண்ட சிலர் அச்செய்தியை அரசனிடம் அறிவித்தார்கள். அவன் அதைக்கேட்டுத் துயரமடைந்த போது வேறு சிலர் வைகை நதிக்குத் தென்பாகத்தில் ஓர் புதிய கோயிலிற் கடவுளும் புலவர்களும் இருக்கும் அதிசயத்தை அரசனுக்குத் தெரிவித்தனர். அப்போது அரசன் சரேலென வெழுந்து போய் இறைவனை வணங்கித் தன் பிழையைப் பொறுத்தருளும்படி வேண்டிக்கொண்டு புலவர்களுக்கு விசேஷ

வெகுமதி யளித்தான், என்பது திருவிளையாடற் புராணக்கதை.

கடைச்சங்கத்தார் காலத்திலும், அக்காலத்துக்குப் பிறகும் எத்தனையோ புலவர்கள் விளக்கமுற்றிருந்தார்கள். அவர்கள் சிலவிடங்களில் வெகுமதிகளைப் பெற்றும் வேறிடங்களிற் பெறாது, ஈகைத்தன்மை யில்லாதவர்களை வெறுத்தும், இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லப்புகின் மிகப் பெருகுமாதலால் முக்கியமான சில விஷயங்களை மட்டில் எடுத்துக்கொண்டு, புலவர் பரிபாலனம் காலத்துக்குக் காலம் எவ்வாறு வேறுபட்டிருந்ததென்பதை மாத்திரம் ஈண்டு தொகுத்துச் சொல்வாம்.

மஹா மஹோபாத்தியாய பிரம்ஹஸ்ரீ உ. வே சாமிநாதையரவர்கள் அருமையாகப் பதிப்பித்துள்ள தொகைநூல்களிற் புலவர் பெருமை, புலவர் பரிபாலனம், பரிபாலித்த பாஷாபிமானிகளின் சிறப்பு முதலிய யாவும் அநேகம் செய்யுட்களில் ஆங்காங்கு மிக விஸ்தாரமாகச் சொல்லப் பெற்றுள்ளன. பத்துப்பாட்டில் உள்ள பட்டினப்பாலை யென்னும் செய்யுளைப் பாடிய புலவருக்குச் சோழன் கரிகாற் பெருவளத்தான் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தான் என்று தெரிகிறது. சேர ராஜாக்களுடைய பெருமையைத் தெரிவிக்கும் நூலாகிய பதிற்றுப்பத்தில், ஒவ்வோர் பத்துப்பாடலையும் பாடிய புலவர்கள் அரசர்களிடமிருந்து நிதிக்குவியலையும், மான்யங்களையும், அமைச்சராக இருக்கும் கௌரவத்தையும், கிராமங்களையும் பரிசாக அடைந்திருக்கிறார்கள்.

புலவர்களை ஆதரித்தவர்களுள் அதிகமான் நெடுமானஞ்சி யென்பவன் ஓர் சிற்றரசனாயினும், கடையெழுவள்ளல்களுள் ஒருவனாக எண்ணப்படும் புகழைப் பெற்றான். தன்னை உண்போருக்குத் தீர்க்காயுளைக் கொடுக்கும் ஆற்றலுள்ளதோர் நெல்லிக்கனியை அரிய தவஞ்செய்து கிடைக்கப்பெற்று, அதனை யுண்ணுங்காலத்தில், தற்செயலாக ஔவையைக் கண்டான். உடனே அக்கனியை ஔவைக்குக் கொடுத்து உண்பித்தான்.

பிற்காலத்தில், "கபிலன் பெற்ற வூரினும் பலவே" என்று பிறர் கொண்டாடும்படி வேள்பாரி யென்பவன் கபிலர் என்ற புலவருக்கு விசேஷ பரிசிற் கொடுத்துதவினான். இனி, "பொத்தியாண்ட கோப்பெருஞ் சோழன்" என்று தன்னைப் புகழும்படி, கோப்பெருஞ் சோழன் என்பான் பொத்தியார் என்ற புலவரைத் தனக்கு உயிர்த்துணைவராகக் கொண்டிருந்தான். இவ்வாறு அநேகம் அரசர்கள் புலவர்களையே தமது நீங்காத நண்பினராகக் கொண்டிருந்தார்களென்பது வெளிப்படை.

குமணனென்னும் அரசன் மிக்க கொடையாளி. அவனுக்கும் அவன் தம்பியான இளங்குமணன் என்பவனுக்கும் ஒருமுறை விரோதமுண்டாயிற்று. அப்போது இளங்குமணன் நாட்டைப் பற்றிக்கொண்டு தமையனாகிய குமணனைக் காட்டுக்குத் துரத்திவிட்டான். அதன்றியும், அவனைக் கொல்விக்கவும் யத்தனித்தான். இச்செய்தி யொன்றும் அறியாத பெருந்தலைச்சாத்தனார் என்ற புலவர் குமணனைத் தேடிச் சென்று தன் குறைகளைத் தெரிவித்துக்கொண்டார். புலவர்களை யாதரிப்பதையே முக்கிய விரதமாகக்கொண்டிருந்த குமணன் அக்காலத்தில் தானிருந்த நிலைமையை உத்தேசித்து, அச்சமயம் புலவருக்குக் கொடுக்கத்தக்க திரவிய மொன்று மில்லாமையால் தன் தலையைக் கொடுப்பதற்காகத் தன் வாளைக் கொடுத்தான். இவ்வுலகத்தில் புலவர்கள் விஷயத்தில் பரம பிரீதியோடுங் கூடிய வள்ளலாகிய அவனுடைய செய்கையைப் பார்த்துப் பெருந்தலைச் சாத்தனார் அவன் கொடுத்த வாளையெடுத்துக் கொண்டுபோய் இளங்குமணற்குக் காட்டி குமணனுடைய குணங்களைப் புகழ்ந்து அவர்களிருவரையும் சிநேகமாக்கினார். அக்காலத்தில் அவர் கூறிய சொற்கள் எவ்வளவு அழகாகவும் பொருள் நிரம்பியதாகவு மிருக்கின்றனவென்பது கீழே குறித்துள்ள அவர் செய்யுளைப் படித்தால் நன்கு விளங்கும்.

"பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
னாடிழந் ததனினு நனியின் னாதென
வாடந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையி
னாடுமலி யுவகையொடு வருவ
லோடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே."

C. P. வேங்கடராமய்யர், எம். ஏ

# வியாஸ விதானம்
## ESSAY WRITING
## வர்ணனை வியாஸங்கள்
## DESCRIPTIVE ESSAYS

### 6. இயற்கை வஸ்துக்கள்—காவிரி
### Natural things—*The Cauvery*

குறிப்புகள்.— பொதுவிஷயங்கள்-அமைப்பு-உபயோகங்கள்-சிறப்பு-கதைகள்.

ஆறுகள் இவ்வாறு தமது உற்பத்திஸ்தானங்களிலிருந்து சிறுகால்வாய்கள் உருவமாக வெளிவந்து இடையே இவ்விதமாக ஓடி முடிவில் கடலில் இவ்வாறு சேருகின்றன என்பதைநேரிடப் பார்த்தாவது அல்லது படத்தில் பார்த்து அனுமானித்தாவது உணருவதில் எல்லோருக்கும் அதிக விருப்பம். மேலும் எப்படிப்பட்டவர்களுக்கும் ஆறுகள் ஓரமாகக் காணப்படும் காட்சி விநோதங்களை எண்ணும் தோறும் கடவுளது சிருஷ்டியின் விசித்திரம் மனதில் பதிய, அவர்கள் மனம் சற்று நிலைபெற்று ஆச்சரிய பரவசமாகும். ஆறுகள் பொதுவாக மலைகளிலிருந்து புறப்பட்டுக் கடலைச் சென்று அடைகின்றன. அவைகளின் உற்பத்திஸ்தானத்தில் அவைகள் முதல் முதலில் உண்டாகும் அற்புதத்தையும், அவைகளைச் சுற்றியுள்ள காட்சி விசேஷங்களையும், கடலில் ஆறு அலைகளோடு மோதிக்கூடும் அழகையும் உற்று நோக்கில் உலகில் மனிதன் பிறந்து முடிவில் பரம்பொருளோடு கலக்கும் விதத்தை நினைப்பூட்டும். 'கான்யாற்றடைகரை ஊரினி தாங்கினிடே' என்றபடி ஆறுகள் ஓரமாக ஏற்பட்டு திவ்ய தேசங்களையும் அவைகளின் சிறப்பையும் நாம் கவனிக்கவேண்டியது. இது பற்றியே தீர்த்த யாத்திரை செய்வது மனதைப் பரிசுத்தப் படுத்தும் என்று பெரியோர் கூறுவர். பெரியோர் எடுத்துக் கூறும் நதிகளுள் காவிரி என்ற புண்ய நதியைப் பற்றி முற்கூறிய விஷயமாகச் சற்று விவரிப்போம்.

மைஸூர் ராஜ்யத்தின் தென் மேற்கே குடகு என்ற ஒரு சிறு மலைநாடு இருக்கிறது. அதில் பிரஹ்மகிரி என்ற மலையே மிக உயர்ந்தது. இதன் சாரலில் தலைக்காவிரி என்ற இடத்திலிருந்து இந்த நதி சிறுகால்வாய் ரூபமாகக் கிளம்பி ஓர் கல்தொட்டியில் விழுந்துப் பின்னர் ஓர் குளத்துள் ஓடுகின்றது. இந்தத் தொட்டிக்கு அருகே கோயில் ஒன்று உண்டு. இக்குளத்திலிருந்தே காவிரி முதலில் நதியாகத் தொடங்குகிறது. இக்குளத்துள் எப்பொழுதும் 3 அடி தண்ணீர் தங்கி நிற்கும். இங்கிருந்து இந்நதி 30-மைல் தூரம் அடர்ந்த காட்டுள் ஓடி அநேக கிளை நதிகளால் முடிவில் ஒரு சிறு நதியாகி மைஸூர் பீட பூமியில் பிரவேசிக்கின்றது. இது ஸ்ரீரங்கப்பட்டணம் வருவதற்குள் பெரிய அகன்ற நதியாகி அதிக வேகமாக ஓடத் தொடங்கி விடுகின்றது. இங்கிருந்து ஸமபூமியில் சிற்சில ஊர்கள் அருகாக ஸுமார் 40-மைல் ஓடி மைஸூர் பீடபூமியின் ஓரம் வந்து இரண்டு கிளையாகப் பிரிந்து சிவஸமுத்ரம் என்ற தீவைச் சுற்றிப் வருகின்றது. ஸுமார் பிரிவிலிருந்து 1-மைல் தூரத்தில் இரண்டு கிளைகளிலும் அருவிகள் இருக்கின்றன; இவைகளுள் வடவண்டை அருவியே மிகப் பெரியது. இங்குதான் காவிரி நதி மைஸூர்பீடபூமியிலிருந்து கர்னாடக ஸமபூமிக்கு இறங்குகிறது. இதன் பின்னர் 50-மைல் தூரம் வரையில் இந்த நதி வளைந்து வளைந்து கிழக்கு நோக்கியே செடிகள் நிறைந்த காடுகள் வழியாக ஓடுகின்றது. இங்கு இது ஸுமார் 300-அடி ஆழத்தில் ஓடுவதால் அந்தர்வாஹினிக்கு நிகர் என்றும் கூறலாம். இதன் முடிவில் காவிரியின் தென்புறம் காடுகள் குறைய சிறு சிறு ஒற்றையடிப்பாதைகள் காணப்படுகின்றன. இவ்விடமிருந்து ஸுமார் 20-மைல் தூரம் போனபிறகு காவிரிபுரம் வந்துசேர காவிரி தெற்கே திரும்பி மரம்

அடர்ந்த காட்டின் வழியாக ஓடத் தொடங்குகின்றது. இவ்வாறு பவானி என்ற பட்டணம் வரையில் வர அங்கு நீலகிரி மலையில் உற்பவித்து வரும் பவானி என்ற உபநதியோடு சேருகிறது. பின்னர் கருவூருக்கு அருகாமையில் ஆனமலையில் உண்டாகும் அமராவதி என்ற ஓர் உபநதி வந்து சேர காவிரி சற்றேறக்குறைய 1-மைல் அகலம் உடையதாகின்றது. இங்கிருந்து 30-மைல் தூரத்திற்கு அப்பால் காவிரி இரண்டுகிளையாகப்பிரிந்து 12-மைல் தூரத்திற் கப்பால் மறுபடியும் சேர்ந்து பின்னர் இரண்டுகிளையாகப் பிரிகின்றது. வடகிளைக்குக் கொள்ளிடம் என்றும் தென்கிளைக்குக் காவிரி என்றும் பெயர். இங்குள்ள தீவே ஸ்ரீரங்கம் என்னப்படும். வடகிளை ஸுமார் 60-மைல் கிழக்கே ஓடி திவ்ய க்ஷேத்திரமாகிய சிதம்பரத் தருகாமையில் பாய்ந்து ஸமுத்திரத்தில் கலக்கின்றது. தென்கிளையோ அநேகக் கிளைகளாகப் பிரிந்து தஞ்சாவூர் ஜில்லா முழுவதையும் கடந்து போகப்போகக் குறுகிவிடுகின்றது. இதில் முக்கிய நதியாகிய காவிரி என்பது சிறுவாய்க்காலாகி மாயூரத்திற்குக் கிழக்கிலிருக்கும் பட்டினத்தடிகள் இருந்த ஊராகிய காவிப்ரிபூம்பட்டினத்தருகில் ஸமுத்திரத்துடன் சேர முயல்கின்றது.

இந்தக் காவிரி நதியைப்போல் சாகுபடி முதலியவைகளுக்கு முற்றிலும் உபயோகப்படும் நதி உலகில் இல்லை என்றே கூறலாம். உலகத்திலுள்ள நதிகள் எல்லாம் வர வர அகன்று ஸமுத்திரத்தில் சென்று விழுங்கால் மிக அகன்றனவாக இருக்கும். காவிரியோ அவ்வாறல்ல. கடலை அணுக அணுகக் குறுகி, முடிவில் வருஷத்தில் அநேககாலம் கடலோடு சேராமலே நின்று விடுகின்றது. ஒவ்வொரு வருஷத்திலும் ஆடிமாதம் இந்நதி பெருகி ஸுமார்வருஷத்தில் எட்டு அல்லது ஒன்பதுமாதம் தண்ணீர் நிரம்பி இருக்கும். இவ்வாறிருப்பதால் தான் இந்நதியால் திரிச்சிராப்பள்ளி தஞ்சாவூர் ஜில்லாக்களும் முக்கியமாக செழிக்கின்றன. தஞ்சாவூர் ஜில்லாவின் உபயோகத்திற்காகவே ஸ்ரீரங்கத்தீவின் மேற்புறத்திலும், கீழ்ப் புறத்திலும் இரண்டு பெரிய அணைகள் கட்டப்பட்டுக் காவிரியில் வரும் ஜலம் கொள்ளிடத்தின் வழியே போய் வீணுகக் கடலில் கலவாத வண்ணம் தடுக்கப்பட்டிருக்கிறது. கீழ்ப்புறத்து அணை ஹிந்து ராஜாக்களாலும், மேற்புறத்து அணை நமது ஆங்கில துரைத்தனத்தாராலும் கட்டப்பட்டன. மேலும் சிவஸமுத்திரத் தீவண்டை இருக்கும் நீர் வீழ்ச்சியிலிருந்து ஓர் மின்சார யந்திரம் தொழிற்படுத்தப்பட்டு ஸுமார் 100-மைலுக்கு மேற்பட்டுள்ள மைஸூர், கோலார் பொன்சுரங்கம் முதலிய விடங்களில் விளக்கிட உபயோகமாகின்றது.

இந்நதியின் சிறப்பைக் கம்பர் முதலிய கவிகள் கங்கைக்கு மேற்பட்டதென்று மெச்சிக் கொண்டாடி யிருக்கின்றனர். இத்தீரவாஸிகளுக்குப் பொதுவாகப் புத்திநுட்பம் அதிகம் உண்டு. மேலும் இந்நதி ஸ்ரீரங்கப்பட்டணம், சிவஸமுத்திரம், திரிசிரபுரம், ஸ்ரீரங்கம், சிதம்பரம் முதலிய திவ்யஸ்தலங்கள் அருகாமையில் ஓடுகின்றது. இதன் உபயோகம் இதன் சிறப்பை அதிகப்படுத்துகின்றது.

இந்நதியின் சிறப்பைப்பற்றிய புராணகதைகள் அநேகம். தென்திசை நோக்கி வந்த பரமசிவத்திற்கு நிகரான அகஸ்தியர் கமண்டலம் குடகுமலைக்கு அருகாமையில் கவிழ அந்த நீரே இந்நதியாகப் பெருகியது என்று புராணங்கள் கூறும். மேலும் ஐப்பசிமாஸம் முதல்தேதி முதல் அம்மாதக் கடைசிவரையில் தலைக்காவிரியிலிருந்து யாத்திரை புறப்பட்டுக்காவிரிப்பூம்பட்டினம் வரையில் சென்று திவ்ய ஸ்தலங்களில் ஸ்நாநம் செய்து தகுந்த தானம் முதலியவைகள் கொடுத்தால் மிகுந்த பரிசுத்த நிலை ஒருவனுக்கு உண்டாகும் என்று காவிரிப் புராணங் கூறும். இப்புராணத்தில் காவிரிநதி ஓரமாக இருக்கும் ஸ்தலங்களின் சிறப்பு வெகுவாக எடுத்து விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது.

இதனால் இக்காவிரிநதி எல்லாவிதத்திலும் மிகுந்த மேன்மை உடையது என்பதற்கு என்ன சந்தேகம்?

# லியோ டால்ஸ்டாய்ப்ரபு

## COUNT LEO TOLSTOY

"அறிவுடையார் எல்லா முடையா ரறிவிலா, ரென்னுடைய ரேனு மிலர்."—திருக்குறள்



1910-ம் வருஷம் நவம்பர் மாதம் இருபதாம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை ஆறுமணிக்கு லியோ டால்ஸ்டாய்ப்ரபு என்னும் பெருமை வாய்ந்த மஹானாகிய ருஷிய தேசத்துக் கீர்த்திமான் இறந்துபோனதைப் பற்றி உலகத்தாரெல்லாரும் பெருந் துக்க ஸாகரத்தில் மூழ்கினார்கள் என்பதை நாம் சொல்லவேண்டுவதில்லை. இந்த மஹானுடைய சரித்திரத்தைக் கீழே எழுதுகிறோம்.

### டால்ஸ்டாயின் பிறப்பு வளர்ப்பு

லியோ டால்ஸ்டாய்ப்ரபு ருஷிய தேசத்தில் மாஸ்கோ நகரத்துக்கு 130-மைல் தெற்கேயுள்ள ஒரு சிறுகிராமத்தில் 1828-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 28-ம் தேதி பிறந்தார். ஜனநெருக்கமான பெரிய பட்டினங்களில் இயற்கைக்கு மாறாகவசித்துப் பிணியையும் தேக அஸௌக்கியத்தையும் தேடிக்கொள்ளுவதை விட ஜன அடர்த்தியில்லாத கிராமங்களில் இயற்கைக்கு ஒட்டி ஜீவிப்பது பலமடங்கு மேலானதென நினைத்து, இவர் கிராமங்களில் வசித்து வந்தார். இவர் மூன்று வயதுக் குழந்தையாயிருந்த பொழுதே இவருடைய தாயார் இறந்துவிட்டனர். இவருடைய ஒன்பதாம் வயதில் இவர் தகப்பனார் காலஞ்சென்றனர். முதலில் இவர் மாஸ்கோ பட்டினத்திலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் கல்விகற்கச்சேர்ந்தார். அதன் பிறகு காஜான் (Kazan) யூனிவர்ஸிடியில் படித்துப் பரீட்சைக்குச் சென்றார். ஆனால் பரீட்சையில் தேர்ச்சியடையவில்லை. இவர் அதிபாலியமாயிருந்த போதிலும், இவருடைய மனோ பாவனையும், நுட்ப ஆராய்ச்சியும், இயற்கை அறிவும் நன்றாய் முதிர்ந்திருந்த படியால் கேவலம் உபாத்தியாயர்கள் சொல்லுவதைப் பாராயணம் பண்ணி ஒப்புவிக்க இவருக்கு விருப்பமில்லை. பள்ளிக்கூடத்துப் பாடங்களில் வெறுப்பும் ஆயாசமும் கொண்டவராய் அவைகளை அலட்சியம் செய்துவந்தார்.

### சைன்யத்தில் சேர்ந்தது

டால்ஸ்டாய் தம்முடைய இருபதாவது வயதில் சைன்யத்தில் சேர்ந்து போர்த்தொழில் கற்க ஆரம்பித்தார். 1854-ம் வருஷத்தில்

க்ரிமியன் சண்டை நடந்தபோது தாம் மேற்படி யுத்தத்துக்குப் போவதாக மனுச்செய்தார். இவரை உடனே ஐரோப்பியன் துருக்கியின் எல்லைப்புறத்திலிருந்த ஒரு சைன்யத்தில் சேரச் சொன்னார்கள். அதன் பிறகு ஸிபாஸ்டபூல் முற்றுகையின் போது இவரை ஒரு பீரங்கிப்படையில் வேலை பார்க்கச் சொன்னார்கள். அதன்பிறகு இவருடைய உறவினராகிய ஒருவர் ருஷிய சைன்யங்களுக்குத் தலைவரா யிருந்தபடியால் அவரிடம் வேலைக்கு அமர்ந்தார். இங்கே தான் டால்ஸ்டாய் யுத்தப் பயிற்சியைப் பூரணமாய்க் கற்றுக்கொண்டார். யுத்த சம்பந்தமா யுள்ள அநேக ரஹஸ்யமான விஷயங்களையும் அறிந்துகொண்டார்.

### ராணுவத்தொழிலைவிட்டு நீங்கியது

அரசர்களும், மந்திரிகளும், பிரபுக்களும், ஸுகமாக ஊரிலிருந்துகொண்டு, கூலிக்காரர்களையும் குடியானவர்களையும் யுத்தத்துக்கு அனுப்புவதையும், அந்த ஏழை ஜனங்கள் ஒருவரோடொருவர் அடித்துக்கொண்டும் வெட்டிக்கொண்டும் உயிர் துறப்பதையும், யுத்தகளத்தில் ரத்தம் ஆறுய்ப்பெருகி ஓடுவதையும், கடைசியில் ஸுகப்படுகிறவர்கள் பிரபுக்களும் தனவான்களுமே தவிர ஏழை எளியவர்கள் அல்ல வென்பதையும், ஏழைகள் எப்போதும்போல் வரிப்பளுவினாலும் ஆஹாரக்குறைவினாலும் துன்பப்படுவதையும் டால்ஸ்டாய் அறிந்து உடனே தம்முடைய ராணுவத் தொழிலை விட்டு நீங்கினார். எக்காரணம் பற்றியும் யுத்தமே கூடாது என்று கருதினார். போர்த்தொழிலை அடியோடு வெறுத்தார். யுத்தத்தினால் நேரிடும் உயிர்ச் சேதங்களைக் கண்டதும் இவருக்குக் "கொலைகூடாது" என்னும் ஜீவகாருண்ய உணர்ச்சி உண்டாயிற்று.

### நூல்கள் எழுத ஆரம்பித்தது

டால்ஸ்டாய் தம்முடைய இருபத்து மூன்றாம் வயதில் பத்திரிகைகளுக்கு விஷயங்கள் எழுதவும், சிறு விஷயங்களைச் சிறு புஸ்தகங்களாய் அச்சிட்டு வெளிப்படுத்தவும் ஆரம்பித்தார். அப்படி அவர் எழுத ஆரம்பித்தபோதே கல்வியில் மிகவும் பாண்டித்ய முடைய நிபுணரென்று பலரும் அறிந்து கொண்டார்கள். ஆகவே இவருக்குப் புகழும், கீர்த்தியும், செல்வமும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வந்தன. தமக்கு வரும் புகழையும் கீர்த்தியையும் கண்டு ஆரம்பத்தில் இவர் சந்தோஷப்பட்ட போதிலும் நாளடைவில் இவைகளை எல்லாம் வெறுக்கத் தலைப்பட்டார். ஆனாலும் நூல்கள் எழுதுவதையும் பிரசங்கம் செய்வதையும் இவர் நிறுத்தவில்லை. இந்த வேலைகளில் இவருக்கு இயல்பாகவே வெறுப்பு உண்டான போதிலும் ஜனசமூஹத்தைத் திருத்தவேண்டும்; ஏழைகளுடைய அறிவை விருத்திசெய்ய வேண்டும் என்னும் பரோபகாரச் சிந்தையானது இவ்வேலைகளைச் செய்யும்படி இவரைத் தூண்டிக்கொண்டே இருந்தது. ஆகவே இவர் தமது கடமையை வெறுக்காமல் செய்து வந்தார்.

### விவாஹமும் மக்கட்பேறும்

1862-ம் வருஷத்தில் டால்ஸ்டாய், நல்லொழுக்கமும், கல்வியறிவும், சத்குணமும் நிறைந்த ஒரு சீமாட்டியை மணம் புரிந்துகொண்டார். டால்ஸ்டாயினுடைய நோக்கங்களும் கொள்கைகளும் அவருடைய மனைவியாரின் நோக்கங்களோடும், கொள்கைகளோடும் ஒவ்வாமல் மாறுபட்டிருந்தும் தம்பதிகள் இருவரும் அந்த மாறுபாடு காரணமாக மனஸ்தாபப்படுவதாவது சண்டைபோடுவதாவது இல்லை. இவர்களிருவருக்குள்ளும் அபிப்பிராய பேதங்கள் அடிக்கடி உண்டானபோதிலும் புருஷனும் மனைவியும் இரண்டுடல் ஒருயிர்போல இருந்து அன்பு பாராட்டி வந்தது மிகவும் புகழத் தக்கது. அழுக்கு வஸ்திரங்களைக் கட்டிக்கொண்டு திரியும் ஸாமான்ய ஏழைகளோடு சேர்ந்துகொண்டு இவர் அடிக்

கடித் திரிவதும், தாம் எழுதுகிற புஸ்தகங்களைப் பிரசுரகர்த்தர்களுக்கு இனமாகக் கொடுப்பதும், அவர்கள் பணம் கொடுத்தால் இவர் வாங்க மறுப்பதும், தம்முடைய செல்வங்களை ஏழை எளியவர்களுக்கு அளவின்றி விநியோகிப்பதும், இன்னும் இவைபோன்ற பல செய்கைகளும் டால்ஸ்டாய்பெருமாட்டிக்குக்கொஞ்சமும் பிடிப்பதில்லை. அதனால் அவர் தமது கணவனை அடிக்கடி நொந்து கொள்ளுவதுண்டு. ஆனாலும் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த காதல் மட்டும் குறைந்ததில்லை. டால்ஸ்டாயிக்குப் பதினாறு மக்கள் பிறந்தார்கள். அவர்களுள் ஐவர் சிறு வயதிலேயே இறந்துவிட்டனர்.

"சண்டையும் ஸமாதானமும்" "அன்னா கரீனா" என்னும் இரண்டு பெரிய நவீனங்களை இவர் விவாஹமானபின் எழுதினர். இந்த நவீனங்களுக்கு இவருடைய மனைவியார் ஏழுமுறை 'நகல்' எழுதியிருக்கிறார். டால்ஸ்டாய் தாம் எழுதுகிற விஷயத்தில் திருப்தியடைகிறதில்லை. ஆகவே ஒரு விஷயத்தை எழுதுவதும் அதைத் திருத்துவதும் அதற்கு ஒரு சுத்தப் பிரதி எழுதும்படி தமது மனைவியைக் கட்டளையிடுவதும் பழையபடி அதைத் திருத்துவதும் அதற்கு ஒரு பிரதி எழுதும்படிச் செய்வதுமாக ஏழெட்டு முறை செய்வார். தம்முடைய மனைவியார் எழுதும் விஷயங்களைக் கண்டு புகழ்ந்து மேலும் மேலும் இவர் ஊக்கப்படுத்தி வருவார். விவாஹமாகிப் பதினைந்து வருஷம் வரையில் இவர் இல்லற தருமத்தைச் செவ்வையாக நடத்தி வந்தார். குடும்ப வாழ்க்கையில் பிரவேசித்தபிறகு இவர் முன்பு கொண்டிருந்த அபிப்பிராயங்கள் மாறத் தலைப்பட்டன. குடும்பவாழ்க்கை சிலாக்கியமல்லவென்று இவருக்குத் தோன்றிற்று. ஆகவே குடும்பப் பற்றுதலைச் சிறிது சிறிதாக நீக்கி வந்தார்.

## நமது வாழ்க்கையின் கருத்தென்ன?

"நம்முடைய ஜீவியத்தின் கருத்தென்ன?" என்னும் இந்தப்பெரிய எண்ணம் அவருடைய மனதில் இடைவிடாது தோன்றிக்கொண்டிருந்தது. மனிதர்கள் இந்த உலகத்தில் பிறப்பானேன்? சிறிது காலமிருந்து இறப்பானேன்? சிலர் செல்வமிக்கவர்களாயிருக்கக் காரணமென்ன? வேறு சிலர் தரித்திரத்தால் வருந்தக் காரணமென்ன? வாழ்க்கையின் முடிவென்ன? இவைபோன்ற கேள்விகளைக் கேட்பதிலும் ஆராய்ச்சி செய்வதிலும் இவருடைய மனம் பிரவேசித்து விட்டது. தத்துவ நூல்களைப் படிக்கவும் தத்துவங்களை அறியவும் ஆவல் கொண்டார்.

"நானார்? என்னுள்ளமார்? ஞானங்களார்? [என்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை யாண்டிலனேல்! மதி [மயங்கி
ஊனார் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ"

என்று எம்பெருமான் ஸ்ரீமாணிக்கவாசக ஸ்வாமிகள், தாம் இன்னாரென்றும், தம்முடைய உள்ளம் இன்னதென்றும், ஞானம் இன்னதென்றும் அறியப் புகுந்ததுபோல் லியோ டால்ஸ்டாய் பிரபுவும் ஆத்மாவைப்பற்றி ஆராய்ச்சி செய்யப் புகுந்தார்.

"'பொருள் தேடுவதுதானா வாழ்க்கையின் நோக்கம்?'' என்று முதலில் ஆலோசனை செய்ய ஆரம்பித்தார். ஏற்கெனவே இவர் பெரிய தனவந்தராயிருந்தார். இவர் எழுதுகிற புஸ்தகங்களுக்குப் பெருந்திரளான பணம் வலியவந்து குவிந்து கொண்டே இருந்தது. ஸமாரா கவர்ன்மெண்டார் இவருக்கு 20,000 ஏக்கர் நிலங்களை இனமாகக் கொடுத்தார்கள். அப்படியிருந்தும் இவருக்குத் திருப்தியாவது ஸமாதானமாவது உண்டாக வில்லை. "இப்போது எனக்கு இருக்கும் செல்வத்தைப்போல் நூறுமடங்கு செல்வம் அதிகமாகக் கிடைத்த போதிலும் அந்தச் செல்வம் என்னைத் திருப்தி படுத்துமா? அப்படியே நான் அச்செல்வத்தால் திருப்தி யடைந்துவிட்டபோதிலும் எனக்கு மரணம் நேரிடாதா? அப்போது இச்செல்வங்களைவிட்டு நான் பிரியவேண்டியவன் தானே! செல்வம் எவ்வளவுக்கு எவ்வளவு என்னைத் திருப்தி படுத்துகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு மரணம் எனக்குப் பயங்கரமாக வன்றோ தோன்றும்? எப்படி யிருந்தபோதிலும் ஒருநாள் நான் இறக்கவேண்டியவன் தானே?' என்று டால்ஸ்டாய் தன்னைத் தானே கேட்டுக்கொள்

ளுவார். இவைகளைப்பற்றி ஆழ்ந்து சிந்திப்பார். கடைசியில் ஸரியான பதில் கிடைக்காமல் பொருள் தேடுவது மனிதனுடைய வாழ்க்கையின் நோக்கமல்லவென்று தெளிந்தார்.

"மனைவிமக்களோடு ஸுகமாய் வாழ்வது தானா வாழ்க்கையின் நோக்கம்?" என்று இரண்டாவதாகச் சிந்திக்கலானார். அநேகர் தங்கள் புத்திரர்களுடைய முகத்தைப் பார்த்துச் சந்தோஷமடைவதையும், சிறிதுகாலத்திற்குப் பிறகு புத்திரன் இறந்து போனால் பெற்றோர் துக்கப்படுவதையும், பெற்றோர் இறந்தால் புத்திரன் துக்கப்படுவதையும் மனைவியினால் புருஷன்படுங் கஷ்டத்தையும், புருஷனால் மனைவி படுந் துன்பத்தையும், இன்னும் குடும்பங்களில் உண்டாகும் வியாதி, கஷ்டம் முதலியவைகளையும் கண்டபின்பு இந்த இடத்திலும் மரணம் வந்து நுழைகிறபடியால் குடும்ப ஸுகந்தான் வாழ்க்கையின் நோக்கம் என்று சொல்லுவதற்கு இடமில்லை என்று முடிவு செய்தார். "புகழுங்கீர்த்தியும் அடைவது வாழ்க்கையின் நோக்கமாயிருக்குமா?" என்று மூன்றாவதாக ஆலோசனை செய்தார். மண்ணுடம்பு அழிந்த போதிலும் புகழுடம்பு அழியாது என்பது வாஸ்தவமேயாயினும் டால்ஸ்டாய்க்கு அது சரியான ஸமாதானமாகப்படவில்லை. "நான் சிறந்த கல்விமானென்றும், நன்றாய் எழுதக் கூடியவனென்றும் பெயர் பெற்றிருப்பது வாஸ்தவமென்றே வைத்துக் கொள்ளுகிறேன். இத்தப்புகழை மரணம் அழிக்காது. ஆனாலும் நாளடைவில் புகழும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகக்கூடியதுதானே! பாஷைகள் மாறும்போது புகழ் மறையக் கேட்பானேன்? புகழ் சாஸ்வதமானது என்று வைத்துக் கொண்டாலும் அப்புகழை அனுபவித்து ஆனந்திக்க வேண்டியவன் நீங்கிப் போனபிறகு அப்புகழ் இருந்தென்ன? அழிந்தென்ன? எல்லாம் ஒன்றே!" என்று தானே யோசனை செய்து பார்த்துப் புகழ் பெறுவதும் மனித வாழ்க்கையின் நோக்கமல்லவென்று முடிவு செய்தார். இந்தக் கேள்விக்குப் பதில் ஸரியானபடி கிடைக்காவிட்டால் தற்கொலை புரிந்துகொள்வதாகத் தீர்மானித்தார். விஞ்ஞான சாஸ்திரிகளையும், மதாச்சார்யர்களையும் இந்தக் கேள்வியைக் குறித்துக் கேட்டார். ஒருவராவது ஸரியான பதில் சொல்லுவதாய்க் காணப்படவில்லை. கடைசியில் கிராமங்களிலுள்ள குடியானவர்களும் ஏழைகளும் ஸந்தோஷமாய் இருக்கக் காரணமென்ன என்று ஆலோசித்து ஒரு குடியானவனை இதைப்பற்றிக் கேட்டார். அவன் "ஐயா! நாங்கள் ஸுகம் துக்கம் எல்லாவற்றையும் கடவுளிடம் விடுத்து ஒரு பற்றுமின்றி இருக்கிறோம்" என்று பதில் சொன்னான். வாழ்க்கையின் நோக்கம் "தன்னையறிந்து பின் தன் தலைவனை யறிதல்" என்னும் உண்மை இதனால் டால்ஸ்டாய்க்குப் புலப்பட்டது. அதுமுதல் மனஸ்ஸமாதானத்துடன் எல்லா மத நூல்களையும் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார். கிறிஸ்துமதத்துக்குரிய பைபில் நூலை ஊன்றிப் படித்து அநேக உண்மைகளைக் கண்டுபிடித்தார். "மலைப்பிரஸங்கத்தில்" இயேஸுகிறிஸ்து சொல்லியபடியே ஒருவன் நடக்கவேண்டியது இந்த உலகத்தில் ஒருவன் வாழ்வதின் முக்கியமான நோக்கமென்றும், வாழ்க்கையின் தாத்பரியம் அப்படி நடப்பது தான் என்றும் தெளிந்தார்.

இயற்றி வெளியிட்ட

முக்கியமான நூல்கள்.

(1) என்னுடைய உறுதிமொழி (2) நான்கு ஸுவிசேஷங்கள் (3) என்னுடைய மதம் (4) ஸுவிசேஷச் சுருக்கம் (5) நாம் இனி என் செய்யவேண்டும்? (6) ஜீவியம் (7) கடவுளுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளேயே இருக்கிறது (8) கிறிஸ்துவின் போதனை (9) வித்தை என்பதென்ன? (10) மதம் என்றால் என்ன? அதனுடைய சத்து என்ன? என்னும் நூல்களே இவரால் எழுதப்பட்ட முக்கிய நூல்களாகும். ரெஸரக்ஷன், தெய்வீகமும் மானுஷீகமும், ருஷியப்புரட்சி, சண்டையும் சமாதானமும், ஸிவாஸ்டபூல், ஒரு பெரிய விசாரணை, அவசியமான ஒரு விஷயம், என்னும் பெயர்களையுடைய கதைகளையும், வேறுபல உபயோகமுள்ள சிறு புஸ்தகங்களையும் எழுதியிருக்கிறார். ராஜ்யஸம்பந்தமாய் அநேக நூல்கள் இயற்றியிருக்கிறார். இவர் இயற்றிய நூல்

OFFICE OF ... REGISTERED 21 FEB 1911 MADRAS.

களுக்குள் "கலை யென்பதி யாது?" (What is Art) என்னும் நூலே மிகவும் சிறந்தது, இதை அநேக பாஷைகளில் மொழிபெயர்த்து உலகத்தோர் படித்து வருகிறார்கள். இவருடைய நூல்களில் அநேகம் ஆங்கில பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. வேறு சில நூல்கள் மொழிபெயர்க்கப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. நம்முடைய இந்தியா விஷயத்தில் இவருக்கு மிகுந்த அநுதாபம் உண்டு. "இந்தியாவுக்கு என்னுடைய செய்தி" என்று ஒரு நூல் எழுதியிருக்கிறார்.

## நற்போதனைகள்

கிறிஸ்துவின் "மலை ப்ரஸங்க"த்திலிருந்து இவர் திரட்டியெடுத்த ஸாராம்சங்கள் ஐந்து. அவையாவன:—(1) கோபங்கொள்ளாதே (2) காமுகனாயிராதே (3) ஸத்யம் செய்யாதே (4) கெடுதல் செய்கிறவனுக்கு நீயும் பதிலுக்குக் கெடுதல் செய்யாதே (5) நியாயக்காரர், அநியாயக்காரர் இருவருக்கும் நீ நன்மையையே செய். இந்த ஐந்து விஷயங்களையே இவர் உலகத்தாருக்குப் போதித்து வந்தார். கடவுள் அன்பே திருவுருவமாகக் கொண்டவராதலால் அவரை அறிவதற்கும் அவரை அடைவதற்கும் மனித சமூஹத்திடம் ஒவ்வொருவரும் அன்பாய் நடக்கவேண்டுமென்பதும், எக்காரணத்தை முன்னிட்டும் பகைமை கூடாதென்பதும், மனிதர்களை அடிமை கொள்ளுவது கூடாதென்பதும், அடிமைத்தனத்திலிருந்து துன்பப்படுகிறவர்களை அத்துன்பத்திலிருந்து நீக்கவேண்டுமென்பதும், ஸ்வாபிமானத்தைவிடத் தேசாபிமானமும், தேசாபிமானத்தைவிட உலகத்திலுள்ள எல்லா ஜனங்களிடமும் அன்பொழுகும் லோகாபிமானமும் சிறந்ததென்பதும், ஈஸ்வரனிடத்தில் உண்மைப் பக்தி செலுத்தவேண்டியது அவச்யமென்பதுமே இவருடைய கடைசிப் போதனைகளாகும்.

## குணாதிசயங்கள்

இனி டால்ஸ்டாயினுடைய குணாதிசயங்களை அறிவதற்கு அவரால் எழுதப்பட்ட நூல்களை நாம் ஊன்றிப் படித்தல் வேண்டும். டால்ஸ்டாய் தம்முடைய மனப் போக்கின்படி ஒரு விஷயத்தை ஆராய்ச்சி செய்து உண்மை அறியும் இயல்புடையவர். பிறருடைய போதனையை இலகுவில் நம்பமாட்டார். இவர் ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து முதலான தேசங்களைச் சுற்றிப்பார்க்கச் சென்றிருந்தபோது அத்தேசங்களில் மாணாக்கர்களுக்குக் கொடுக்கப்பட்டுவரும் கல்வி முறையில் திருப்தி யடையாதவராய் "காப்பிக் கொட்டை, கடலை, மொச்சைபோன்ற பலவகைப்பட்ட தானியங்களை ஒரே யந்த்ரத்தில் போட்டு அரைப்பதுபோல பலவகைப்பட்ட மனோபாவமும், நானாவகையான அறிவும் உடைய மாணாக்கர் எல்லோருக்கும் ஒரேவிதமான கல்வியைக் கட்டாயத்தினால் போதிக்கிறார்களே! இப்படிப்பட்ட கல்வி போதனை மாணாக்கர்களின் நன்மைக்காக ஏற்பட்டதல்ல; உபாத்தியாயர்களின் வேலை ஸுலபமாகும்படி ஏற்பட்டது!" என்று பரிதபித்திருக்கிறார். டால்ஸ்டாய் பால்ய தசையில் சிறிது துர்நடத்தையுள்ளவரா யிருந்தார் என்று அவரெழுதியிருப்பதைக் கொண்டே நாம் அறியலாம். "என்னுடைய பால்யதசையை நினைக்கும்போது எனக்கு அச்சமும், வெறுப்பும், மனவருத்தமும் உண்டாகிறது. மனிதர்களை யுத்தத்தில் கொன்றேன்; சூதாடிப்பல பொருள்களை இழந்தேன்; குடியானவர்களிட்ட பயிரை அநியாயமாய்க் கொள்ளை கொண்டேன்; ஜனங்களை வஞ்சித்தேன்; பொய் புகன்றேன்; கள்ளுண்டு களித்தேன்; வ்யபிசாரம் செய்தேன். அப்படி யிருந்தும் ஜனங்கள் என்னை ஒழுக்கத்தில் சிறந்தவனென்று மதித்தார்கள்!" என்று இவர் "என்னுடைய உறுதிமொழி" என்னும் நூலில் எழுதியிருக்கிறார். தம்முடைய ஜீவியத்தில் வெறுப்பும், வாழ்க்கையில் அத்ருப்தியும் கொண்டு இவர் தம்மைத் தாமே பகைத்து எழுதியிருப்பதால் இவர் சொல்லுவதைக் கொண்டே ஒழுக்கமற்றவர் என்று நாம் முடிவு செய்வது பிழையாகும். இக்காலத்தில் மனிதர்

கள் தங்களிடம் உள்ள குற்றங் குறைகளை மறைத்து வருவது இயல்பாயிருக்க, இவர் தம்முடைய குற்றங் குறைகளைப் பஹிரங்கமாய் நூலில் எழுதி வெளியிட்டதே இவருடைய உண்மை நிலைமையும், மனோதிடமும், இப்படிப்பட்டவை என்பதை விளக்கும். "நாம் எவ்வளவு ஐச்வரியத்தைச் சேர்க்கக்கூடும் என்பதைப்பற்றி யோசிக்கக்கூடாது. பிறருக்கு எவ்வளவு ஐச்வரியத்தைக் கொடுக்கக் கூடும் என்பதைப்பற்றித்தான் யோசிக்க வேண்டும்" என்பது டால்ஸ்டாயின் முக்கிய போதனைகளுள் ஒன்றாகும். இந்தப்போதனையின்படி இவர் நடந்து வந்தார். ஸம்பாதிக்கும் பொருளில் முக்காற்பங்குக்குமேல் தான தருமங்களில் இவர் செலவு செய்து விடுவார். டால்ஸ்டாய் மாமிச போஜனத்தை அடியோடு நீக்கி மரக்கறி போஜனம் செய்து வந்தார். மாமிச போஜனத்தைவிட மரக்கறி போஜனம் உடம்புக்கு நல்லது என்று நினைத்து இவர் இப்படிச் செய்தார் என்று சிலர் சொல்லுவார்கள். ஆனால் உண்மை யதுவல்ல.

"அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்னும் திருவள்ளுவர் வாக்கிற் கிணங்க "ஜீவஹிம்சை" கூடாது என்னும் ஜீவகாருண்ய உணர்ச்சியே டால்ஸ்டாயை மரக்கறி போஜனம் செய்யும்படிச் செய்தது. சுருட்டு பிடிப்பதையும், மதுபானஞ் செய்வதையும் இவர் விட்டுவிட்டார். நரம்புக் கிளர்ச்சியை உண்டாக்கும் ஆஹாரத்தையாவது, பானத்தையாவது இவர் உட்கொள்ளாமல் ஸத்துவகுணத்தைக் கொடுப்பவைகளைச் சாப்பிட்டு வந்தார். தம்முடைய வீட்டில் விளக்கு ஏற்றுவது, தண்ணீர் எடுப்பது, பெருக்குவது முதலிய வேலையை இவர் தமது கையினாலேயே செய்து வருவது வழக்கம். ஏழைகள் வருந்த மனம் சஹியாதவர். உலகத்தாரால் கொண்டாடப்படும் ஷேக்ஸ்பியரிடத்தில் இவருக்கு நல்ல அபிப்பிராயங் கிடையாது. "ஷேக்ஸ்பியர் மிகுந்த ஸாமர்த்திய முடையவரேயாயினும், வாழ்க்கையின் தாத்பரியமென்ன? என்னும் கேள்விக்கு அவருடைய நூலில் சரியான பதில் இல்லை" என்று ஒரு இடத்தில் இவர் எழுதியிருக்கிறார். இதனால் என்ன தெரிகிறதென்றால் இவர் தம்முடைய மனஸ்ஸாட்சியையே பெரிய துணையாகக்கொண்டு நடப்பவரென்றும், பிறர் சொல்லுவதெல்லாம் உண்மையென்று ஸரியான காரணமின்றி நம்பாதவரென்றும், உள்ளதை உள்ளபடி வெளியிடும் தீரரென்றும் தெரிகிறது. பெரிய கல்விமானாயும், சிறந்த ஒழுக்கமுடையவராயும், தேர்ந்த ராஜதந்த்ர நிபுணராயும், ஜனசமூஹத்தலைவராயும் உண்மையான மதாச்சாரியராயும் விளங்கிய டால்ஸ்டாய் ப்ரபு தம்முடைய 82-வது வயதில் உயிர் துறந்த போதிலும் இன்னும் சிலகாலமிருந்து உலகத்தோருக்கு நீதி போதிக்கவில்லையே என்று யார்தான் விரும்பமாட்டார்கள்? இவ்வுலகத்துக்கு ஒரு ஞானதீபம்போல் விளங்கிவந்த லியோ டால்ஸ்டாயின் மரணத்தினால், ருஷியா தேசம் மட்டுமல்ல, உலகமே ஒரு அரிய மாணிக்கத்தை இழந்துவிட்டதென்று சொல்லுவது மிகையாகாது. உயிர் போகும் தருணத்தில்கூட இவருடைய மனதில் தேசாபிமானமும், ஜனாபிமானமுமே முன்னின்றன என்பதற்கு இவரைச் சுற்றி நின்று வருத்தப்பட்ட மனைவி மக்களையும், உற்றார் உறவினரையும் பார்த்து "உலகத்தில் கோடிக் கணக்கான ஜனங்கள் துன்பத்தினால் வருந்தும் போது நீங்களெல்லோரும் என்னைச் சூழ்ந்து கொண்டு ஏன் நிற்கிறீர்கள்?" என்று இவர் கேட்டதே போதுமான அத்தாட்சியாகும். கடைசியாக உயிர் பிரியும் தருணத்தில் இவ்வகையாகிய மொழிகள் மஹான்களது மனத்திலன்றி வேறு எவர்களிடமிருந்து தோன்றும்? அவரே சிறந்த மஹான்! அவர் வாழ்க்கையை ஒத்து நடப்பதே நமது கடமை.

நாகை-ஸி. கோபால கிருஷ்ணன்.

# சரீரசாஸ்திரப் பயிற்சியும் அதன் உபயோகமும்

## STUDY OF PHYSIOLOGY & ITS USES.

இம்மனித சரீரத்தைக் குறித்துப் பல தேசங்களிலும் காலங்களிலும் ஜீவித்திருந்த ஞானிகள் அநேகர் மிகுந்த வியப்பை அடைந்திருக்கின்றனர். மனிதன் சுகமாக ஜீவித்து வருவதற்கு வேண்டிய அதிசூக்ஷ்மமான அநேகவித வியாபாரங்கள் சரீரத்தில் தனக்குத் தெரியாமல் நடக்கும்படியாக அமைத்திருக்கும் அதிசயத்தைப் பார்த்துச் சிலர் ஒரு பெரிய ஆசானால் அமைக்கப்பட்ட அதியற்புதமான ஒரு யந்திரத்திற்குச் சமானமாக அதை ஒப்பிடுகிறார்கள். 'ப்ரக்ருதி'யானவள், வகுத்திருக்கும் ஒவ்வொரு அற்ப சரீரத்திலும் ஆச்சரியகரமான ஏற்பாடுகள் அமைத்திருக்கிறாள். மனித சரீரத்திலோ வெளியில் பார்ப்பதற்கு விந்தையான சக்திகள் இல்லையாயினும், எந்தச் சக்தியால் அவன் ப்ரக்ருதியின் மற்ற சிருஷ்டிகளைவிட மேலாய் இருக்கிறானோ அந்த மனோபுத்தியாகிற சக்தியின் வியாபாரங்களுக்கு ஒத்தாசையாயிருக்கும்படியான சௌகரியங்களை விசேஷமாக அமைத்திருக்கிறாள். ஆகவே யானையின் காத்திரமும், சிங்கத்தின் பலமும், மானின் வேகமும், பறவைகளின் பறக்கும் திறமும், மீன்களின் நீச்சும் அவனுக்கு இல்லாத போதிலும், இவைகளெல்லாம் அமைந்திருந்தால் அவனுக்கு உண்டாகக்கூடிய பராக்கிரமத்தைவிட அதிகமாக அவனிடத்தில் இருக்கிறது. ப்ரகிருதி தான் பார்த்து ஆனந்திக்கவும், தன்னையே அடிமைகொள்ளவும் சக்தியுள்ள ஒரு சிருஷ்டியைச் செய்ய விரும்பி பல திறமைகள் அமைந்துள்ள சரீரங்களைச் சிருஷ்டித்துத் தவறி கடைசியாக மனித சரீரத்தை யமைத்துத் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டாள் என்று நினைக்கலாம்.

இப்படி நாம் பிரேரிப்பித்த ப்ரக்ருதியின் எண்ணப்பிரகாரம் மனிதன் தன் மனோபுத்தியை, மேன்மேலும் அபிவிர்த்திக்குக் கொண்டுவர வேண்டுமானால், மனதிற்கு இருப்பிடமாயிருக்கும் சரீரத்தைச் சரியான ஸ்திதியில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமென்று நாம் சொல்லவேண்டியதில்லை. சரீரத்தில் நடக்கும் ஒவ்வொரு சிறிய தொழில்களும் தனக்குத் தெரியாமல் எப்பொழுது நடந்து வருகின்றனவோ அப்பொழுது சரீரம் சரியான ஸ்திதியில் இருக்கிறதென்று சொல்லலாம். ஒரு கிரகஸ்தன், தன் குடும்பத்தில் உள்ள சச்சரவினாலோ, வெளியுபத்திரவங்களினாலோ கஷ்டம் வந்த பொழுதுதான், குடும்ப பாரத்தை யறிவதுபோல், ஒரு மனிதனும், தன் சரீரத்தில் ஏதாவது பிசகி, வருத்தத்தையாவது அசௌகரியத்தையாவது கொடுக்கும் பொழுது தான் சரீரத்தை யுடையவனென்பதை முற்றும் உணர்ந்து அதினாலுள்ள கவலைகளை யடைகிறான். உதாரணம்,—ஒரு மனிதன் தான் எடுக்கும் ஆகாரத்தை ஜீரணிக்கச் சக்தியற்று, அதனால் வயிற்றுவலி, வாந்தி, பசியின்மை முதலிய கஷ்டங்களை அனுபவிக்கும் பொழுதுதான், தன்னிடத்தில் தான் எடுக்கும் ஆகாரத்தை ஜீரணிக்கும் ஏற்பாடு ஒன்று உண்டென்றும் அது சரியாக நடந்தேற வில்லை யென்றும் அறிகிறான்.

இப்படிச் சரீரத்தில் உள்ள அவயவங்கள் தங்கள் தொழினின்றும் பிசகுவது பெரும்பாலும், அவயவங்கள் தங்கள் தொழில் சரிவர நடத்தும் விதிகளைக் கடப்பதினாலாகையால், அவ்விதிகளை அறிந்துகொள்வது சுகஜீவியத்திற்குக் காரணமாகுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. இவ்வித அறிவை அடக்கியுள்ளது சரீர தத்வ சாஸ்திரம்.

இவ்விடத்தில் ஒரு கேள்வியுண்டாகலாம். இப்புது ஐரோப்பிய நாகரீகமானது இவ்வளவு அபிவிருத்திக்கு வந்து இவ்வள்வு பரவுவதற்கு

முன் எத்தனையோ கோடி ஜனங்கள் வியாதி யற்ற வாழ்நாட்களை அநுபவித் திருக்கிறார்கள். இப்பொழுது மாத்திரம் இவ்வித சாஸ்திரப் பயிற்சியினால் அடையவேண்டிய அறிவு வேண்டுவானேன்? இக்கேள்விக்குப் பின்வருமாறு விடையளிக்கலாம். மற்றப் பிராணிகள் எல்லாம் இயற்கையறிவினாலேயே தங்கள் ஜீவிய வியாபாரங்களை நடத்திக் கொண்டுவர, மனிதன் மாத்திரம் தனக்கு விசேஷமாக அபிவிருத்தி யடைந்திருக்கிற மனோபுத்தியினின்றும் உண்டான பகுத்தறிவை மிகுதியும் உபயோகப்படுத்தி அதன்வண்ணம் தன் இயற்கையறிவை மாறுபடுத்திக் கொண்டிருக்கிறான் ஒரு உதாரணம் அவனுடைய ஆகாரம்—அவனுடைய பிராசீன சுபாவ ஆகாரம் எதுவோ, இப்பொழுது அக்கினியின் உதவியினால் பாகசாஸ்திரம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு சகல விதமான ஆகாரத்தையும் உட்கொள்ளுகிறான். இதனால் அவனுக்கு யாதொரு புற்பூண்டும் வளராத உத்தர துருவத்திலும் குடியேறி அபிவிர்த்தியாகும் படியான சக்தியிருக்கிறது. இன்னொரு உதாரணம் ஸ்திரீபுருஷஸம்பந்தம்—மற்ற பிராணிகளுக் கெல்லாம் கூடுங்காலத்திலல்லது மற்ற சமயங்களில் புருஷன் மனைவி யென்கிற சம்பந்தம் இல்லாமலிருக்கிறதோடு, கூடுங்காலம் தோறும் மாறுபட்டுக் கொண்டும் வருகிறது. மனிதனோ இவ்வித சம்பந்தத்தை ஸ்திரமாகவும் மாறுபாடில்லாமலும் வைக்க வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்து, அவ்வேற்பாடுகளின் கருத்தை ஒருவாறு நிறைவேற்றிக் கொண்டானென்று சொல்லலாம். இவ்விதமாக மனிதன் தன் புத்தியினின்றும் உண்டான பகுத்தறிவினால் இயற்கை யறிவை மாற்றியோ அபிவிர்த்தி செய்தோ ஏற்படுத்திக்கொண்ட சௌகரியங்களும், சட்டதிட்டங்களும், கொஞ்சம் குறையுள்ளனவாயிருந்த போதிலும், மொத்தத்தில் அவனுடைய அபிவிர்த்திக்கே ஹேதுவாயிருக்கின்றன வென்பது நாகரீகத்தின் சரித்திரத்தை நன்றாய் விசாரித்துணர்ந்த வித்துவான்கள் ஒப்புக்கொள்ள வேண்டியதே யாகும்.

மனிதனுடைய இந்தப் புத்தியும், அதினின்றுண்டாகும் பகுத்தறிவும், சாஸ்திரப் பயிற்சி செய்யுந்தோறும் விர்த்தியாகின்றன வென்பது நாம் சொல்ல வேண்டியதில்லை. இவ்வித சாஸ்திரப் பயிற்சியினால் புது உண்மைகள் தெரியவருகின்றன. அவ்வுண்மைகளினால் உண்டான அறிவின் வெளிச்சத்தினால் பழைய ஏற்பாடுகளையும் வழக்கங்களையும் பார்க்குங்கால், அவைகளில் சில குற்றங்கள் தென்படலாம். அப்பொழுது இப்புதிய அறிவுக்குத் தக்கபடி பழைய ஏற்பாடுகளைக் கூடியவரையில் மாற்ற வேண்டியது நமது கடமையாகிறது. ஆயினும் இந்த மாறுபாடுகளை முன்னுக்குக் கொண்டுவருவதில் நாம் வெகு சாவதானமா யிருக்கவேண்டும். இப்புதுவிஷயங்கள் உண்மையாயிருந்த போதிலும், இவைகளின் அறிவின் வெளிச்சத்தில் மனமானது கூச்சுண்டு, இவைகளின் உபயோகத்தை மாற்றக்கூடிய வேறு உண்மைகளைப்பார்க்க முடியாமல் போகலாம். அப்படியே, ஒருதலைமுறையில் உண்மையென்று வித்துவான்கள் நிரூபித்த விஷயங்கள் பல மறு தலைமுறையில் பயிற்சி செய்யும் வித்துவான்களால் மாற்றப்படுகின்றன. இவ்விதமான குற்றம் சாஸ்திரப்பயிற்சிக்கு இருந்தபோதிலும், மொத்தத்தில் அது மனிதனைச் சரியான வழிக்கே கொண்டு வந்து விடுகிறதென்று நிச்சயமாகச் சொல்லலாம். ஏனெனில் இருளைவிட கொஞ்சம் வெளிச்சம் மேன்மையான தென்பதற்குச் சந்தேகமில்லை. இவ்விதச் சொற்பவெளிச்சம் அநுபவத்திற்கு விரோதமாக நம்மை நடத்துவதற்குப் போதாதபோதிலும், அனுபவம் இல்லாத விடங்களிலும், அனுபவம் சரியாக நம்முடைய பாதையைக் காண்பியாத இடங்களிலும் நமக்கு விசேஷ உதவியாகவிருக்கும். இவ்வித அநுபந்தங்களுடன் சரீர சாஸ்திரத்தைக் கவனிப்போமானால், அச்சாஸ்திரத்தைப் பயிற்சி செய்யும் வித்துவான்கள் நமக்குப் போதிக்கும் உண்மைகள் நமக்கு மிகுந்த உபயோகமா யிருக்கு மென்பதற்குச் சந்தேகமில்லை.

K. நாராயண அய்யர், M. B. & C. M.

# தமிழ்மொழி

## TAMIL LITERATURE

தமிழ்மொழி என்பதற்குத் தமிழ்ப்பேச்சு என்பது பொருள். பேச்சு என்னும் பெயர் அதைக் குறிக்கும் பாஷைக்குக் காரணக்குறியாய் அப்பாஷையை உணர்த்தி நின்றது. அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், ராயுசம் என்னும் நால்வகைப்பிறப்பு வாய்ப்பட்டு இப்பூமண்டலத்தில் பிறக்கும் ஆன்மகோடிகளுக்குள் நமக்குக் கிடைத்திருக்கும் மானிடப் பிறவியே மேலாயது என்பது எல்லோர்க்கும் ஒப்பமுடிந்ததே. ஆறறிவுயிராம் மக்கள் தாங்கள் எண்ணிய எண்ணத்தைப் பிறர்க்கு அறிவித்தற்குக் கருவியாயிருப்பது மொழி—அம்மொழிகள் பல ஒருங்கு சேர்ந்து பொருள்படுவதே பாஷை. அப்பாஷையை ஆதியில் பெற்றார் சிலர்; பிறகு பெற்றார் பலர்; இன்னும் பெறாதார் அளவிறந்தோர். தமிழ் அநேக நூற்றாண்டுகட்கு முன்னரே தோன்றித் தனித்தியங்கும் ஆற்றலுடையதோர் அரியபாஷை. அதன் இயல்பை விரித்துக் கூறுவதற்குமுன் அது எக்காலத்தில் எங்கிருந்து யாவரால் இவ்விந்திய தேயத்தை எய்திற்றென்பதையும் எவ்வளவு தூரம் பரவியிருந்த தென்பதையும் ஆராய்தல் இன்றியமையாததன்றோ?

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் இவ்விந்திய நாடு முழுவதும் காடடர்ந்த நிலமாக இருந்ததெனவும், அக்காலத்தில் நகர், ஊர்முதலிய பாகுபாடுகளிருந்ததில்லை யெனவும், இங்குமங்கும் காட்டு மனிதர்கள் விலங்கேபோல் குகைகளில் வசித்திருந்தார்களெனவும் அவர்கள் காய்கனிகளையும், பன்றி மான் முதலியவற்றின் இறைச்சிகளையும் கற்கருவிகளால் அறுத்து உண்டு வாழ்ந்தார்களெனவும் அவர்கள் அக்காரணம் பற்றி கற்கால மனிதர் என்னப்பட்டார் எனவும் சரித்திர ஆராய்ச்சியுடையோர் தெள்ளிதிற் கூறுகின்றனர். இவ்வாறு நாள் பல செல்லக் கற்கால மனிதர்கள் சிறிது சிறிதாக நாகரீகமடைந்து தாங்கள் உறைவதற்கெனச் சிறு சிறு குடிசைகள் அமைத்துக் கொண்டனர். இரும்பு முதலிய உலோகங்களின் உபயோகத்தையும் நாளடைவில் அறிந்துகொண்டு தங்கட்கு இன்றியமையாதனவாகிய கோடரி, ஈட்டி, முதலியவைகளையும் உண்டாக்கிக் கொண்டனர். இக்காரணத்தால் கற்கால மனிதர்கள் என்னும் பெயர் நீங்கி உலோககாலமனிதர் என்னும் பெயரினைப் பெற்றவராயினர். இவர்களே இந்தியாவில் ஆதிகாலத்திலிருந்தவர்கள். இவர்களையே தமிழர்கள் துரத்தி அவர்கள் நாட்டைக் கைப்பற்றியது. தமிழர்கள் வருவதற்கு முன்னரே நாகர் என்னும் ஒரு வகுப்பினருட் சிலர் இக்காட்டு மனிதர்களைத் துரத்தி இந்தியாவின் சில பாகங்களில் வாழ்ந்திருந்ததாகவும் புலப்படுகின்றது.

தமிழர்கள் ஆதியில் இமயமலைக்கு வடக்கிலுள்ள மத்திய ஆசியாவில் வசித்திருந்தார்கள். அவ்விடத்தில் குளிர்பொறுக்க முடியாதிருந்தமையானும் நிலம் கற்பாங்காயிருந்தமையானும் ஆறுகள் அதிகமாக இல்லாதிருந்தமையானும் தானியம் முதலியவைகளின் விளைவு குறைவாக இருந்தமையானும் தங்கட்கும் தமது கால்நடைகட்கும் உணவைத் தேடி ஊர்தோறும் திரிவாராயினர். இவர்கள் நேபாளத்தைச் சார்ந்துள்ள கணவாய்களின்வழியாய் இந்தியாவையடைந்து அதன்நீர்வள நிலவளங்களைக் கண்ணுற்று அளவிறந்த மகிழ்ச்சியடைந்து கங்கை நதியின் சமவெளியில் முதல்முதல் குடியேறினர். கங்கை நதிக்கரையிலுள்ள தமிழந்தி அல்லது தமிழுக்கு என்னும் துறைமுகப் பட்டணத்தில் நிலைத்துப் பிறகு பற்பல நாடுகளில் குடியேறினமையின் தமிழர்கள் எனப் படுவார் என்பது சிலர் துணிபு. இந்தத் தமிழர்கள் தான் உலோககால மனிதர்களையும் நாகர்களையும் துரத்தி

இந்தியாவைக் கைப்பற்றினதாகக் காண்கின்றது. நாளடைவில் இவர்கள் கூட்டம் கூட்டமாக இந்தியாவில் குடியேறினர்கள். இவர்களில் முதல் முதல் வந்தோர் மாறர் எனப்படுவார். அவர்களது அரசன் அது காரணம் பற்றியே மாறன் என்றும் முதலில் குடியேறினமையின் "பழையன்" என்றும் பேர் புனைந்தான். இதனை,

"மழையொழுக் கறூஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூ ரவையகம் விளங்க" என்னும்

மதுரைக் காஞ்சி வலியுறுத்தும். தமிழ் நாட்டு மூவேந்தருள் பாண்டியராவார் இவரே. மாறர்கட்குப் பின்வந்தோர் திரையர். இவர்கள் அரசன் இருநிலங்கடந்த திருமால் வழித் தோன்றினவன் என்றும் இவ்வழி வந்தோரே காஞ்சிநகரத்தை யாண்ட ஆரியன் வம்சத்தர்களாகிய சோழர்கள் என்றும் புலப்படுகிறது. இதற்கு,

"இருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் புறங்கடை யந்நீர்த்
திரைதரு மரபி னுரவோ னும்பல்
மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கு
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
பல்வேல் திரையற் படர்குவீராயின்".

என்னும் பெரும்பாணாற்றுப்படை சான்று பகரும். திரையர்கட்குப் பின்வந்தோர் வானவர். இவர்கள் முதலில் தென் இந்தியாவிலுள்ள கொல்லிமலை முதலிய இடங்களில் குடியேறி யிருந்ததாகத் தோன்றுகின்றது. இமயமலையில் வாழும் வானவர் என்னும் கூட்டத்தாரை உறவினராகக் கொண்டவர்கள்

"மாநீர் வேலிக் கடம்பெறிந் திமயத்து
வானவர்மருள மலைவிற்பூட்டியவானவர்தோன்றல்"

என்னும் சிலப்பதிகாரக் கூற்றும் இதனை வலியுறுத்துவான் எழுந்தது போலும். இவர்கள்தான் சேரர் எனப்படுவார். இவர்கட்கு இக்காரணம் பற்றியே வான வரம்பர் என்னும் பெயரும் அமைந்ததாகத் தோற்றுகின்றது. மாறர், திரையர், வானவர் ஆகிய மூவேந்தரும் முறையே பாண்டியர், சோழர், சேரர் எனப் பெயர்பூண்டு மூன்று தமிழ் நாட்டை ஏற்படுத்தி அரசு புரிந்த இருநில மன்னராவார். கிறிஸ்து பிறக்க முந்நூறு வருடங்கட்கு முன் மகததேசத்தை யாண்ட அசோக சக்கிரவர்த்தி ஏற்படுத்திய ஆக்கினைபத்திரங்களினால் தமிழ்நாட்டு மூவேந்தரும் தன் அரசாட்சிக்கு உட்பட்டவர்கள் அல்லரென்பதும் வேற்றரசர்கட்குத் திறை செலுத்தாமல் தத்தம் நாட்டை அரசு செலுத்திய பெருவேந்தர்கள் என்பதும் புலப்படுகின்றது.

மேல் எடுத்துக் காட்டிய வாற்றால் தமிழர்கள் அநேக நூற்றாண்டுகட்குமுன் இவ்விந்தியாவில் குடியேறினரென்பது சரித்திர ஆராய்ச்சி முறையிற் போதருகின்றது. இதுவேயன்றிச் சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதான் என்னும் சேரநாட்டுத் தமிழரசன் பாரதப் பெரும்போரில் பாண்டவர் துரியோதனாதியரென்னும் இருதிறத்தினர் சேனைகட்கும் உணவளித்தானென விளங்குகின்றது. இதனை.

"ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட வாடாமோ வூசல்
கடம்பெறிந்த வாபாடி யாடாமோ வூசல்"

என்னும் சிலப்பதிகாரச் செய்யுளும்

"நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பி னன்னாட்டுப் பொருந
வான வரம்பனை நீயோ பெரும
வலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
யீரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்
[தோய்"

என்னும் புறநானூற்றுக் கவியும் இனிது விளக்கும். இச்செய்யுட்களால் பாரதயுத்தம் நடந்த காலத்திலேயே இவ்விந்தியாவில் தமிழ் பரவியிருந்த தென்பதும் ஒரு தலையன்றே. இம்மட்டோ, ஸ்ரீராமபிரான் தன் சிற்றன்னையின் பணியைச் சிரமேற்கொண்டு பதினான்கு வருடம் வனவாசம் செய்வான் சென்றபோது பொதியமலையில் வீற்றிருந்த அகத்தியரைக் கண்டதாகவும் அப்போதே இவ்விந்தியநாட்டில் தமிழ் நடை பெற்றதாகவும் கீழ்வரும் இராமாவதாரச் செய்யுள் சான்று பகரும்.

"நின்றவனை வந்த நெடியோ னடிபணிந்தான்
அன்றவனு மன்பொடு தழீஇ யழுதகண்ணன்
நன்று வாவென்று பலநல் லுரைபகர்ந்தான்
என்றுமுள தென்றமி ழியம்பியிசைகொண்டான்.

தமிழ்ப் பரப்பு.—திரணதூமாக்கினி என்னும் இயற்பெயரையுடைய ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார் இயற்றிய தொல்காப்பியத்திற்குப் பாயிரங்கூறிய பனம்பாரனார் "வடவேங்கடம் தென்குமரி யாயிடைத் தமிழ் கூறுநல்லுகத்து" எனத் தமிழின் எல்லையை வடக்கின்கண் வேங்கட மலையாகவும் தெற்கின்கண் குமரியாருகவும் நிறீஇயினர். இப்பாயிரத்தை வாசிப்போர் இவ்வெல்லையைக் கடந்து தமிழ்மொழி பரவிற்றில்லை போலும் என ஆசங்கித்தற்கு இடமுண்டன்றே. ஆயினும் அதனைச் சிறிது ஈண்டு ஆராய்வாம். தமிழர்கள் தாங்கள் நாடிச் சென்ற இடத்தை நாடு என்றும், நகர்ந்து சென்றடைந்த இடத்தை நகரம் என்றும், ஊர்ந்து சென்றடைந்த இடத்தை ஊர் என்றும் கூறுவாராயினர். நாடு, நகரம், ஊர் என்னும் இம்மூன்று மொழிகளும் தமிழ் மொழிகள் என்பது எல்லோர்க்கும் ஒப்ப முடிந்ததே. ஆகலின் ஊர் என்னும் பதத்தை இறுதியில் கொண்ட மொழிகளைப் பெயராகவுடைய இடங்களில் தமிழ் பரவியிருக்கவேண்டுமென யூகிப்பதற்கு இடமுண்டன்றே. ஊர் என்னும்மொழியை இறுதியில் கொண்ட சில இடங்களை விளம்புவாம்; கண்ணனூர், மங்களூர், நெல்லூர், குண்டூர், இந்தூர், லாகூர், சந்திரநாகூர், சிங்கப்பூர் முதலிய பலவேயாம். இவ்வூர்களில் சில வடவிந்தியாவாகிய தமிழ் வழங்கா நாட்டின்கண் உள்ளனவாகி ஏற்படுகின்றனவாகலின் மேற்கூறிய முடிவு எவ்வாறு பொருந்தும் என்னும் ஆசங்கை நிகழுமன்றே காட்டுதும், அவற்றுள் நெல்லூர் என்னும் பதத்தையாராய்வாம். நெல்லூர் என்பது நெல், ஊர் என்னும் இரண்டு தமிழ் மொழிகளானய ஓர் தொடர்மொழி. நெல் என்பது "நெல்லுப் புல்லு வரகு தினை சாமை இறுங்கு தோரை இராகியோடெட்டு" என்னும்தமிழர்முதற்கூலப்பொருளில் முதன்மையாய் விளங்குவது. தமிழர் முதற்கூலப் பொருளையே பெயராக உடைய எல்லைக்கண் தமிழ்மொழி வழங்கிற்று என்பதைச் சொல்லவும் வேண்டுமோ. நெல்லூருக்கு வடக்கே குண்டூர் என்னும் ஊர் உண்டு. அது குன்றூர் என்னுஞ் சொல்லின் மரூஉவேயாம். குன்றூர் என்பதற்கு மலைநாடு என்பது பொருள். மேற்கூறிய இரண்டு ஊர்களிலும் தற்காலம் வழங்கும் மொழி தெலுங்கு மொழியே யெனினும் முன்னொரு காலத்தில் தமிழ் வழங்கி யிருந்த தென்றே புலப்படுகின்றது. இவ்வாறே மங்களூர், கண்ணனூர் என்னும் இரண்டிடங்களிலும் கன்னடமும் மலையாளமும் இக்காலத்தில் வழங்குமே யெனினும் அவையும் தமிழ்நாடென்றே துணிந்துகூறலாம். தமிழ்ப் பெருங்காப்பியங்கள் ஐந்தனுள் சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இருபெருங் காப்பியங்களையும் இயற்றினர் முறையே சேரநாட்டரசன் பிற்றோன்றலாம் இளங்கோவடிகளும் அச்சேரன் சமஸ்தானத்தைச் சார்ந்த சீத்தலைச் சாத்தனரும் எனின் மலையாளத்தில் தமிழ் வழங்கியிருந்தது என்பதை வலியுறுத்த வேறு யாது சான்று வேண்டும். இருபெரு நூலும் பிறந்த இடமும் மலையாளத்திலுள்ள கருவூர்

என்னும் திருவஞ்சைக்களமாம். இக்காலத்தே மலையாளத்தில் வழங்கும் மொழிகளுள் தமிழ் மொழிகள் எண்ணிறந்தன. இக்கருத்தே பற்றிப்போலும் தமிழ்த் தெய்வவணக்கம் கூறுவான் போந்த ஆங்கிலத்தமிழ் வித்துவச் சிரோமணியாகிய சுந்தரம்பிள்ளை அவர்கள்

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் [துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி [யிருந்ததுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா [ளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல [வாயிடினும்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த் [துதுமே

எனத் துதிப்பாராயினர்.

இதுகாறும் கூறியவாற்றால் வடவேங்கடத்திற் கப்பாலும் தமிழ் வழங்கியிருந்தது என்பது புலப்படுகின்றது.

யவனர் அரிசி என்பதனை (Oryza) அரிஜா என்றும், இஞ்சிவேர் என்பதனை (Zingiber) ஸிஞ்சிபேர் என்றும், கருவா (இலவங்கம்) என்பதனை (Karpion) கார்பியன் என்றும், ஹீப்ரேயர் கவி (குரங்கு) என்பதனைக் கபீம் என்றும், தோகை (மயில்) என்பதனை டுகீம் என்றும் வழங்குதலால் பண்டைக்காலத்தில் தமிழானது அவர் பிரதேசங்களிலும்நன்கு வழங்கப் பெற்றதென்பது விளங்குகின்றது. சிலப்பதிகாரத்தில் "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும், தமிழ்வரம் பறுத்த தண்புனனாடு" என்பதில் 'தொடியோள் பௌவம்; என்பதை விளக்குமிடத்தில், அடியார்க்கு நல்லார், "பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக்கோடு கொடுங் கடல் கொள்ள" என்னும் சிலப்பதிகார வடிகளை உதகரித்து, 'தலைச்சங்கமிருந்த காலத்தில் பாண்டிநாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளிய என்னு மாற்றிற்கும் குமரியென்னு மாற்றிற்கு மிடையே எழுநூற்றுக்காவதவாறும் இவற்றின் நீர் மலிவானென மலிந்த ஏழ் தெங்கநாடும் ஏழ் மதுரைநாடும் ஏழ் முன்பாலைநாடும்ஏழ் பின்பாலைநாடும் ஏழ் குன்றநாடும் ஏழ் குணகரை நாடும் ஏழ் குறும்பனை நாடும் என்னுமிந்த நாற்பத்தொன்பதுநாடும்குமரிகொல்ல முதலியபன்மலை நாடும் காடும் நதியும்பதியும் தடநீர்க்குமரிவடபெருங் கோட்டின் காறும் கடல் கொண்டொழிதலால் குமரியாகிய பௌவமென்றார் என்றுணர்க' என விளக்கியிருக்கின்றனர். இது அக்காலத்தில் தமிழகத்தின் விரிவும் பரப்பும் மிகப் பெரிது என்பது முதலிய யூகிக்க இடந் தருகின்றது.

இது போலவே சிங்கபூர், நாகபூர் முதலிய ஒவ்வொரு மொழியையும் ஆராயின் தமிழ் மொழியானது இந்தியாவிலும் அதைச் சார்ந்த தீவுகளிலும் பரவியிருந்ததாகத் தெரியவருகின்றது. இவ்வாராய்ச்சி "வடவேங்கடந் தென்குமரியா யிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து" என்னும் பாயிரச் சூத்திரத்திற்கு மாறுபடுமே என்னின் அற்றன்று. ஆசிரியர் தொல்காப்பியனார் "வடவேங்கடம் தென் குமரியாகிய இவ்வெல்லைக்குள் வழங்கும் தமிழ் மொழிக்கே இலக்கணங்கூறுவான் போந்தனரேயன்றி மற்றைய நாடுகளினும் சிதைந்து வழங்கும் தமிழ்மொழிக் கன்று எனக்கோடலே அமைவுடைத்து. சில மாதங்களுக்கு முன் தஞ்சைமா நகரத்தில் நடந்தேறிய மதுரைத்தமிழ்ச்சங்கத்து வருடக் கொண்டாட்டத்தில் "தன் சரிதம் உணர்த்து மொழி" என்னும் தலைப்பின் கீழ் ஊர் என்னும் விஷயத்தைப்பற்றி எமது நண்பரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துத் தமிழ்ப் புலவர்களில் ஒருவருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ ஐ. சாமிநாத முதலியார் அவர்கள் அழகுபெற விதந்து கூறினர்.

சே. சிவஞானம் பிள்ளை.

---

இவ்வியாசம் பாளையங்கோட்டை சைவசமயாபிவிர்த்தி சபையின் 24-வது வருடோற்சவத்தில் வாசிக்கப்பெற்றது.

# புஸ்தகாலயம்

## LIBRARY

தேவாலயம் என்றால் எப்படி தேவன் இருக்குமிடமென்று பொருள்படுகிறதோ, அப்படியே புஸ்தகாலயம் என்றால் புஸ்தகங்களின் இருப்பிடமென்று பொருள் கொள்ளலாம். மஹான்களின் உயர்ந்த அபிப்பிராயங்களும், ஞானந்தரு மொழிகளும், பெருந் தத்வங்களும், பிரபஞ்ச அநுபவத்தினால் கண்டறிந்த விஷயங்களும், ஸ்திரமான ரூபமாய் அடங்கியிருக்குமிடமாதலால் புஸ்தகங்களில் இப்பேர்ப்பட்டவை, மாநுடர்களுக்கு அத்யாவச்யமானதேயாம்.

வெவ்வேறுவகை சாஸ்த்ரங்களும், விசேஷித்த சிந்தனைகளும், புதிதாய்க் கண்டறியப்பட்ட தத்வஸாரங்களும், அபூர்வமான அநுபவங்களும், புஸ்தகங்களில் குடிகொண்டிருக்கின்றன. பெருமை தங்கிய சுத்தர்களும் ஸித்தர்களுமாகிய பெரியோர்களின் சரிதங்களும் புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருப்பன. இவை மாந்தர்களுக்கு மிகுந்த பயனைத் தருகின்றன.

இதன்றிப் பல்வேறு ஜாதியர் பூர்வோத்தர நிலைமைகளையும், குணாதிசயங்களையும், அவர்கள் நடையுடை பாவனைகளையும், மதாசாரக் கோட்பாடுகளின் சித்தாந்தங்களையும், வேதாந்த பரிசீலனம் முதலியவைகளையும், அநுபவ ஸாதனத்திற்கு வேண்டிய நற்குணாம்சங்களையும், பாஷைகளின் வளர்ச்சி வேறுபாடுகளையும் கூறும் புஸ்தகசாலையினை விலைமதிப்பேறிய உயர்ந்த பொக்கிஷ சாலையெனக் கூறினுந் தகும். பொக்கிஷத்திலுள்ள பணம் எப்படி ஒரு மனிதனுக்கு விசேஷ ஸௌகர்யம் செய்வதோ, அப்படியே ஸகலவித ஞானமும் அறிவும் அமர்ந்திருக்கும் புஸ்தகங்கள் பெரும் பயனை விளைவிக்கின்றன.

இப்படிப்பட்ட உபயோகமுள்ள புஸ்தகசாலைகள் உலகத்தில் அறிவை மிகவும் பரவச்செய்ய ஸாதகமாயிருக்கின்றனவாகவே, பட்டண வாஸங்களிலும், கிராம வாஸங்களிலும், அவை அநேகம் ஸ்தாபிக்கப்படவேண்டும். பணக்காரர்களுக்கும், விசேஷபணம் செலவழித்துப் புஸ்தகம் வாங்கிப்படிக்க முடியாத ஏழைகளுக்கும், இப்புஸ்தகசாலை ஸாதனமென்றால் இவ்வித புஸ்தகசாலை எங்கும் அவசியம் இருக்க வேண்டியதேயாம். என்ஸைக்ளோபீடியா பிரிடானிக்கா (Encyclopaedia Brittanica) போன்ற உலக அகராதியினை யாவரும் எளிதில் அடைவது முடியாதாதலால், இதனைப் பெரிய புஸ்தகாலயங்களிலேயே போற்றி வைக்கும்படியாயிருக்கிறது. புஸ்தகங்கள், தாம், அவற்றை வாசிப்பவர் மீது, அவற்றிலுள்ளவைகளைவேறுவிதமாகக்கிரஹித்தால் கோபித்துக்கொள்ளா! வையா! அடிக்கா! புஸ்தகங்கள் தம்மை நெருங்கியடைந்தவருக்கு, தம்மிடத்துள்ள விஷயங்களை அப்படியே போதிக்கும் உபாத்தியாயர் என்னலாம். புஸ்தகங்கள் தம்மைப் படிப்பவர், தம்மினும் மேன்மையடைந்துவிடுவர் என்று பயப்படாமல் கற்பிக்கும் நல்ல உபாத்தியாயர் என்னலாம். ஆகவே பணக்காரராயினும் ஏழையாயினும், அவரவர்கள் தம் தம் யோக்கியதைக்குத் தக்கபடி, தக்க புஸ்தக சாலை யொன்றினை நிருமித்துக் கொள்ளல் அவசியமேயாம். எத்தகைய துக்கத்தையும் கடிதினில் நீக்கவல்லன புஸ்தகங்கள். புஸ்தகங்கள் படிப்பதனால் யௌவன முள்ளவனும் வார்த்தீக தசையடைகிறான். பிரியப்பட்டபொழுது, கம்பர், ஷேக்ஸ்பியர், மில்டன், திருவள்ளுவர், காளிதாஸன் போன்ற காலஞ்சென்ற புகழ்பெற்ற வித்வான்களிடமும் புஸ்தகங்கள் மூலமாய் இக்காலத்தில் நாம் பேசக்கூடிய பெருமை நமக்குக் கிடைத்தால், புஸ்தகங்களின் பெருமை சொல்லலாம் தகைமைத்தோ? புஸ்தகங்கள் படிப்பதனால் பலதேயத்தவர்கள் நமக்கு நண்பராகிறார்கள். அத்தேயத்து நண்பரை நாம் இஷ்டப்படின் பாராட்டலாம்; இஷ்டாமில்லாவிடின் விடலாம்.

படிப்போருக்கு நன்னடத்தையைக் கற்பித்து ஆநந்தமூட்டும் இப்புத்தகங்களை வாசித்துக்கொண்டிருக்கும் சிலர் புஸ்தகம் வாசிக்கையில், தாங்கள் அதிலேயே கவனமாயிருந்து சாப்பிடக்கூட மறந்து போகிறார்கள். முற்காலத்திய எட்டுச்சுவடிகளைக் காட்டிலும், யந்திரத்தினால் வெளிவந்து பயன் தருகிற புஸ்தகசாலைகள் ஏற்பட்டு மாந்தர்க் குதவுவது இங்கிலீஷ் கவர்ன் மெண்டாரால் உண்டாகிய ஸாதகமே யென்னலாம்.

புஸ்தகங்கள் படிப்பதென்றால், கண்ட எல்லாப் புத்தகங்களினையும் ஒன்று விடாமல் படிப்பதன்று. சில புத்தகங்களில், சிலவற்றைப் பார்த்து ருசிக்கவேண்டும். சில புஸ்தகங்களை முழுவதும் படிக்கவேண்டும். சிலபுஸ்தகங்கள் படிப்பதில் நாம் அயர்ந்து களைப்பாயிருக்கும் காலத்தையும் உபயோகிக்கவேண்டும். சில புஸ்தகங்களை வாசித்தபிறகு அவைகள் நம் மனதிற் பதிந்தனவா என்பதை மறுமுறை சிந்தித்துத் தெளிய வேண்டும். சிலபுஸ்தகங்களில் ஒருமுறை ஒருபாகமும், மறுமுறை மற்றொரு பாகமும் படித்தறிந்து கொள்ள வேண்டும். புஸ்தகங்களை வாசித்தால், வாசிப்பன் மனுஷனாகின்றான். சரித்திரபுஸ்தகங்கள் வாசித்து மனிதன் உலக ஞானத்தை விருத்தி செய்து கொள்ளுகிறான். செய்யுட்கள்கொண்ட புத்தகங்கள் வாசித்து மனுஷன் புத்தி சாதுரியமடைகிறான். கணிதபுஸ்தகங்களில் தேர்ச்சி பெற்றுத் தந்திரவானாகின்றான். இயற்கை சாஸ்த்ரங்களால் உற்றுநோக்கும் தன்மையும் கூரிய ஆழ்ந்த புத்தியுமுடையவனாகின்றான்.

யாவரும் பயனற்ற நூல்களைப் படியார். அப்படிப் படித்தல் தீய நண்பரைச் சேர்ந்து பழகுவது போலாகும். அதனால் தீமையே ஸம்பவிக்குமாதலினால் அப்புத்தகங்களை நீக்கி நற்புத்தகங்களையே பெறுதல் மேன்மையானது.

ஸத்கிரந்தங்களை உயர்ந்த சக்திகளென்னலாம். காலஞ்சென்ற மஹாக்ரந்த கர்த்தாக்களும், கவிகளும், வித்வான்களும் தங்கள் சீர்பெற்ற புஸ்தகங்களில் சிரஞ்சீவிகளாய் நிற்கின்றனர். ஸரஸ்வதி தேவி ஸ்ருஷ்டி கர்த்தாவாகிய பிரமனது முகத்திலேயே வாஸம் செய்வாளாயினும், அந்தப் பிரமன் ஸ்ருஷ்டிசெய்யும் உயிர் முதலாயின நசிப்பனபோல், மஹாவித்வான்கள் செய்யும் கவிகள் நாசமுறுவதில்லை. ஆதலின் ஸ்ருஷ்டி கர்த்தாவாகிய பிரமனைக் காட்டிலும் வித்வான்களே சிறந்தவரென்னும் தமிழ்க்கவியின் பொருள் கவனிக்கத் தகுந்தது. பிராசீன ஸத்கிரந்தங்கள் மேன்மேலும் ஜாஸ்தியான கௌரவமடைந்து தங்களைத்தேடி நாடினவர்களுக்கு நண்பர்களாக நன்மை செய்கின்றன. அவைகள் யதார்த்தமாய் சிரத்தையாகத் தம்மை வந்தடைந்து கேட்பவர்களுக்கு ஸமாதானம் சொல்லித் தவங்களைப் போதிக்கின்றன. புஸ்தகங்கள் தம்மை யடைந்த யதார்த்த சிஷ்யனுக்கு உண்மையாய் ஞானோபதேசம் செய்து, தன்னைப்போன்ற பிறரிடத்தும், எல்லோரையும் படைத்தளித்துக் காக்கும் பகவானிடத்தும் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் நன்றாகக் கற்பிக்கின்றன. மஹாகிரந்தங்களே மாநுடர்களுக்கு ஆத்மார்த்த நண்பர்களென்னலாம். அந்தக் கிரந்தங்கள் அழிவற்று எக்காலத்தும் சாஸ்வதமாய் இருக்கின்றன.

வி. ஸுப்ரமண்ய ஐயர்.

குரு அந்தியாத்ம ஸாதந விர்த்தியைச் சுலபமாக்குகிறார்.—நடுக் கடலில் கப்பலின் பாய்மரக் கொம்பின் உச்சியில் தங்கிய பறவையானது அவ்விடத்திலிருக்க வெறுப்புற்று வேறோர் புதிய இடத்தைத் தேடிச் சென்று யாதோரிடமும் கிடைக்கப் பெறாமல் மிகவும் களைத்து வாடிப் போய்க் கடைசியில் முன்னிருந்த அதே பாய்மரத்தின் உச்சிக்கே திரும்பி வருதல்போல், ஸத்குருவை யாசிரயித்த சிஷ்யன் பூர்ணாநுபவியான அவர் தன்மேல் வைத்த கிருபையால் நியமிக்கும் கர்மாநுஷ்டானங்களையும் யோகாப்பியாஸங்களையும் கடுமை யெனக்கருதி அக்குருவினிடத்திலும் நம்பிக்கை யற்று, வேறோர் குருவைத் தேடி யுலகமெல்லாந் திரிந்து பார்த்தும் யாதொரு பயனும் பெறாமல், கடைசியில் மிகவும் மனம்நொந்து முன்னிலும் அதிகமான பயபத்தியுடன் தன்பிரதம குருவையே யடைந்து அவரது திருவடித் தாமரைகளிற் சரணமடைகிறான்.

## "சூரியன்—அதன் உஷ்ணமும் ஒளியும்"

### SUN-HIS HEAT AND LIGHT.

1. இப்பிரபஞ்சத்தில் பெருமையிலும், மகிமையிலும், மனிதன் அடையும் பிரயோசனத்திலும் எல்லாவஸ்துக்களுக்கும் மேன்மையானது சூரியன். சூரியோஷ்ணத்தின் கடுமையில் பத்திலொருபங்கு கடுமையுள்ள வஸ்துக்கள் நம்முடைய உலகில் இல்லை. மின்சார விளக்கைப்போல் பிரகாசமான ஒளிதரும் வஸ்து நமது அனுபவத்தில் கிடையாது. இதுவும் கூட சூரியப் பிரகாசத்தின் முன், மின்மினிப்பூச்சிக்குச் சமானம். மனிதனுக்கு உபயோகமுள்ள வஸ்துவாக நினைத்துப்பார்த்தாலும் அதற்கு ஸமமாக எதையும் நம்மால் கூறுவது அசாத்தியம்.

2. முதலில் சூரியனது உஷ்ணத்தைப் பற்றிச் சற்று விசாரிப்போம். பனிக்காலத்தில் குளிரான இரவில் நெருப்பண்டை உட்கார்ந்து குளிர் காய்வது எல்லாருக்கும் வழக்கம். குளிர் காலத்தில் சூரியன் எப்போது உதிக்குமென்று காத்திருந்து, எவ்வயதினரும் வெய்யிலின் வெப்பத்தினாலுண்டாகும் ஸுகத்தை அனுபவித்து ஆனந்திக்கிறார்கள். எப்படி நாம் குளிர்காயும் நெருப்பண்டை நெருங்க நெருங்க சூடு அதிகரித்துக்கொண்டே வருகிறதோ, அதேமாதிரி நாம் சூரியனுக்குச் சமீபத்தில் போகக்கூடுமானால் உஷ்ணம் வர வர விருத்தியாவதை உணரக்கூடும்.

ஒரு கரித்துண்டை எடுத்து அதைச்சுற்றிப் பீங்கானால் ஒரு மூடிசெய்து அதற்குமேல் இரும்பினால் கவசம் ஏற்படுத்தி அதையும் ஒரு ஈயச்சொப்பில் வைத்து மூடி ஒரு பந்துபோலாக்குவதாக நினைத்துக் கொள்வோம்.

இதற்கு மெழுகுப் போர்வை யிட்டு அதன்மேல் தடிப்பாய் வெண்ணெயையும் பூசுவோம். இவ்விசித்திரப் பந்தானது இப்பூமியிலிருந்து கிளம்பி சூரியனை நோக்கிச்செல்லும்பக்ஷத்தில் முதலில் நாம் தினம் வழக்கமாய்ப்பெறும் உஷ்ணத்திலேயே மேல் வெண்ணெய்ப்போர்வை உருகிவிடும். கொஞ்ச தூரத்தில்மெழுகுக் கவசமும் இளகி, உருகி, கொதித்துக் கடைசியில் ஆவியாய் மாறிவிடும். இதே மாதிரி கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பந்து




சூரியனை நெருங்க நெருங்க ஈயம், இரும்பு, பீங்கான், இவைகள் முறையேமுதலில்சூடுண்டு செந்நிறமாகிப் பிறகு வெளுப்பாய் ஜொலித்து, உருகி, கடைசியில் ஆவியாக மாறி ஓடிவிடும். முடிவில் மத்தியில் நின்ற கரித்துண்டின் கதியும் இவ்வாறே. இந்த விசித்திரப் பந்தின் கதை நம்பக்கூடியதா, சூரியனுக்கு அவ்வளவு உஷ்ணமுண்டா என்று சந்தேகப் படுவதற்கு இடமில்லை. இவ்வளவும் நடக்கக் கூடும் என்று அநுமானிக்க அனேக யுக்திகளும் அத்தாக்ஷிகளும் உண்டு. அவைகளில் ஒன்றை மாத்திரம் இப்போது இவ்விடம் விசாரிப்போம்.

சூரியக் கண்ணாடி பூதக்கண்ணாடி என்னும் சிறு கண்ணாடித் துண்டைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? அது நாம் முகம் பார்க்கும் கண்ணாடியைப்போ லிராமல் வட்டமாய் (நடுவில் தடித்து ஓரத்தில் மெலிந்து) பின்வரும் சித்திரத்தில் காட்டியபடி இருக்கும்.

வயதான பெரியோர்கள் வெள்ளெழுத்துக்காக உபயோகப்படுத்தும் மூக்குக்கண்ணாடிகளின் பில்லைகளும் இத்தன்மையானவை.



அதிலொன்றைச் சூரியனுக்கு எதிரே பிடித்து அதன்கீழே மற்றொரு பக்கம் கொஞ்சம் புகையையாவது அல்லது நன்றாய்ப் பொடி செய்த சீமைச் சுண்ணாம்புத் தூளையாவது (Chalk powder) வாயால் ஊதி பரவச்செய்தால் உடனே ஒரு விசித்திரத் தோற்றம் உண்டாகும்.




இரண்டு குவிந்த வடிவுள்ள (Cone) சர்க்கரைப் பொட்டணங்களை, கூர்முனைகள் சேரும்படி வைத்தாற்போல் வெளிச்சம் தோன்றும். இதில் (A) அடையாள மிட்ட இடத்தில் ஒளியைக் கையில் ஏந்தினால், அதில் வட்டமாக வெய்யில் உருவம் படியும். கையைக் கொஞ்சம் கொஞ்சமாக (B) அடையாள மிட்ட இடத்தை நோக்கிக் கொண்டு போனால் இப்பிரகாசவட்டம் வரவரச் சிறுத்து, ஒளியிலும் உஷ்ணத்திலும் அதிகரிக்கும். (B) வரையில் வருவதற்கு முன்னேயே நம்மால் சூடு தாங்க முடியாது. சூடு வெகு அதிகமாக இருக்கும். இந்த ஆச்சரியத்தின் காரணம் கொஞ்சம் யோசித்துப்பார்த்தால் தெளிவாகும். (C) என்னும் இடத்தின்வழியாகச் சமமாக நேரேவரும் சூரியக் கிரணங்கள் கண்ணாடியில் நுழைந்ததும் வளைந்து (B) என்கிற இடத்தை நோக்கிக் குவிந்து சென்று (Focus) அப்புறம் விரிந்து செல்லுகின்றன. கண்ணாடி அவ்வளவு விஸ்தீரணத்தில் பரவி விழும் கிரணங்கள் அதன் வழியாய்ச் செல்வதினால் ஒரே இடத்தில் குவிக்கப்படவே, பிரகாசமும், உஷ்ணமும் ஒன்றாய் சேர்க்கப்பட்டு அதிகமாகின்றன.

கடுதாசி, சுண்ணாம்பு, வெள்ளிபோன்ற எதையாவது வெளுத்ததை (B) இடத்தில் காட்டினால் அது கண் கூசும்படி, ஜ்வலித்து மின்னும். பஞ்சு, காகிதம், இவைகளை எரித்து விடலாம். வெடி மருந்துக்கு நெருப்பு மூட்டிபீரங்கிகளையும் சுடலாம். மெழுகுபோன்ற பதார்த்தங்கள் சுலபமாக உருகிப்போம். இவ்வளவு உஷ்ணத்தைச் சூரிய வெளிச்சத்தில் சூரியக் கண்ணாடியைப் பிடித்து உண்டாக்குகிறோம். சூரிய வெளிச்சத்துக்குப் பதிலாய் நமக்கு இப்பூமியில் கிடைக்கக் கூடிய வேறு மின்சார விளக்குப் போன்ற வெளிச்சங்களை உபயோகப் படுத்தினாலும் போகஸ்ஸில் (B) (என்னும் இடத்திற்கு இங்கிலீஷில் Focus என்று பெயர்) உண்டாகும் ஒளியும் சூடும் நாம் உணர்வதற்குக் கூட போதாமல் அவ்வளவு கொஞ்சமாயிருக்கும். ஆயினும் அவ்விளக்குகளின் நெருப்பை நாம் கையால் தொட அஞ்சுவோம். அவைக

ளின் கடுமையை நினைத்தாலோ மனது நடுங்கும். இவ்வளவு அற்பமான போகஸ் (Focus) உஷ்ணத்தை உண்டு பண்ணக் கூடிய இவ்வுலக அனல்களே நாம் தாங்க முடியாத உஷ்ண முள்ளவைகளாக இருக்க, நம் கைகளில் தாங்க முடியாத போகஸ் உஷ்ணத்தைத் தரும் சூரியனுடைய உஷ்ணம் எவ்வளவு அதிகமாக இருக்கவேண்டும்! மேலும் சூரியன் இருக்கும் தூரத்தையும்கூட சேர்த்து யோஜித்துப் பார்த்தால், சூரியோஷ்ண மித்தன்மையதென்று மனதினுல் கிரகிக்கக் கூடாதபடி அவ்வளவு குரூரமானதென்பதனைச் சொல்லவும் வேண்டுமா?

வெப்பம் எப்படியோ அப்படித்தான் ஒளியும். நாம் மகாபிரகாசமானவையென்று கொண்டாடும் வாஷிங்டன் (Washington) விளக்கு, துறைமுகங்களில் அமைத்துள்ள விளக்குக் கூண்டுகள் (Light house) முதலியவை சில யோஜனை தூரத்துக்கு அப்பால் நமது கண்களுக்குப் புலப்படா. சூரிய வெளிச்சமோ அப்படியல்ல. சூரியனுக்கும் நமக்கும் தூரம் ஒன்பதுகோடி மைலுக்கதிகம். ஸகல திக்குகளிலும் பிரகாசிக்கும் அதன் பிரகாசத்தில் நம்மிடத்துக்கு வந்து சேருவது வெகு கொஞ்சம். சூரியனிருக்கும் தூரத்தையும் அதனுல் நமக்குக் கிடைக்கும் ஸ்வல்பமான பகுதியையும், சூரியோதயமாவதற்குமுன்னமேயே அதன் பின் வரப்போகிற வெளிச்சத்தால் உண்டாகும் நிலத்தெளிவையும், தினமத்தியில் கண்ணுேக்கவொட்டாமல் ஜ்வலிக்கும் காந்தியையும் யோஜித்துப் பார்க்குமிடத்து, கடவுள் நம்மீது தயவுகூர்ந்து அளித்திருக்கும் "சூரியன்" என்னும் மகா தீபத்தின் பெருமையை என்னென்று வர்ணிப்பது!!

S. B. அய்யர், பீ. ஏ. எல். டி.



# காஞ்சி க்ஷேத்திர மகிமை

## THE DIVINITY OF CANCHIPURAM

"கருவார் கச்சித் திருவே கம்பத்
தொருவா வென்ன மருவா வினையே."

இத்தலத்துப் பெருமையை யாவரே அறிய விரும்பார்? சோழ நாடு, பாண்டிய நாடு, மலை நாடு எனத் தென்னிந்தியா பிரிவு பட்டிருந்த அக்காலத்தில் இத்தலம் 'தொண்டை நாடு' என்னும் பகுப்பினைச் சார்ந்ததாம். ஒவ்வொரு நாட்டு விசேஷங்களையும் சொல்லவந்த ஔவையார்—மலை நாட்டில் யானைக ளுண்டென்றும், சோழ நாட்டிற் சோறுண்டென்றும், பாண்டி நாட்டில் முத்து உண்டென்றும் கூறித், தொண்டை நாட்டிற் சான்ருேர் உண்டென்று கூறினதே அந்நாட்டின் பெருமையை நன்கு விளக்கும்.

"வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னுடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்
றொண்டை நன்னுடு சான்ருே ருடைத்து."

இன்னும், இந்நாட்டின் பெருமையைத் "தொண்டைமண்டல சதகம்" என்னும் நூலில் விரிவாகக் காணலாகும்.

அத்தகைய நாட்டின் பெருமை முழுமைக்கும் காரணமாக விளங்குவது அந்நாட்டுக்கு நடுநாயகமாயுள்ள ஸ்ரீ காஞ்சிபுர க்ஷேத்திரந்தான். பாபங்களை ஓட்டியும் புண்ணியங்களைக் கூட்டியும் ஆன்மாக்களுக்கு உதவவல்ல பெரிய நகரங்களாகிய ஏழினுஞ் சிறந்து, "நகரேஷு காஞ்சி" எனப் பிரசித்திபெற்றுத் தவநிறை மாந்தர் விளங்குங் காஞ்சிமா நகரைத் தன்னுள்ளே கொண்டதே தனக்கு ஒரு பெருமையாக வாய்க்கப்பெற்று விளங்குவது தொண்டைநாடு—என ஒரு புலவர் கூறுகின்ருர்.

"பவம் விளைத்திடாப் பெரும்பதி
யெனத்திசை போய
சிவம் விளைத்திடு நகரங்க
ளேழினுஞ் சிறந்து
தவம் விளைத்திடு காஞ்சியைத்
தன்னிடத் திருத்தி
நவம் விளைத்திடும் பெருமைபூண்
டதுதொண்டை நாடு.''

திரைகொண்ட நதிகளுள் கங்கா நதிபோலவும், விரைகொண்ட மலர்களுள் தாமரைமலர்போலவும், தரைகொண்ட தலங்களுள் காஞ்சியந் தலம்போலவும், வரைகொண்ட கோயில்களுள் திருத்தணிகையே விசேஷமானது என மிகப் பாராட்டப்பட்டுள்ள ஸ்ரீ சுப்பிரமணிய க்ஷேத்திரமான திருத்தணிகை மலையையும், தமிழ் வழங்கு நாட்டுக்கு வடதிசை எல்லையாக விளங்கும் திருவேங்கட மலையையும், அன்பே ஒருரு எனத் திரண்ட கண்ணப்ப நாயனர் எம்பிரானுக்குக் கண்ணைப் பெயர்த்து அப்பின தக்ஷிண கயிலாயம் என்னும் திருப்பெயரோடு விளங்கும் சீகாளத்தி மலையையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பொருட்டு அன்னமறியாத பரமன் அன்னம் இரந்து ஊட்டின திருக்கச்சூர் என்னும் தலத்தையும், திருவிடைச்சுரம், திருக்கழுக்குன்றம்என்னும்ஸ்தலங்களையும் குறிஞ்சி நிலத்துக்கு அணிகலன்களாகப் பெற்றும், திருமுல்லைவாயில் என்னும் க்ஷேத்திரத்தை-முல்லை நிலத்துத் திருப்பதியாகப் பெற்றும், திருப்பாசூர், திருவல்லம் ஆதிய தலங்களை-மருத னிலத்துத் தலங்களாகப் பெற்றும், திருமயிலை, திருவொற்றியூர் என்னுந் தலங்களை நெய்த னிலத்துத் திருப்பதிகளாகப்பெற்றும்-ஆகக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானிலமும் வானிலம்போற் சிறந்து புனிதத்தொடு விளங்குவது தோண்டைநாடு. பற்பல தேசங்களுக்கு மத்தியில் அமைந்துள தொண்டை நாடு பற்பல சங்கங்களுக்கு மத்தியில் வலம்புரிச் சங்கம்போல இலங்கும். தொண்டை நாட்டுப் பற்பல நகரங்களுக்கு மத்தியில் இருக்கும் காஞ்சி என்னும் ஸ்தலம் பற்பல வலம்புரிகளுக்கு மத்தியில் உள்ள சலஞ்சலம் என்னும் சங்கம்போல விளங்கும். அக்காஞ்சிமா நகரத்துள்ள பற்பல ஆலயங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள ஏகாம்பரேசுரர் ஆலயமானது பற்பல சலஞ்சலங்களுக்கு மத்தியிற் சிறந்த பாஞ்ச சன்னியம் போலத் திகழும். அப் பாஞ்ச சன்னியத்தில் அமைந்து விளங்கும் விலை வரம்பில்லாத சாதிமுத்தமே அவ்வாலயத்துள் வீற்றிருக்கும் ஸ்ரீ ஏகாம்பரேசுரர்.

''பற்பல தேய மெல்லாம் பாங்குடைத்
தொண்டை நாடு
பற்பல சங்க நாப்பட் படர்வலம்
புரியா மங்கட்
பற்பல நகர மெல்லாம் வட்டமாப்
படைத்த காஞ்சி
பற்பல வலம்பு ரிக்குட் சலஞ்சலப்
பணில மாமால்.
அத்திருக் காஞ்சி வைப்பின் அலகிலாத்
தலங்க டம்முட்
பத்திசேர் மாடக் கம்பம் பாஞ்சசன்
னியமா மந்த
வுத்தமச் சுரிமு கத்துள் விலைவரம்
புணராச் சாதி
முத்தமே ஒருமா மூலத் திருந்தருண்
முக்கண் மூர்த்தி.''

பிரளய காலத்திலும் அழிவின்றி விளங்குவதால் 'பிரளயசித்' என்ற பெயரும், பிரமன் பூசித்ததால் 'காஞ்சி' என்னும் பெயரும், மூன்றுலகங்களிலும் பெறுதற்குரிய பயனுகி விளங்குவதனுல் புவனசாரம் என்ற பெயரும், மும்மூர்த்திகளும் சிவத்தைப் பூசைசெய்து கொண்டிருக்கிறபடியால் மும்மூர்த்தி வாசம் என்ற பெயரும், விட்டுணு பூசித்தபடியால் விண்டுபுரம் என்ற பெயரும், கலியுகத்திலும் கலி புருஷனல் வரும் பீடைகள் அணுகாதபடி காத்தருளுவதால் கலிசித்து என்ற பெயரும், யுகமுடிவிலே சிவத்துக்கு நடன

சாலையாய் விளங்குவதால் இலயசித் என்ற பெயரும், சகல சித்திகளையுந் தருகிற படியால் சகலசித்திபுரம் என்ற பெயரும், பார்வதி தேவியார் தவஞ்செய்து அறம் வளர்த்த தலமாதலின் தபோமயபுரம் என்ற பெயரும், பிரமதேவன் சோமயாகஞ் செய்த தால் பிரமபுரம் என்ற பெயரும், முதற்பீடம் ஆன மேன்மையால் ஆதிபீடம் என்ற பெயரும், என்றுங் கன்னியாயுள்ள காமாட்சி தேவி காத்தருளுவதால் கன்னிகாப்பு என்றபெயரும், ஏகாம்பரேசுரரைத் தரிசிப்பவர் சிவாநந்த போகம் பெறலால் சிவபுரம் என்ற பெயரும் இத்தலத்துக்கு எய்திய.

வேதவடிவான ஒரு மாமரத்தின் நிழலில் சிவபிரான் எழுந்தருளியிருத்தலால், சுவா மிக்கு ஏகாமிரநாதன் (ஏகம் = ஒன்று, ஆமிரம் மாமரம்) என்ற திருப்பெயர் வந்தது. ஏகம்ப நாதன் என்னுந் திருமந்திரத்தைச் செபித்தலி னால் பெரும் பேறு கிடைக்கும் என்று காஞ் சிப்புராணம் முழங்குகின்றது. மூல காரணப் பொருளைச் சத்தியாகிய பார்வதிதேவி பூசித்த ஆலயம் திருவேகம்பம் மணலிலிங்க மாத லால் தலம் பிருதிவிஸ்தலம். திருவேகம்பம், கச்சபாலயம், கச்சிமயானம், காயாரோகணம், மகா காளேசம், கச்சிமேற்றளி, கச்சி அநேக தங்காவதம், பணாதரேச்சுரம், மணிகண்டேச் சுரம், வராகேச்சுரம், சுரகரேச்சுரம், பரசுரா மேச்சுரம் முதலிய அநேக சிவாலயங்களும், கா மாக்ஷி அம்மையாருடைய ஆலயமாகிய காம கோட்டமும், சுப்பிரமணிய சுவாமி ஆலயமா கிய குமரகோட்டமும், தியாகப்பொருப்பாகிய ஸ்ரீவரதராஜப் பெருமானது திவ்விய ஆலயமும், விளக்கொளி பெருமாள், பச்சைவண்ணப்பெரு மாள், பவளவண்ணப் பெருமாள், உலகளந்த பெருமாள், ஆதிய ஏனைய அநேக ஆலயங்க ளும் நிரம்பப்பெற்றுப் பத்திசெய்யும் மனது க்கு உத்தம தலமாய் விளங்கி மனோஹரமாயி ருக்கும் இக்காஞ்சிமா நகரத்தைத் தரிசனஞ் செய்து களிக்கும் பெரும்பேறு பெற்றவரே இவ்வுலகிற் பிறந்ததின் பயனைப் பெற்றவரா வர். உமாதேவியார் முப்பத்திரண்டறமும் வளர்த்தருளிய தலமும் இதுவே. க்ஷேத்திர வெண்பா பாடின ஐயடிகள் காடவர்கோனய னார் அரசாட்சி செய்திருந்த தலமும் இதுவே. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இடதுகண் பார்வை யைப் பெற்ற தலமும் இதுவே. திருக்குறிப் புத் தொண்டநாயனர், சாக்கியநாயனர் இவர் கள் முத்தியடைந்த தலமும் இதுவே. இங் ஙனம் அளவுபடாப் பெருமை வாய்ந்த இத் தலத்தைக் காண்டலும் முத்தி, கேட்டலும் முத்தி, நினைத்தலும் முத்தியே.

வ. சு. செங்கல்வராயன், எம். ஏ.

---

எல்லாம் உன் உடைமையே.—நான்எப்பொழுது முக்தனவேன்? 'நான்' போய்விட்ட பொழுது தான். நான், எனது என்பதே அஞ்ஞானம். நீ, உனதுஎன்பதுதான்மெய்ஞ்ஞானம். மெய்யன்புள்ள பக்தன், "ஈசா, நீ யொருவனே கர்த்தா, நீயே அனைத்தையுஞ் செய்கின்றாய், அடியேன் உன்கையில் கருவி மாத்திரமாயுள்ளவன். நீ ஏவுகின்றதை யெல் லாம் நான் செய்கிறேன். இவையெல்லாம் நின் பெருமையே. இவ்வீடும் பரிஜனமும் உன்னுடைய வையே, என்னுடையவையல்ல, நீ எப்படி விதிக் கின்றனையோ அப்படி நடப்பதற்கு மாத்திரந்தான் எனக்கதிகாரம்" என்று மறவாது கூறுகின்றான்.

"இந்த ஸம்ஸார விசாரங்களெல்லாம் என்னு டையவையல்ல. கடவுளைச் சேர்ந்தவையே. நான் அவரது கட்டளைப்படி நடக்கவே இங்கே வந்திருக் கிறேன்" என்று எப்பொழுதும் நினைக்கவேண்டும். இவ்வெண்ணம் நிலையூன்றிவிட்டால் பிறகு ஒரு வனுக்குத் தனதென்று சொல்லக்கூடியது ஒன்று மிராது.

—உபதேச ரத்நமாலை.

# இராஜாங்கமுறை ஸம்பந்தமான விஷயங்களைப் பற்றிய பிரதம கொள்கைகள்

## CIVICS: ELEMENTARY PRINCIPLES

### குடும்பம்—FAMILY

குடும்பம் என்றால் என்ன?

தானாகவே விஷயங்களைப் பற்றி யூகிக்கவும் தன்னைச் சுற்றிலுமுள்ளவற்றை அனுபவ சித்தமாய்த் தெரிந்துகொள்ளவும் ஆரம்பிக்கத் தகுந்த பருவம் ஒரு குழந்தைக்கு வந்ததும் முதலில் அதற்குத் தெரியவரும் மனுஷர்கள் யாவர் என்றால் அதன் தாய் தகப்பன் சகோதர சகோதரிகள் பாட்டன்மார்கள் சுருங்கச் சொல்லின் அதைப் பக்ஷமாயும் ஜாக்கிரதையாயும் பார்த்து வருபவர்கள் எல்லாருமே யாகும். அது நாளாவர்த்தியில் அவர்களின் சுக துக்கங்களில் பங்காளியாகத் தொடங்குகிறது. அவர்கள் அதை நேசிப்பது போல அதுவும் அவர்களைச் சீக்கிரத்திலேயே நேசிக்கிறது. அப்போது அக்குழந்தையும் குடும்பத்தின் அங்கத்தினராகும்.

பெற்றோர்களின் உடன் பிறந்தவர்கள் அவர்கள் பெண்கள் பிள்ளைகள் முதலியவர்களையும் வீட்டுக்கு அடிக்கடிப் பழக்கமாய் வருபவர்களையும் அது நாளடைவில் அறிந்து கொள்ளும். தன் பெற்றோர்கள் அவர்களிடத்தில் அதிக பக்ஷமாய் இருப்பதைக் கண்டு தானும் அவர்களை நேசிக்கும். இவர்கள் ஒரே வீட்டிலில்லாமற் போனபோதிலும் ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களே. இப்படிப்பட்ட ஒரே குடும்பத்தினர்களெல்லோருக்கும் ஒரே மூல புருஷர் தான். ஆனால் இவர்களின் காலத்திற்கும் பிற்கால ஒரே குடும்பத்தார்களின் காலங்களுக்கும் இடையிலுள்ள காலவரையறைகள் நீடித்தனவாயும் கொஞ்சம் முன்பின்னாயும் இருக்கும். அவர்கள் அப்போது இரத்த சம்பந்தமுள்ளவர்கள் அல்லது ஒரே வமிசத்தார் எனப்படுகிறார்கள்.

விரிவாக அருத்தம் பண்ணினால் ஒரு வீட்டைச் சேர்ந்த வேலைக்காரர்களையுங்கூட குடும்பத்தின் அங்கத்தினர்களாக மதிக்கலாம். உதாரணமாகத் தன் குழந்தைக்குப் பால் கொடுத்து வளர்க்கத் திறனில்லாத தாய் ஒரு செவிலித்தாயை வேலைக்கு வைத்துக் கொள்வாள். இவ்விஷயத்தில், குழந்தையைப்பற்றிக் கவலையெடுத்துக்கொண்டிருக்கும்செவிலித்தாய் அதனிடத்தில் சாதாரணமாகவே அதிக பட்சமாயிருப்பாள். இம்மாதிரியாகவே, ஒரேவீட்டில் வெகுகாலமாய் இருந்து, குழந்தைகள் பெரியவர்களாக வளர்வதைப் பார்த்து வருகிற வேலைக்காரர்களைப் பற்றியும் சொல்லலாம். அவர்களை ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களாக ஒவ்வொருவரும் மதிப்பார்.

பெரும்பாலும் ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களை ஒன்றுசேர்க்கும்பந்தமானது அதிக பட்சத்தினால்தான் உண்டாகிறது. அதைக் குறிப்பதற்குச் சில குறிப்பான பெயர்களை உபயோகிக்க வேண்டும். உதாரணமாக, பிதா அல்லது மாதாவின் நேசம் அவர்களுக்குக் குழந்தைகளிடத்திலுள்ள அன்பைக் காண்பிக்கிறது. புத்திரநேசமானது குழந்தைகளுக்குப் பெற்றோர்களிடத்திலுள்ள அன்பையும், கடைசியாக, சகோதர வாஞ்சையானது சகோதர சகோதரிகளுக்குள்ள அன்பையும் காட்டுகின்றன.

ஒருவரை ஒருவர் நேசிக்கும் படியாகவும் ஒருவன், தன்னையேதான் நேசிப்பதைக் காட்டிலும் அதிகமாகப் பிறரிடத்தில் நேசம் பாராட்டவும்,பிறர் சந்தோஷங்களைப் பார்த்து

ஆனந்திக்கவும், துக்கங்கள் கண்ட விடத்து விசனிக்கவும் ஏதுவாகும்படி அநேகர் ஒன்று சேர்ந்து வசிக்கும்போதும், தேவையான காலத்தில் மற்றவர்களைப்பற்றி ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ளவும், அவர்களை யாராவது எதிர்த்தால் அப்போது அவர்களைக்காப்பாற்ற வும், ஒருவன் தயாராயிருக்கும் போதும், பிறர் கஷ்டங்களை அனுபவிப்பதைப் பார்க்கி லும் தானே கஷ்டப்படுவது மேல் என்று ஒருவன் எண்ணும்போதும், எல்லோரும் ஒரு மித்து ஒரேமன முடையவர்களாய் நடக்கும் போதும் ஏற்படும் பந்தமே குடும்பமாகும்.

குடும்பமில்லாவிட்டால் குழந்தை ஜீவிக்க மாட்டாது. அது இயல்பாகத் துர்ப்பலமாயிருக் கிறது. மிகச் சிறிய பிராணியினின்றும் தன்னை இரக்ஷித்துக்கொள்ள முடியாதபடி அவ்வளவு பலஈனமாயிருப்பதனாலே பிறர் உதவியின்றி அன்னபானாதிகள் சம்பாதித்துக்கொள்ள முடி யாது. குளிரினின்றும் தன்னைக் காத்துக் கொள்ள முடியாது. ஆதரவற்றதாகி எல்லாவித ஆபத்துக்களுக்கும் இலக்காகும். தாய் இல் லாததினாலேயும், தகப்பன் இல்லாததினாலேயும் சுருங்கச் சொல்லின் குடும்பமில்லாததினால் அது உடனே இறந்துபோம்.

குடும்ப சம்பந்தத்தினாலுண்டாகும் பலன் நமது வாழ்நாள் முழுவதும் வியாபித்திருக்கி றது. மனசாக்ஷி சொல்வதை அறிந்து அதன்படி உங்களைச் செய்விப்பவர் உங்கள் பெற்றோர் களே. நீங்கள் இப்படி அல்லது அப்படிச்செய்ய வேண்டுமென்றும் இன்னது ஸரி இன்னது தப்பு என்றும் ஒவ்வொரு நிமிஷத்திலும் உங் களுக்குச்சொல்லுகிறார்கள். அவர்கள் உங்கள் நன்மையிலேயே கண்ணாயிருப்பதால் உங்கள் மனசாக்ஷியைப்பற்றித் தவறில்லாமல் முதல் முதல் நிர்ணயிப்பவர்களுமாவார். பிற்காலத் தில் பெரிய மனிதனான பிறகு ஜனங்களுடன் கலந்து தான் செய்யவேண்டிய கடமைகளைத் தவறின்றிச் செய்யும்படி குழந்தையா யிருக் கும்போதே ஒருவனைத் தயார் பண்ணுவன, குடும்பத்திலிருந்தபோது அவன் அடைந்த வழக்கங்களே. குடும்ப கௌரவத்தை மேலா கக்கொண்ட ஒரு சிறுவன் விஷயத்தில் நமக் குச் சங்கையில்லை: தன் பெற்றோர்களிடத்தில் பூரண விசுவாசமுடையவர்களா யிருப்பதால் அவர்களுக்கு அவமானம் அல்லது துக்கத்தை உண்டுபண்ணும் படியான எதையும் செய்யத் துணியான். பிற்காலத்தில் நேர்மையும் நாணய மும் ஆகிய குணங்கள் உங்களிடத்தில் இல்லா விடில் உங்கள் தகப்பன் உலகில் தலைகுனிந்து நாணுவர். உங்கள் தாய் உங்களுக்காகத் துக் கித்துக் கண்ணீர் சொரிவாள் என்று நீங்கள் நன்றாய்த் தெரிந்து கொள்ளுங்கள்.

ஆனாலோ இப்படிப்பட்ட குடும்பப் படிப்பில் லாத துரதிர்ஷ்டமுள்ள ஒரு குழந்தை அநேக அபாயங்களுக்கு மிகவும் உள்ளாவான். அவன் கல்வியறிவில்லாதவனாகிக் காலங் கழிப்பான். அவனிடத்தில் அருள்புரியும் புண்ணியவா னுடன் சகவாசம் பண்ணும்படியான பாக்கி யம் இருந்தாலல்லாமல் பிற்காலத்தில் துன் மார்க்கனாயு மாவான். அருமைக் குழந்தை களே, ஆகையினாலே பெற்றோர்கள் உங்களை நேசத்துடன் பாதுகாத்தல் பரம ஆனந்தம் என்று எப்போதும் நினைத்துக் கொள்ளுங்கள்.

C. S. சுந்தரம் அய்யர், பீ. ஏ., எல். டி.

பூர்ண ஞானிகளின் உபதேசம்.—பச்சைமா வைச் சுடசுட விருக்கும் நெய்யிற்போட்டால் ஒரு விதமான கொதிக்குஞ் சத்தமுண்டாகின்றது. மாவு நெய்யில் வேக, வேக, கொதிக்கும் சத்தமும் குறை கின்றது. மாவு நன்றாய்ப் பக்குவமானவுடன் கொதிப்பு சுத்தமாய்நின்று போய்விடுகின்றது. அது போலவே மனிதனுக்கு அற்புதமான ஞானமுள்ள வரையில் அவன் பிரசங்கஞ் செய்துகொண்டும் உபதேசம் பண்ணிக்கொண்டு மிருக்கிறான். பூர்ண ஞானோதயம் உண்டானபொழுது அவன் வீணடம் பாஞ் செய்வதைத் தவிர்த்து விடுகிறான்.

உபதேசரத்நமாலை.

# நக்ஷத்ர நிலையைக்கண்டு நாழிகை கணிக்கும் வகை

## FIXING TIME BY THE POSITION OF STARS

ககோள (celestial sphere) த்தில் உத்தர தக்ஷிண த்ருவங்களின் மத்தியில் கிழக்கு மேற்காய்ச் சக்ராகாரமாய் ஓர் 'ரேகை' இருப்பதாய் நினைத்துக்கொள்வோம். இது பூமத்திய ரேகை (equator) க்கு நேராய் (parallel) பூமியைச்சுற்றி இருக்கின்றது. இந்தக்கல்பனா (imaginary) ரேகை (line) க்கு வானசாஸ்த்ரஞ்ஞர்கள் (astronomers) ஆகாசமத்யரேகை (celestial equator) எனப் பெயரிட்டிருக்கிறார்கள்.

பூமியே நிலையிலிருப்பதாய் வைத்துக்கொள்வோம். சூரியன் பூமியைச்சுற்றிக் கிழக்கு மேற்காய், ஆகாசமத்ய ரேகா ப்ரதேசமார்க்கமாய்ச் சஞ்சரித்து, ஒரு வருஷத்தில் பூமியை ஒரு ப்ரதக்ஷிணம் செய்கிறான். இதுதான் 'சூரியவீதி' யெனப்படும். இந்த ஆகாசமத்ய ரேகையானது, மேல்நாட்டு வித்வான்களால் 360 அம்சங்களாகவும், நமது முன்னோர்களால் பாகம் ஒன்றுக்கு $13\frac{1}{3}$ அம்சங்கள்கொண்ட 27 நக்ஷத்ரபாகங்களாகவும், ராசி ஒன்றுக்கு 30 அம்சங்கள் அடங்கிய 12 ராசிகளாகவும், பிரிக்கப்பட்டிருக்கின்றது.* இந்த 360-அம்சங்கள் அடங்கிய ஆகாச மத்ய ரேகை வழியாய்ச் சூரியன் ஒரு தடவை யாத்திரை செய்யச் சுமார் 365-நாட்களாகின்றன. அதாவது ஒரு அம்சம் செல்லச்சுமார் ஒரு நாளாகின்றது என்று வைத்துக் கொள்ளலாம்.

இப்பொழுது நமது தேச வழக்கப்படி மேஷராசி அல்லது அசுவதி நக்ஷத்ரத்தின் முதல் அம்சத் (First point of Aries)தையே 360 அம்சங்களடங்கிய இந்த ஆகாச மத்ய ரேகா சக்ரத்துக்கு முதல் அம்சமாக வைத்துக் கொள்வோம்.

நமது தமிழ் நாட்டில் வழங்கும் ஒவ்வொரு தமிழ் வருஷம் சித்திரைமாதம் முதல் தேதியில் சூரியன் மேற்சொல்லிய முதல் அம்சத்துக்கு வருகின்றான். மாதம் ஒன்றுக்குச் சுமார் 30 அம்சங்கள் வீதம் சூரியன் யாத்திரை செய்கிறான். சித்திரைமாதம் முதல் தினத்திலிருந்து குறிப்பிட்ட தினத்தின் சங்கியையே அன்று சூரியனிருக்கும் அம்சமாகும். (சாதாரணமாய் மாதம் ஒன்றுக்கு 30 தினங்களாகவே கணக்கிட்டுக் கொள்வோம்). ஆகையால் கார்த்திகை மாதம் 19ம்-தினம் காலை 6 மணிக்கு, சூரியன் ஆகாச மத்யரேகா சக்ரத்தில் அசுவதி முதல் அம்சத்திலிருந்து $(7 \times 30) + 19 = 229$-வது அம்சத்துக்கு வந்து சேருவான்.

மேற் சொல்லியபடி சூரியனும் அதன் நிலையாகிய 229-வது அம்சமும் கார்த்திகை மாதம் 19-வது தினம் காலை 6 மணிக்குக் கீழ்த்திசையில் உதயமாய் மாலை 6 மணிக்கு மேற்குத் திசையில் அஸ்தமிக்கும். அத்தருண (மாலை 6 மணி) த்தில் சூரிய நிலையான $229 + 90 = 319$-வது அம்சம் நமது தலைக்கு நேர் மேலாய் உச்சமாகும்.

நக்ஷத்திர மண்டலங்களா லலங்கரிக்கப்பட்டுச் சக்ராகாரமாய் விளங்கும் ஆகாச மத்ய ரேகா ப்ரதேசத்தைப் பார்த்தால், அஃதோர் கடிகார யந்திரத்தின் முன் தகட்டின் (Dial of a clock) சுற்றுப்ரதேசம் (Circumference) போலவும், குறிப்பிட்ட நக்ஷத்ரமண்டலங்கள், அதன் சங்கியா அக்ஷரங்கள் போலவும், பார்ப்பவன் மத்தியிலிருக்கும் முள்ளு(hand)ப்போலவும் விளங்கும். கடிகார யந்திரத்தில் முன் தகடு ஸ்திரமாயிருக்க, முள்ளு (hand) சுற்றி

* குறிப்பு:—மேற் கூறிய அம்சம், ராசி, அல்லது நக்ஷத்ர சங்கியைகள் கிழக்கு முகமாய்க்கணக்கிடப்படும், (உ-ம் மேஷத்துக்குக் கிழக்கில் விருஷபம், அசுவதிக்குக் கிழக்கில் பரணி, 1-வது அம்சத்துக்குக் கிழக்கில் 2-வது அம்சம்.)

வரும். இந்த ஆகாசக் கடிகாரத்தில் சங்கியா சக்ரம் சுற்றிவருவதாயும் முள்ளு ஸ்திரமாயிருப்பதாயும் தோன்றும். (ஆனால் உண்மையில் பூமியிலிருப்பவன் பூமியுடன் சுற்றிவர ராசி சக்ரம் ஸ்திரமாக இருக்கின்றது.)

நக்ஷத்ரப் படங்களினுதவியாலும், நக்ஷத்ர மறியும் வித்வான்களி னுதவியாலும், சூரிய வீதிபக்கங்களிலுள்ள நக்ஷத்திரங்களின் பெயர்களையும், அவைகளிருக்கும் நிலே (அம்சங்) களையும் அறிந்துகொள்ளலாம்.

உதாஹரணம்.—ரோஹிணி நக்ஷத்ரம் 45-வது அம்சத்திலிருக்கின்றது. மேற்கூறிய கார்த்திகை மாதம் 19-வது தின இரவில் ரோஹிணி அல்லது 45-வது அம்சம் உச்சமாயிருந்தால் எந்நேரமிருக்கலாம்? அன்று மாலே 6-மணிக்கு 319-வது அம்சம் உச்சமாயிருந்ததல்லவா? அந்த 319-வது அம்சத்திலிருந்து ரோஹிணிநக்ஷத்திரமானது (360—319+45) =86-வது அம்சத்திலிருக்கின்றது. அதாவது 319-வது அம்சம் உச்சமான மாலே 6-மணிக்குப் பிறகு 86-அம்சங்கள் உச்ச ஸ்தானம் செல்லவேண்டிய காலம் இப்பொழுது செல்லாயிருக்கின்றது.

மேலும் 360-அம்சங்களடங்கிய சூரியவீதியைச் சூரியன் சுற்றிவர 24-மணி நேரங்களாகின்றன. அதாவது 1-அம்சம் செல்ல 4-நிமிஷங்களாகின்றன. மேற்கூறிய கணக்குப்படி 86-அம்சங்கள் செல்ல (86×4) 344-நிமிஷங்களா (அல்லது 5-மணி 44-நிமிஷங்களா) கும். அதாவது கார்த்திகை மாதம் 19-வது தினம் இரவில் ரோஹிணி நக்ஷத்ரம் உச்சமானல் அப்பொழுது 11-மணி 44-நிமிஷமாகும்.

(நக்ஷத்ரநிலே (அம்சம்) சரியாய் அறிய முடியாவிட்டால், ஒவ்வொரு நக்ஷத்ரபாகமும் சுமார் $13\frac{1}{3}$-அம்சங்களிருப்பதாய் வைத்துக் கொள்ளலாம்).

## முடிவு

மேற்கூறியவைகளினின்றும், அடியில் கண்ட விதிகள் அறிந்து கொள்ளலாம்.

A. சூரிய நிலேயை அறிந்து கொள்ள வேண்டும் (அதாவது குறிப்பிட்ட தினம் காலேயில் சூரியன் எந்த அம்சம் வந்திருக்கிறுன் என்பதை) உதாரணம் 229-வது அம்சம்.

B. அத்துடன் 90-ஐக்கூட்டுக

$[A+B(229+90]$

C. குறிப்பிட்ட காலத்தில் உச்சமாயிருக்கும் நக்ஷத்திரத்தைக்கண்டு, உச்சமாயிருக்கும் அம்சத்தைக் கணக்கிட்டுக் கொள்ளவேண்டும் (ரோஹிணி அல்லது 45-வது அம்சம்).

D. $C$ க்கும் $(A+B)$ க்கும் உள்ள வித்தியாச மறிந்து அதை அத்தனே அம்சங்களாகக் கொள்ளவேண்டும் 319......360......45 வித்தியாசம் 86 அம்சம்.

E. மேற்கூறிய வித்தியாசத்தை 4 ஆல் பெருக்கி வருவது அன்றுமாலே 6 மணிமுதல் சென்றிருக்கும் நிமிஷங்கள் (344)

அதாவது $[C\text{-}(A+B)] \times 4 =$ மாலே ஆறு மணிக்குப் பிறகு சென்றிருக்கும் நிமிஷங்கள்.

மேற் கூறிய விதிப்படி எந்த இரவிலும் எந்நேரத்திலும் உச்ச நக்ஷத்ர நிலேயைக் கண்டு சுமாராய் நாழிகை கணித்து விடலாம்.

R. S. நாராயணஸ்வாமி அய்யர், பி. ஏ., பி. எல்.

**Rao Bahadur Mr. L. C. Williams Pillai, B. A., Retired Inspector of schools, writes:—**

The "Viveka Bodhini" is a very readable Journal full of interesting matter written in chaste Tamil. As a means of disseminating valuable information on various subjects among the masses, it deserves the liberal support of the educated public.

***

**Rao Bahadur Mr. C. Nagoji Row, B. A., Retired Inspector of Schools, writes:—**

I have glanced through several numbers of the *Viveka Bodhini* and found them *interesting* and *instructive*.

# ரூபாமதி

**ROOPAMATI**

நன்கு விரிந்து வாசனைநிறைந்து சுற்றிவெகு தூரம் பரிமளிக்கச்செய்யும் பதிவிரதா தர்மமெனும் மலர் இவ்வுலகத்தில் எக்கண் அதி விமரிசையாய் மலர்ந்திருக்கிறது என நோக்கில், கன்னியா குமரிமுதல் ஹிமோத்பர்வதம் வரையில் அடங்கிய நமது இந்தியா நன்னாட்டிலேயே என்பது திண்ணம். இதிகாசங்களையும் பூர்வசரிதங்களையும் ஆராயின், நற்குண நன்னடக்கைக்குப் பேர்போன பெண்மணிகள் கணக்கற்றிருப்பதைக் காணலாம். அம்மாது சிரோமணிகளின் சரித்திரங்களைச் சுருக்கி நமது "போதினி"யில் மாதம்மாதம் விளம்பரித்தால் தற்காலத்துப் பாலகிகள் சந்துஷ்டியடைந்து பண்டைய இரத்தினங்கள்போன்று நடக்க முயன்று கற்பின் பெருமைக்கு மாட்சிமை தங்கிய ஆரியவர்த்தத்தை வாசஸ்தானமாக்கிச் சோபிக்கச் செய்வார்களென்பதற்குச் சற்றேனும் ஐயமில்லை.

உத்தர தேசத்தில் காளிநதியின் பக்கத்தில் விருக்ஷங்கள் அடர்ந்த ஓர் சிறுகிராமம் சாரங்கபுரம். கள்ளம் கபடம் என்பது அக்கிராம வாசிகளுக்குக் கிஞ்சித்தேனும் தெரியாது. இவ்வித புண்ணிய பூமியில் ரூபாமதி என்னும் ஓர் அணங்கு பிறந்தாள். கண்ணுக்கு லக்ஷணமாயும், எவரிடத்திலும் சாந்தமாயும், ஆன்றோரிடத்தில் வணக்கமாயும், தாழ்ந்தோரிடத்தில் காருண்யமாயும் இருந்ததுடன், கோகிலத்தின் குரலைத் தோற்கடிக்கச் செய்யும் இனியகுரல் அவளுடையது. நாளாக நாளாக அவள் கானத்தின் பெருமை எங்கும் பரவியது.

சங்கீதத்தில் தேர்ந்தவனும், அதிபல பராக்கிரமசாலியும், யுத்தத்தில் கீர்த்தியடைந்தவனுமான பாஸ்பஹாதூர், மாளவதேசத் தரசனை வென்று அவ்விராஜ்யத்துக்கு அதிபதியானான். கொடூரமாய் சண்டை செய்தல், உற்சாகமாய் வேட்டையாடுதல், நீதி வழுவாது இராஜதர்மம் நிறைவேற்றல்—இவ்விதகர்மங்கள் முடிந்தபின்னர், பஹாதூர் ஸித்தார் எனும் வாத்தியத்தை எடுத்துக்கொண்டு அதில் அனேக அருமையான கீர்த்தனங்கள் வாசித்து வாயாலும் பாடி பூலோகத்தைத் தெய்வலோகமாக்கிவிடுவர். அவர் சங்கீதத்தைக் கேட்டு மகிழாதவரில்லை. கிரேக்கருக்குள் ஆர்பியஸ் என்றொரு வித்வான் இருந்தாராம். அவர் கானம் செய்யும்போது மரங்களும் மலைகளும் உற்றுக் கேட்குமாம். உருக்கமான பாட்டு பாடி தர்ம ராஜாவைச் சந்தோஷிப்பித்துக் காலஞ்சென்ற தன் மனையாட்டியையும் திரும்ப அடையும் வரம் சம்பாதித்தாராம். ஆக, சங்கீதத்தின் சக்தியை அளவிட முடியுமோ? மனுஷ்யனுடைய சிற்றறிவால் அதன் பெருமையை அறியலாகுமோ? இத்தன்மைய சாஸ்திரத்தில் அதிக நிபுணரான பஹாதூர் ரூபாமதியின் கீர்த்தியைக்கேட்டு, அவள்மீது ஆசை கூர்ந்து, அவளை விவாகம் செய்தனர். ரூபாமதி மீதிருந்த பிரேமம் அளவற்றதாய் நவரத்தினங்கள் இழைத்த ஆபரணங்கள் அவள் தேகத்தில் சொரிந்து சந்தோஷிப்பார். ரூபாமதியும் கணவனிடத்து அதிக ஆசையாய் இருந்து அவர் காலாலிட்டதைத் தலையால் செய்வள். இவர்கள் ஆனந்திப்பதற்காக அமைத்த உத்தியானவனமும் நானாவிதமான புஷ்பங்களினாலும், செடிகளினாலும், கொடிகளினாலும், சவுக்காண்டியின் அலங்காரத்தாலும் கந்தர்வர் வஸிக்கத்தகும் ஸ்தலமாகவே தோன்றியது.

ரூபாமதியின் நற்குணங்கள் அனேகமாயினும் மிகுந்த துக்கத்துக்குக் காரணமான தோஷமொன்று அவளிடத்திருந்தது. கணவன் ராஜரீக கடமைகளைத் தவறின்றியும், தாமஸமின்றியும் நிறைவேற்ற வேண்டியவனென்பதை மறந்தவளாய் ஸதா தன் பக்கத்திலேயே அவரை வைத்துக்கொண்டு கானம் பண்ணி

ஸாஹித்யம் செய்து நாள்முழுவதும் கழித்து வந்தாள். ஆகவே, பஹாதூருக்கும் மனைவியைப் பிரிந்து இராஜாங்கத்தின் கடினவேலைகளை நடத்த மனது நாளுக்கு நாள் குறைந்தது. அரசனுடைய தீர்ப்புக்காக அமைச்சர்களும் காத்துக்காத்து அலுப்படைந்தார்கள். அயலரசர் அனுப்பிய தூதர்களும் அரசனைக் காணக் கிடைக்காமல் கோபத்தோடும் திரும்பினார்கள். பஹாதூருடைய ஸிம்மாஸனத்தில்புழுதிநிறைந்தது. தர்பார் மண்டபத்தில் ஆந்தைகள் கூடு கட்டின. இராஜ்யத்தில் தர்மம் குன்றி அதர்மம் ஓங்கியது. அனேக பிரஜைகள் அரண்மனை வாயிலில் காத்திருந்து நியாயம் பெறாமல் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் அரசனைச் சபித்துக் கொண்டு உறைவிடம் திரும்பினர்.

இங்ஙனம் ஏழாண்டுகள் கழிந்தன. இம்மர்மங்களை வேவுகாரர் அறிந்து டில்லி பாதுஷாவிடத்தில் மாளவதேசத்தை அபகரிக்க இதுவேஸமயமென்றறிவித்தார்கள். பாதுஷாவும் தன் பக்கத்திலுள்ள ஸர்தார்களில் அதிக நிபுணனை ஆதாம்கானுக்கு அந்நாட்டை ஜெயித்து வரும்படி உத்தரவளித்தார்.

ஒருநாள் பாஸ்பஹாதூர் தன் இராணியண்டை உட்கார்ந்து ஸித்தார், ஸாரந்தா, தபலா முதலிய வாத்தியங்களால் சூழப்பெற்று, ஆனந்தமாய் பாடிக்கொண்டு மெய்ம்மறந்திருக்கையில், வெளியே இரைச்சலும் அழுகைக்குரலும் கேட்டது. மந்திரிகள் நடுங்கிவந்து சத்துரு பட்டணத்துட்புகுந்து பிரஜைகளை இரக்கமின்றி ஸம்ஹாரம் செய்துவிட்டு அரண்மனைக்குள் புகும் சமயமென்று கதறினார்கள்.

பாஸ் பஹாதூர் விரைவாய்க் கவசம் பூண்டு தன் சேனைகளை வரவழைக்க, அவர்கள் கொஞ்சமாயும் ஒழுக்கமின்றியுமிருப்பதைக்கண்டுமனந் தளர்ந்து, விடாது யுத்தத்துக்குச் சென்றான். தானும் நன்கு போர் புரியவில்லை. தன் பதாதிகளையும் தைரியமாய்ச் சண்டைசெய்யத் தூண்டும் சக்தி தன்னிடத்தில் இல்லை. ஆகவே ஜனங்கள் சின்னாபின்னமாய் துரத்தியடிபட்டு வெட்டுண்டார்கள். கோயிலுக்குத் திரும்பிவர வழி காணானாய், உயிர் பிழைத்தல் பொருட்டு அருகிருந்த ஓர் காட்டுக்குள் ஓடினன் அவனுக்கு நேர்ந்த கதி இன்னதென ஒருவரும் அறிந்திலர்.

தன் நாதன் ஜயபேரிகையுடன் திரும்புவரென நிச்சயித்து வழிபார்த்திருந்த ரூபாமதி, வாயிலண்டை பழக்கமில்லாத காலடி சப்தம் கேட்க, பயந்து நடுங்கினாள். க்ஷணத்தில் ஆறு அடி உயரமும் அதிக பலசாலியுமான ஒரு இஸ்லாமியன் எதிர்வந்து நிற்க அவள் உடம்பு உதறியது. தவிர, "பெண்ணே பயப்படுதல்ஒழி. உன் அழகைக் கண்டு ஆனந்தித்தேன். உன் புருஷன் வெட்கமின்றி யுத்தத்தில் புறங்காட்டி ஓடிவிட்டான். நானே ஜயவீரன். இன்றைக்கே என்மனைவி ஆகி விடலாம். துக்கியாதே" என்று ஆதாம்கான் உரைக்கவும், ரூபாமதி மதிகலங்கி வேரற்ற மரம்போல் கீழே விழுந்தாள். சிறிதுநேரம் கழிந்தது. ஆதாம்கானும் வெளியே சென்றான். ரூபாமதி, பிரக்ஞை வந்து, "பிராண நாதா!, ப்ரபூ, என் செய்வேன்? உம்மை நாதன் என்றழைத்த நான், இர்திரனையினும், சந்திரனையினும், மற்றொருவனை அப்படி அழைப்பேனோ? நீர் மரித்திருந்தால் உம்மோடு நானும் உயிர் துறப்பல்" என்று மனோதைரியம் செய்துகொண்டு பிரலாபித்தாள்.

பகலெல்லாம் கழிந்து இரவு அணுகும் சமயமானது. "சீக்கிரம் ஆதாம்கான் வருவன். மனதுசகியாத துஷ்கர்மத்துக்கு இசையும்படிப் பலவந்தம் செய்வன். அவனிடத்தில் ஹிதம் சொல்லி அவனை ஏமாற்றுதலே சரி' எனத் தீர்மானித்து, தாதிகளை அழைத்து, உயர்ந்த ஆடை ஆபரணங்களால் தன்னை அலங்கரிக்கச் செய்து, ரம்பையோ ஊர்வசியோ என்று பார்த்தவர் திகைக்கும்படி, ரூபாமதி நின்றாள்.

பின்னர் தன் கட்டிலில் சயனித்தாள். ஆதாம் காணும் விலையுயர்ந்த ஆடை உடுத்து, அத்தர் புனுகு முதலிய வாசனைத் திரவியங்களை தேகத்திலும்ஆடைகளிலும் தடவி, தனக்குஅன்றைக்குண்டான அதிர்ஷ்டத்துக்காகக் களித்து, ஆனந்தம் பொங்க, ரூபாமதி படுத்திருந்த கட்டிலண்டை வந்து, ஆவல் மிகுந்து, விலையிட முடியாத பல மோதிரங்கள் செறிந்த அம்மாதின் சிறு விரல்களை மெதுவாய்த் தொடவும், கை அல்லித்தண்டுபோல் குளிர்ந்திருப்பதைக் கண்டு துணுக்குற்று, மார்பைத்தொட அவ்விடமும் பிராணஸ்வரூபம் இல்லாதது கண்டு "ஐயோ! மோசம் போனேன்" எனத்திரும்பத் திரும்பக் கதறி அழுதான். மார்பில் அடித்துக்கொண்டான்; தலையைச் சுவரில் மோதிக் கொண்டான்; உடுத்திருந்த பட்டு பீதாம்பரங்களைக் கிழித்தெறிந்தான்; அடியற்ற பனைபோல் கீழே சாய்ந்தான்.

ரூபாமதியோ, பதிவிரதா சிரோமணியாதலின், கொடூரமான விஷம் உண்டு ஈசுவரன் பாதாரவிந்தத்தில் அடைந்துவிட்டாள். இப்பெண் நடத்தையே நடத்தை! இவள் கற்பே கற்பு! இந்திய ஸ்திரீ ரத்னங்களுக்கு இச்செல்வம் இருந்தால்போதும். நகைவேண்டாம்; நாணயம் வேண்டாம். நல்நடத்தை நற்குணம் இருந்து, ரூபாமதிபோன்று நடந்தால், உலகத்திலுள்ளஜாதியாரெல்லாரிலும் அவர்கள் தாமே மேலோராவர். புருஷர்களும் சரிவர நடக்க முயலுவர். தேசம் ஓங்கும்; ஈசுவரன் களிப்பார். வேறென்ன வேண்டும்?

எஸ். வி. ரங்கசாமி ஐயங்கார். பி. ஏ.

---

குற்றத்தைக் கௌரவமாய் ஒப்புக்கொள்.— இதைத்தான் எவரும் எளிதில் செய்கின்றதே இல்லை. பல பெரிய மனிதர்களுங்கூட ஏதாயினுமொரு குற்றமுள்ள காரியத்தைச் செய்து விட்டு அதன் பிறகு அது சரியானதென்று நிரூபிக்க எவ்வளவோ குயுக்திகள்செய்வார்கள். சிலர் தாங்கள் செய்யும் சிறு தொழில்களில் குணமிருக்கின்றதாக வாதிப்பார்கள். ஒரு காரியம் குற்றமென்று நமக்குத் தெரிந்த பிறகு செய்தது குற்றந்தான் என்று நாம் ஒப்புக்கொள்வது எவ்வளவு மேன்மை? அவ்வாறு ஒப்புக்கொள்ளாமல் கோணலான வழியிற்போவது நமக்குஒருபொழுதும்கௌரவத்தைஉண்டாக்கமாட்டாது

## ஈனக் ஆர்டென் *

### ENOCH ARDEN

கனைகடலாற் சூழப்பெற்ற ஆங்கிலேய தேசத்தில் புராதன காலத்தில் ஒரு துறைப் பட்டணமிருந்தது. கடற்கரை முற்றும் மணற் குன்றுகளால் ஆக்கப்படாமல், கற்பாறைகளால் ஆக்கப்பட்டிருந்தன. அப்பாறைகளில் சிறு குகைகள் அநேகம் இருந்தன. அவ்விடத்திற்கு அப்பட்டணத்திலுள்ள இளங் குமரர்களும் இளங் குமரிகளும் காலையிலும் மாலையிலும் வந்து பற்பல வகையில் விளையாடிக் களித்து வீடு செல்வார்கள். துறையிலிருந்து நேரான தெரு ஒன்று இருந்தது. தெருக்கோடியில் ஓர் யந்திரசாலை யமைக்கப் பெற்றிருந்தது. அந்த யந்திரத்தில் ஊராருணவுக்கு வேண்டிய கோதுமை மா முதலானவைகள் செய்யப் பட்டு வந்தன. அந்நகரத்தில் இருந்தவர்கள் மகதைச்வரிய வந்தர்களாயில்லாவிடினும், ஒவ்வொருவரும் தம்மாலியன்ற அளவு முயன்று தமது குடித்தனத்திற்கு வேண்டிய பொருளைத் தேடிச் சுகித்திருந்தார்கள்.

கடற்கரையில் மேற்கூறியவாறு தினந்தோறும் விளையாடினவர்களில் ஈனக் ஆர்டென், பிலிப் ரே, என்ற ஆண்மக்களிருவரும் அன்னி லீ என்னும் பெண்ணொருத்தியும் இணை பிரியாத தோழர்களா யிருந்தார்கள். விளையாடிக் கொண்டிருக்கையில் ஒருநாள் அன்னி லீ என்பவள் ஈனக் ஆர்டெனுக்கு மனைவி போலவும், மற்றொரு நாள் பிலிப் ரே என்பவனுக்கு மனைவிபோலவும், புருஷர்கள், முறையே விருந்தினர்கள் போலவும் பாவித்து விளையாடி வந்தார்கள்.

ஈனக் ஆர்டென் ஒரு மாலுமியின் மகன். அவனுக்குப் பெற்றோரிருவருமில்லை. ஒரு சிறுவீடும் சொற்ப பொருளுந்தவிர வேறு பிதுரார்ஜித ஸொத்து கிடையாது. இவன் சரீரம் வஜ்ர சரீரமென்னலாம்; எவ்வளவு உழைப்பிற்கும் அஞ்சாது. இவன் மனத்தின்

* மஹா கவியாகிய டென்னிஸன் பிரபு இங்கிலீஷ் பாஷையில் இயற்றிய "ஈனக் ஆர்டன்" என்னுங் கதையைத் தமிழ் நாட்டாருபயோகத்திற்காக மொழிபெயர்த்தது.

உறுதியோ எல்லோராலும் மெச்சத்தக்கது. ஏழு வயதாயிருக்கும் போதே அன்னி லீ என்பவளை மணம் புரியவேண்டுமென்று சங்கற்பஞ் செய்தான். இவன் திடமன முடையவனென்பது பின்னால் விளங்கும்.

பிலிப் ரே என்பவன் யந்திரசாலை யுடையவன். ஏகபுத்திரன்; பொருள் படைத்தவன். அவனுக்கு வாழ்க்கைப்படுகிறவள் நினைத்தவற்றை யெல்லாம் பெறலாகும். அன்னி லீயின் உத்தம குணங்களும் வனப்பும் ரேயினுடைய மனத்தையுங் கவர்ந்தன. இவன் நிகர்வி; உட்கருத்தை வெளியிடின் எவராவது பரிகாசம் பண்ணுவார்களோ வென்று மிகவும் பயந்தவன். இவன் பிதா ஜீவந்தரா யிருந்தார்.

அன்னி லீ சிறுபெண்ணாயினும் மேற்கூறிய இரண்டு ஆண்மக்கள் மனம் சற்றுங் கோணாமலே இளவயதில் நடந்துவந்தாள். ஆர்டென் பலமுறையும் "உன்னைத் தவிர்த்து வேறொருத்தியையும் நான் மணம் புரிவதில்லை" என்று தன் பிரதிக்கினையை லீயிடத்தில் சொல்லுவான். • ரேயோ, ஆர்டெனிடத்துள்ள அன்பினாலும் அச்சத்தினாலும் தன் மனோபீஷ்டத்தை வாக்கால் வெளியிடாமல் முக மலர்ச்சியாலும் கண்ணோக்காலும் அடிக்கடி தெரிவிப்பான். இந்த தர்ம ஸங்கடத்திலகப்பட்ட லீ இருவரையும் ஸமரஸப்படுத்தி மனஸ்தாபத்திற்கு இடமில்லாமல் பார்த்து வந்தாள்.

வயது ஏற ஏற லீயின் வனப்பும் வளர்ந்து வந்தமையால் இவர்களிருவருக்கும் அவளிடத்தில் பிரேமை மிகுந்தது. ஆர்டென் மனக்கருத்தை வெளியிடுவான். ரே சும்மா பார்த்துவிட்டு மாத்திரம் போவான்.

லீ ஏழைப்பெண்ணல்லள்: அவளுடைய அந்தஸ்திற்குத் தக்க புருஷனைத்தான் மணஞ்செய்தல் வேண்டும். ரே தனவானாயிருந்தமையால் லீ அவனுக்கே வாழ்க்கைப் படலாமென்று ஆர்டெனுக்குச் சந்தேகம் தோன்றினமையால், ஆர்டென் தக்க வீடுவாசலும் போதுமான திரவியமும் தேடவேண்டுமென்ற ஆவல் மேலிட்டு, தன் பிதாவின் கப்பலோட்டுந் தொழிலைச் செவ்வையாய்ப் பயின்று தூரதேச யாத்திரைகள் போய்ப் போதுமான பொருளைத் தேடிவந்து ஒரு அழகான வீட்டைக்கட்டி அதில் கிருஹகிருத்தியத்துக்கு வேண்டிய தட்டுமுட்டு ஸாமான்கள் எல்லாவற்றையுஞ் சேர்த்து வைத்தான்.

நாம் மேற்கூறிய துறைக்குச் சற்று தூரத்தில் ஒரு முந்திரிக்காடுண்டு. அது ஒரு சிறு குன்றின் பின் புறத்திலிருந்தது. ஊரார் அக்குன்றை ஏறித்தான் காட்டிற்குப் போகவேண்டும். வருஷத்தில் ஒருமுறை ஊரிலுள்ள சிறுவர் சிறுமியரெல்லாம் ஒன்று சேர்ந்து முந்திரிக்கொட்டை பொறுக்கப் போவதுண்டு. இந்தக் கதா நாயகர்களாகிய ஆண்மக்களிருவரும் அன்னி லீயும்ஒன்றாகப்போவதற்குஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. அன்று ரேயின்பிதாவுக்கு உடம்பு அசௌக்கியமாயிருந்தமையால்,குறித்த நேரத்தில் ரே வரமுடியவில்லை. ஆர்டெனும் அன்னி லீயும் சேர்ந்து போனார்கள். மலையின் உச்சியில் ஏறிக் களைப்பாறுங்காலத்தில், ஸமீபத்தில் ஒருவருமில்லாமையால் ஆர்டென் அன்னி லீயை நோக்கி, "கண்மணியே, ஏழாவது வயது முதற்கொண்டு உன்னைவிட்டு வேறொருவரையும் கலியாணஞ் செய்துகொள்வதில்லையென்பது என் ஸங்கல்பமென்று உனக்கு நன்றாய்த்தெரியும். அன்றுமுதல் உன் மனங் கோணாமலிருத்தலுக்கே முயற்சிசெய்து வந்திருக்கிறேன். முதலில் ஏழையாயிருந்த நான் என் முயற்சியால் ஒரு அழகான வீட்டையுங் கட்டி, அதற்கு வேண்டிய ஸாமான்களையுஞ் சேகரித்து, ரொக்கப் பணமும் சிறிதுமிகுத்து வைத்திருக்கிறேன். நீயும் நானும் தனியேயிருந்து பேசுவதற்கு இன்றுதான் ஸமயம் வாய்த்தது. உன் மனோபீஷ்டம் எப்படி? இப்போதே சொல்லவேண்டும்," என்றான். அன்னி லீ சற்று யோசனை செய்தாள். என்றும் அவளுக்கு இல்லையென்று சொல்லி, வாடிக்கையில்லை. ரேயினிடத்தில் விச்வாஸம் உண்டு. ஆயினும் அன்று ரே கூட இல்லாமற்போனது அவனுடைய துரதிருஷ்டந்தான். திகைத்து ஒன்றும் பேசாமலிருந்து மனத்தைத் திடம் பண்ணிக்கொண்டு, "நண்பா!, ரேயும், நீயும் வெகுநாளாய் என்னிடத்திற் காதல் கொண்டிருக்கிறீர்கள்! உங்களிருவரில் நான் ஒருவரைத்தானே மணம் புரியலாம். நீ இன்று என்னுடன் தனிமையாயிருந்து பேசும்படி கடவுளின் ஆக்கினையிருக்கிறதுபோலும், • ரே மனஸ்தாபப் படுவான். நான் செய்யக் கூடிய

தொன்றுமில்லை. எல்லாங் கடவுள்செயல்,'' என்று சொல்லித் தலைகுனிந்திருந்தாள். ஆர்டெனும் சற்றுநேரம் மௌனமாயிருந்து ''அன்னி லீ! உன்னுடைய பேசாமையே ஸம்மதமென்று கொள்கிறேன். என் பிரதிக்கினை நிறைவேறிற்றென்று உன்னை முத்தமிடுகிறேன்,'' என்று முத்தமிட்டான். அன்னிலீயும் ஆர்டெனை முத்தமிட்டாள். இவ்விருவரும் முத்மிட்டுக்கொண்டிருத்தலை நேரஞ் சென்றுவந்த ரே கண்டான். அவன் மனம் அந்த ஸமயம் எவ்வாறிருந்த தென்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. ரேயின்கதி இலவு காத்த கிளிபோலாயிற்று. மலையின்மேலேறி அவ்விருவரும் இருந்த இடத்திற்குப் போக ரேய்க்கு மனம் வரவில்லை. காலும் நடுங்கினது. அநேக காலம் தனதென்று நிச்சயஞ்செய்திருந்த பொருள் பிறன் பொருளாயிற்று. புருஷனும் ஸ்திரீயும் முத்தமிட்டுக் கொண்டால் அதுவே கலியாணத்திற்கு அங்குரார்ப்பணம். அன்னிலீயும் பேச்சுத் தவறாதவளென்று ரேய்க்கு நன்றாய்த் தெரியும். குரங்கு சாகக்கொடுத்த ஆண்டி போல ரே வீட்டுக்குத் திரும்பினான். இதற்குள். அஸ்தமன காலமும் வந்துவிட்டது. ஆர்டெனும் அன்னி லீயும் கைகோத்து மலையினுச்சியிலிருந்து கீழிறங்கி வந்தார்கள். ஆர்டென் அன்றடைந்த மனக்களிப்பை அளவிட முடியாது. அன்னிலீயும் முகத்தில் திருப்தி கொண்டவளாய்த்தான் தோன்றினாள். ரே திரும்பிப் போகையில், ''எனக்கு இடம், பொருள், ஏவல் யதேஷ்டமாயிருந்தும் அன்னி லீ என்னை விரும்பினாளில்லை. பிரதிதினம் கூலிவேலை செய்து ஜீவனம்செய்யும்என் நண்பன் ஆர்டெனுக்குத்தானே அவள் முடிவில் வசப்பட்டாள். பெண்களின் மனதைக் கவருதல் பணம் மாத்திரமல்லவென்று இன்றுதானறிந்தேன். திடசீரமும் பேசுந்திறமையும் இல்லாவிடில் மனிதன் இவ்வுலகில் முன்னுக்கு வர மாட்டான். ஆர்டென் வாயுள்ள பிள்ளையாயிருந் தமையால் காரியம் சாதித்துக் கொண்டான். கடவுளுடையபெருங்கருணையால் அவ்விருவருடையஐக்கியத்திற்கு ஒரு கேடும் வராமலிருக்க,'' என்று சொல்லிக் கொண்டே போனான். ரேய்க்கும் அற்ப குணத்திற்கும் வெகுதூரம்.



மேற்கூறிய காரியங்கள் நடந்து ஒருவாரத்திற்கெல்லாம் ஆர்டேனுக்கும் அன்னிலீய்க்கும் அவ்வூர்த் தேவாலயத்தில் மணி முழக்குடன் விவாகம் நடந்தது. ரேயும் கலியாணத்திற்குப்

போய் ஸந்தோஷம் விசாரித்து வந்தான்.

மணமகனும் மணமகளும் கிருஹப்பிரவேசம் செய்து அந்நியோந்நியமாய்க் காலங் கழித்து வந்தார்கள். விவாகமாய் இரண்டு வருஷமானபிறகு அவர்களுக்கு ஒரு பெண் பிறந்தது. சந்திர பிம்பம் போன்ற அதன் முகத்தைப் பிதா மாதாக்கள் பார்த்துக் களித்தார்கள். நாலாவது வருஷத்தில் ஒரு ஆண் பிள்ளை பிறந்தது. ஆர்டேனுடைய அந்தரங்கமான இச்சைகளெல்லாம் பூரணமானதுபோ லிருந்தது. ஸம்ஸாரம் பெருகப் பெருக ஆர்டேனுடைய முயற்சியும் அதிகரித்தது. தானும் தன் மனைவியும் உயர்ந்த படிப்பு இல்லாதவர்களா யிருந்தமையால், தமது மக்களுக்கு அந்தஸ்துக்கு மேம்பட்ட கல்வியைத் தரவேண்டு மென்று அவ்விருவரும் கவலை கொண்டு ஒரு காசேனும் வீணிற் செலவு செய்யாமல் மிகுத்து வந்தார்கள். அன்னிலீ தன் மகளுக்குத் தானே நெடுங்கணக்கு முதலானவைகளையும், வேத புஸ்தகத்திலுள்ள சரித்திரங்களையும், விளையாட்டாகவே கற்பித்து நல்லொழுக்கத்தினின்று வழுவாமற் பாதுகாத்து வந்தாள். புருஷன் தோட்டத்தில் இம்மியும் வீண்போகாமல் கவனித்து, அவன் களைத்து வந்தபோது அவனுக்கு ஆறுதல் செய்து தக்க உணவுகளைக் கொடுத்துத் "தாய்க்குப் பின் தாரம்" என்னும் பழமொழியின் உண்மையை விளக்கி வந்தாள். ஊரிலுள்ளவரெல்லாம் "ஆர்டேன் தான் கணவன் என்னும் பெயருக்குரியவன், அன்னிலீ தான் மனைவி என்னும் பெயருக்குரியவள்," என்றார்கள். விவாகமான ஆறாவது வருஷத்தில் அவர்களுக்கு வேறொரு ஆண்பிள்ளை பிறந்தது. எப்போதும் ஒருவனுக்குச் சுக்கிர தசையாயிருக்க மாட்டாதன்றோ? பிறந்தபிள்ளை நோய்கொண்டபிள்ளை. அதை இரவும் பகலும் விழிப்பாய்ப் பாதுகாக்க வேண்டியதாயிற்று. பிதா மாதாக்களுக்கு மனக்கவலை பெருகிற்று; ஆயினும் ஆர்டேன் சற்றேனும் ஊக்கம் குறையாமல் தன் தொழிலைச் செய்து வீட்டுக்கு வேண்டியவற்றைத் தேடி வந்தான்; அன்னிலீ புருஷனைக்கண்ணுற்ற போதெல்லாம் புன்முறுவல் கொண்டவளா யிருப்பாள். (தொடரும்.)

கே. வேங்கடராமய்யர், பி. ஏ.

# பித்ரு வாத்ஸல்யம்

## FILIAL LOVE

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'

தாய் தந்தையரிடத்து நாம் காட்டவேண்டிய விச்வாஸத்தைக் காட்டிலும் சிறந்ததொன்று இந்நிலவுலகத்திலில்லை. தாய் தந்தையர்களுடைய வார்த்தையைக் காட்டிலும் சிறந்ததொன்று குழந்தைகட்கில்லை.

"தந்தைசொன்மிக்க மந்திரமில்லை
தாய்சொற் சிறந்தொரு வாசகமில்லை."

தந்தை தாயரைப் பணிதலே மேலானதென்று சிறந்த வேதங்களும் கூறுகின்றன. பண்டைக்காலத்து நல்லோர்களில் எத்தனையோ பேர் தம் தாய் தந்தையருக்கு மிகவும் கீழ்ப்படிந்து நடந்தார்கள் என்று அநேக சரித்திரங்கள் கூறுகின்றன. ஓர் வேடன் தன் தந்தை தாயர்களை நன்கு பணிந்து ஒழுகி தன் நற்றன்மையிலும் ஞானத்திலும் சிறந்து விளங்கினனென்பது அவனைப் பற்றிய கதையொன்றினால் நன்கு அறியக்கிடக்கின்றது.

ஒருகாலத்தில் காளிஷ்கா என்னும் பெயருடைய விப்ரனொருவ னிருந்தான். அவன் வேதத்தில் கரை கண்டவனாய், அனேக யாகங்களை நன்கியற்றியவன். ஆசாரமின்னதென்பதை அவன் எட்டுணையேனும் அறியான். மிதிலா நகரம் செல்லின், அங்கு ஒருவேடன் உளனென்றும், அவன் ஆசாரத்திற் சிறந்து விளங்குபவனென்றும், அன்னோனிடமிருந்து ஆசார தருமத்தைக் கேட்கலாகுமென்றும் இவ்வந்தணன் கேள்விப்பட்டான். அவ்வாறே இவன் அந்நகரஞ்சென்று ஆண்டுள்ள உன்னதமான மாட மாளிகை கூட கோபுரங்களையும், அரண்மனைகளையும் செல்வத்திற் சிறந்த ப்ரபுக்களையும் பார்த்தான். சீரான பாதைகளும், கடைவீதிகளும், யானைகளும், இரதங்களும், மற்றும் பல பொருள்களும் சகல ஸாம்பிராஜ்யங்களும் நிறைந்து விளங்கும் மிதிலா நகரை ஜனக மஹாராஜன் ஆண்டுவந்தனன். ஆங்கு சென்ற காளிஷ்கா ஆசாரத்திற் சிறந்த வேடனைப்பற்றி வினவலும், வேடனிருக்குமிடமும் அவனுக்கு அறிவிக்கப்பட்டது. கடைசியில் மான் எருமை முதலிய மிருகங்களின் இறைச்

சிகளைக் கடைவீதியில் விற்பனை செய்துவரும் வேடனைக் கண்டனன். அவனைச் சுற்றிலும் அநேகமனிதர் கூடி நிற்றலும், இவ்வந்தணன் சிறிதுதூரத்திற்கப்புறத்தில்விலகியே நின்றான்.

பிறகு வேடன், அந்தணன் தன்னைப் பார்க்க வந்துளன் என்பதை அறிந்துகொண்டு, உடனே காஷிஷ்காவினிடம் வந்து சேர்ந்து "ஏ! தூயோனே! நீர் வந்தகாரியம் இன்ன தென்பதை யுணர்ந்தேன், இவ்விடம் அக்காரியத்திற்குரிய இடமன்று. நீர் என்னுடன் என் நகரத்திற்கு வருவீராக" என்றான்.

வந்த காரியத்தைத் தான் சொல்லாமலே யுணர்ந்து சொன்ன வேடன் வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலேயே மிகுதியும் வியப்படைந்தவனாய், மிகவும் ஸந்தோஷித்தவனாய் அவனகம் நோக்கிச் சென்றான். ஆங்கு சென்றதும் வேடன், அவ்விப்ரனுக்கு அர்க்ய பாத்யாசமனங்களும், ஒரிருக்கையு மீந்தான். அந்தணனும் வேடன் அவ்வாறான வ்யாபாரம் செய்தல் அத்துணை ஸரியானதாகக் காணப்படவே யில்லை என்று கூறி, அவ்வாறான வ்யாபாரத்தில் தலைப்பட்டுழலுவதன் காரணத்தைக் கூறும்படி கேட்டான்.

"பாம்பரை யாண்டியோ
பஞ்சத்திற் காண்டியோ"

"இவ்வியாபாரம் எனது பரம்பரை பாத்யத்தில் எனக்கு வந்துள்ளது; என்னுடைய வ்யாபாரத்தை எனதுதாய் தந்தையர் இதற்கு முன் செய்து வந்தார்கள். எனது ஜாதித் தொழில் இது; நான் வெகு ஜாக்ரதையாய்ப் பெரியோர்களுக்குக் கீழ்ப்படிந்து, ஸத்ய ஸந்தனாக ஒழுகி, மாற்றானைக்கண்டு பொறாமைப்படாமலுமிருந்து வாணாளைக் கழிக்கிறேன்.

"ஊனைத்தின் றூனைப் பெருக்காமை
முன்னினிதே" * * * என்றபடி

நான் மாத்ரம் புலால் உண்பதில்லை, நான் பூர்வ ஜன்மாந்த்ர கர்மபலத்தினால் இக்கொடிய கார்யத்தைச் செய்யப் பிறந்துளேன். ஆகையால் எவரும் ஜாதித்தொழிலை விடல் தகாது" என்று வேடன் கூறினான். பிறகு வேடன் ஆசார மின்னதென்பதைப்பற்றி அந்தணனுக்கு வெகுவாகக் கூறினான்.

நான் சொல்லும் சிறந்த ஆசாரத்தை நீவிர் நமது கண்களால் பார்க்க விரும்பினாலும் இவ்விதமான இந்த இன்பதசையை நான் அடைந்த விதத்தைக் கேட்க விரும்பினாலும் என்னகத்தின் உள்ளறைக்கு வரலாம், என்று சொல்லி, அந்தணனை அழைத்துச் சென்றான். வேடன், அந்தணனைத் தன்னகத்திலுள்ள அழகானதோர் பாகத்திற் கழைத்துச் சேறலும் ஆங்கு மனங்கவரும்படியான அழகான அறைகளும், அழகான ஆஸனங்களும், புஷ்பங்களும், வாஸனை த்ரவ்யங்களும் நிறைந்திருந்தன. ஆங்கு தூய வெண்மை வஸ்திரம் தரித்து அவனுடைய பெற்றோர்கள் ஸௌகர்யமாய் வீற்றிருந்தார்கள். வேடன் அவர்களைக் காண்டலும், தண்டாகாரமாய்ப் பூமியில் விழுந்து பாதஸேவை புரிந்தான். மஹா ஜமதக்நி குமாரனாகிய பரசுராமன் தன் தாய் தந்தையர்களுக்கு எள்ளளவேனும் குறைவில்லாது உபசரிக்கப் பாடுபட்டதை விட அதிகமாகப் பாடுபடுகிற ஏ! திருக்குமாரா! உனக்கு விசேஷமான மங்களாசீர்வாதம்! தீர்க்காயுஷ்மான்பவா ! புத்திரோத்திராபி விருத்தி ரஸ்து! என்று அவனுக்கு ஆசீர்வசனம் கூறினார்கள். பின்னர் வேடன் அந்தணனைத் தாய்தந்தையர்களுக்குக் காண்பித்தலும் அவர்கள் அந்தணனுக்கு விதிப்படி வந்தனை புரிந்து உபசார வார்த்தைகள் கூற அந்தணன் அவர்களது யோகக்ஷேமங்களைப் பற்றிக்குசல ப்ரச்னம் செய்தான். "ஓ! அறிவிற் சிறந்த அந்தணனே! இவர்கள்தான் என்னுடைய பெற்றோர்கள்! இவர்களைத்தான் நான் தெய்வம் போலப் பூஜியாநிற்கின்றேன். யான் கடவுளர்க்குரிய எக்கார்யத்தையும் இவர்களுக்கு அர்ப்பணம் செய்கின்றேன். பத்ரபுஷ்பம், பழம், மணிகள், தேடி இவர்களுக்கு அர்ப்பணம் செய்து ஸந்தோஷிப்பிக்கிறேன். வேதாக்நி மூன்று, யாகம், வேதங்கள் இவைகளைப்போல இவர்களைநான்கருதுகிறேன். என்னிடத்திலுள்ள ஸகல பொருள்களும் அவர்களுக்குரிய கடமைகளைச் செய்வதற்காகவே இருக்கின்றன. அவர்களுக்கு முறைப்படி அர்க்ய பாத்யாசமனம்வழங்கி அவர்களுக்கு ஆஹாரம் அளிக்கிறேன். எனக்கு அவர்கள் மஹா குரு போல் விளங்கி வருகிறார்கள். அவர்களைக் கடவுளர் போலவே போற்றி வருகிறேன். கடவுளைப்

போல அவர்களைஎன்னுள்ளத்திருத்தியே வைத்துக்கொண்டிருக்கிறேன். சிறந்த இவ்வாசாரத்தினால் தான், நான் மேன்மையான ஞானத்தையடைந்தேன். மதம் என்பதற்கும்பொருள் இதுதான்; மிதிலா நகர வேடனாகிய என்னிடத்திலிருந்து நீவிர் அறியக்கூடியதும் இதுதான்; ஆதலின் உம்முடைய தந்தை தாயரிடத்திற்கு நீவிர் விரைந்து செல்லுவீர். அவர்கள் மிகுதியும் விருத்தாப்யர். அவர்கள் ஏறக்குறைய நயனவொளி கெட்டவர்கள் என்னலாம். உம்முடைய பிரிவினால் மிகுதியும் வருத்த முறுகின்றார்கள். நீவிர் அவர்களை இக்காலத்தில் பிரிந்து வந்திருத்தலும் அடாது. ஆதலின் நீவிர் காலதாமதமின்றி அவர்களிடம் சென்று அவர்களைத் தேற்றுவீராக. உம்முடைய தந்தை தாயர்களைக் கௌரவப்படுத்துவதற்காகவும் உபசரிப்பதற்காகவும் விரைந்து செல்லுவீராக. ஏனெனின் இதைக்காட்டினும் சிறந்த ஆசாரமில்லை; இதுதான் எவ்வித இல்லறத்தானும் செய்யவேண்டிய நித்தியக் கடமை எனச் • சொல்லப்பட்டிருக்கிறது" என்று கூறினான்.

ப்ராமணன் வேடன் புத்திமதிகளுக்காக வந்தனமளித்து அவனிடமிருந்து விடைபெற்றுத் தன்னகம் சென்று, அதுமுதல், தன்னுடைய தாய்தந்தையர்களை மிகவும் உபசாரத்தோடும், உண்மையான பக்தி விச்வாஸத்தோடும் போற்றிக் காப்பவனானான் என்று மஹாபாரதம் வனபர்வம் கூறுகிறது.

"தாயினிற்சிறந்த தெய்வ மில்லையுயர் தந்தை தன்னின்
ஏயநற் குருவுமில்லை யென்னின்மற் றிவர்க டாளில்
தூய்மலர் தூவி நாளும் தொழுதிடு மறிஞர் தாமே
ஆய்கதிர் பரப்பும் பொன்னாட் டமரரா யினிது வாழ்
[வார்"

வீ. சுப்பிரமணிய ஐயர்.

உண்மை.—நாம் எக்காலத்திலும் உண்மையைப் பேசிவரும் குணத்தையே கைப்பற்றி வரவேண்டும். நாம் பொய்யனல்ல என்பது நமது எஜமானர்களுக்குத் தெரிந்ததும் அவர்கள் நம்மிடம் வெகு நம்பிக்கையான காரியங்களை ஒப்புவிப்பார்கள். அவ்வாறு செய்தால் நமக்கு அதிகப் பணமும், புகழும், பெருமையும் எப்பொழுதும் கிட்டும். உண்மையைக் கைப்பற்றிக் கீர்த்தி யடைந்தவர்கள் அநேகர் இருக்கிறார்களாகையால், இதைப்பற்றி நாம் அதிகமாய் விவரிக்க வேண்டியது அனாவசியம்.

# லக்ஷ்மி வஸிக்குமிடங்கள் *

## THE ABODE OF LAKSHMI.

ஒருநாள் பகவான் ஸ்ரீ நாராயணனுடைய மடியில் அமர்ந்து செந்தாமரைப் புஷ்பம்போல் சிவந்த மேனியுடன் ஜ்வலித்துக் கொண்டிருக்கும் லக்ஷ்மி தேவியை ருக்மணி பார்த்துத் தன்னுடைய அழகிய கண்களில் வியப்பு விளங்க 'தேவியே, தாங்கள் தங்கி வஸிக்கும் வஸ்துக்கள் இவை யென்றும், தாங்கள் அணுகாமல் நீக்கி விடுகிற வஸ்துக்களைவை யென்றும் எனக்குத்தயவுகூர்ந்து சொல்லவேண்டும்' என்று ஆவலுடன் கேட்டாள். அப்பொழுது, பூர்ண சந்திரன்போல் குளிர்ச்சியும் காந்தியும் அழகும் நிறைந்த மலர்ந்த முகத்துடன், உள்ளத்தில் கருணை பெருகி, காதுக்கு மதுரமான சொற்களால், மனஸுக்கும் ரம்யமாய், பின்வருமாறு லக்ஷ்மிதேவி மறுமொழி கூறினாள்.

1. ஸௌபாக்யம் நிறைந்த உத்தமியே! தைரியம், ஸாமர்த்தியம், காரியத்தில் முயற்சி, கோபமில்லாமை, தெய்வபக்தி, நன்றி, அறிவு, இந்திரியஜயம் என்னும் இந்தக் குணங்கள் பொருந்தி, ஸத்வமே எப்பொழுதும் மேலோங்கி நிற்கும் ஸ்வபாவத்தை யுடைய புருஷனிடத்தில் நான் எப்பொழுதும் வஸிக்கிறேன்.

2. காரிய முயற்சி இல்லாதவனிடத்திலும், நாஸ்திகனிடத்திலும், நன்றிகெட்டவனிடத்திலும், ஜாதிவிட்டு மறுஜாதியில் கலந்து விபரீதம் செய்பவனிடத்திலும், தன்னுடைய நிலைமைக்கு விரோதமான நடத்தை யுள்ளவனிடத்திலும், குரூரமான வர்ணத்தை யுடையவனிடத்திலும், திருட்டு ஸ்வபாவ முள்ளவனிடத்திலும், குருவினிடத்தில் வெறுப்புள்ளவனிடத்திலும், நான் ஒருநாளும் தங்குவதில்லை.

3. மேலும்,மனஸிலும்,இந்திரியங்களிலும் தேகத்திலும் மிகவும் அல்பமான வீரியத்தையும் பலத்தையும் உடையவர்களாய், தங்களுடைய வாஸ்தவமான விருப்பங்களை மனஸிலே வைத்துக்கொண்டு, அவைகளை நிறைவேற்றச் சக்தியில்லாமல் தொட்டதிலெல்லாம் ஆங்காங்குக் கோபித்துக்கொண்டு, முன

* Extracts From the Mahabharata.

வஸில் க்லேசத்தை அடையும் தௌர்ப்பாக்யர்களிடத்தில் நான் இருக்கமாட்டேன்.

4. தனக்கு யாதொரு விதமான மேன்மையும் வேண்டுமென்று இச்சிக்காமல், ஸ்வபாவமான ஜாட்யமே மேற்கொண்டு, தன்னுடைய பௌருஷத்தைக் காட்டாமல், அல்பத்தைக் கொண்டு திருப்தி அடைகிற சோம்பேறிகளிடத்தில் நான் வஸிக்கிறதில்லை.

5. தங்களுடைய தர்மங்களைத் தெரிந்துகொண்டு அவைகளை அநுஷ்டிக்கிறவர்களும், வயது சென்றவர்களைப் பூஜிக்கிறவர்களும், இந்திரியங்களை உள்ளும் புறமும் அடக்கி ஆண்டு, பொறுமையையே கைப்பற்றுகிறவர்களும், கார்யத்தில் சாமர்த்திய முள்ளவர்களுமான புருஷர்களிடத்தில் நான் எப்பொழுதும் வசிப்பேன்,

6. உண்மை பொருந்தி கபடமற்ற ஸ்வபாவமுள்ளவர்களாயும், தேவதைகளையும் ப்ராமமணர்களையும் பூஜிக்கிறவர்களாயும், புருஷனைத்தெய்வமாகக் கொண்டாடுகிறவர்களாயும், மங்களமான செய்கை யுள்ளவர்களாயும், இயன்றமட்டிலும் ஆடை ஆபரணங்களால் தங்களை அலங்கரித்துக் கொள்ளுகிறவர்களாயும், யாரும் பார்க்க விரும்பும் ரூபமுடையவர்களாயும், கணவனுடைய அருளையும் அன்பையும் அடைந்து அதை நன்கு மதிக்கும் ஸௌபாக்யவதிகளாயும், இன்னும் மற்ற உத்தம குணங்கள் பொருந்திய ஸ்திரீகளிடத்தில் நான் எப்பொழுதும் வஸிக்கிறேன்.

7. எங்கும் பரவிச் சிதறுண்டு கிடக்கும் சாமான்களைக்கவனியாமலும், ஒழுங்கு செய்யாமலும் இருப்பவர்களாயும், எப்பொழுதும் புருஷனுக்கு விரோதமாக எதிர்த்து வாயாடுகிறவர்களாயும், அயல் வீடு போவதிலேயே விருப்பமுள்ளவர்களாயும், நாணமற்றவர்களாயும், பாபமுள்ள ஸ்வபாவமும் அசுத்தமான ஆசாரமும் உள்ளவர்களாயும், நாக்கை வெளியில் நீட்டிக்கொண்டு சாப்பிடுகிறவர்களாயும், மனவில் பொறுமையும் தைரியமுமில்லாதவர்களாயும், கலகத்தில் ப்ரிய முள்ளவர்களாயும், தூக்கமே மேற்கொண்டு எப்பொழுதும் படுத்துறங்குகிறவர்களாயு மிருக்கிற ஸ்திரீகளை, நான் அணுகாமல் தூரத்தில் தள்ளி விலகி விடுவேன்.

8. ஸவாரி செய்யும் வண்டிகளிலும் கன்னிகைகளிடத்திலும், ஆபரணங்களிலும், யாகங்களிலும், மழை பொழியும் மேகங்களிலும், புஷ்பித்திருக்கும் தாமரை ஓடைகளிலும், சரத்காலத்திய நக்ஷத்திர வீதிகளிலும், பசுமாடுகள் கட்டும் கொட்டில்களிலும், மலர்ந்திருக்கும் நெய்தலும் செந்தாமரையுமுள்ள குளங்களிலும், அன்னம் கிரௌஞ்சம் முதலிய பக்ஷிகளுடைய இனிமையான குரல்களால் நிறைந்ததும், இருகரைகளிலும் பற்பல மரங்கள் அடர்ந்துள்ளதும், தபஸ்வீகள், ஸித்தர்கள், அந்தணர்கள் முதலியோர்வந்து ஸ்நாநம் செய்வதும், சிங்கங்களாலும் யானைகளாலும் கலக்கப்படுவதுமான தண்ணீரை உடையதும், எப்பொழுதும் பூர்ணமான ஜலப்ரவாஹத்தை உடையதுமான நதிகளிலும், மதம்பிடித்த யானையிலும், மாக்ஷிமை பொருந்திய காளைமாட்டிலும், இராஜாவினிடத்திலும், ஸிம்மாஸனத்திலும், ஸாதுக்களிடத்திலும் நான் எப்பொழுதும் ப்ரியமாய் வஸிப்பேன்.

9. எந்தவீட்டில் அக்நியில் ஹோமம் செய்து, பசுக்களையும் ப்ராம்மணர்களையும் பூஜித்து, தேவதைகளையும் தகுந்த காலத்தில் புஷ்பங்களினால் ஆராதிக்கிறார்களோ அந்த வீட்டிலும் நான் வஸிக்கிறேன்.

10. தங்களுடைய வேதங்களைத் தவறாமல் அத்யயனம் செய்து வரும் அந்தணர்களிடத்திலும், தர்மத்தைப் பாதுகாக்கும் க்ஷத்ரியரிடத்திலும், பூமியைப் பயிர் செய்வதில் முயற்சியுள்ள வைச்யர்களிடத்திலும் நான் இருப்பேன்.

11. பகவான் நாராயணனிடத்திலே, என்னுடைய சரீரத்தோடு ஒரே மனஸாய் ஸகல அந்தக் கரணங்களுடனும் எப்பொழுதும் வஸிப்பேன்.

12. மற்ற இடங்களில் என்னைச் சரீரத்துடன் காணமுடியாது. இவ்விதம் பேசவும் மாட்டேன். ஆனால் எந்தப் புருஷனிடத்தில் நான் ஸங்கல்பமாத்திரத்தினால் வசிக்கிறேனோ, அவன் தர்மார்த்த கர்மங்களிலும் கீர்த்தியிலும் மேன்மேலும் வ்ருத்தியடைகிறான்.

ஜி. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யர், பீ. ஏ.

---

மஹாபாரதம்—அநுசாஸன பர்வம் 11-வது அத்யாயம்.

# வீண்செலவால் விளையும் விபத்து

## EVILS OF EXTRAVAGANCE

மானிட வாழ்க்கையின் துன்பங்களில் வறுமையைப்போல பயங்கரமானது வேறில்லை. மற்றைய துன்பங்கள், தற்காலத்திலேயே பெரும்பாலும் மனதை நாட்டி நடந்துவரும் மனிதர் எளிதில் மறக்கக்கூடியவை; அவை ஸதாகாலமும்அவர் கவனத்தைக் கவர்வதில்லை. ஆனால் தரித்திரமானது, நிந்தனை, அசட்டை, அவதூறு முதலியவைகளுக்கு மூலமாவதையும், கடுந்தரித்திரம் ஊண், ஆடை முதலியவற்றை விலக்குவதையும், மேலும் இயற்கைக்கு இன்றி அமையாதவைகளுக்கும், நற்குண நற்செயல்களுக்கு விரோதமாய் நிற்கும் தீமைகளுக்கும் ஆளாக்குவதையும் பார்த்து இரங்காமல் நாம் ஒரு நாள்கூட மனிதர் மத்தியில் கழிக்கமுடியாது.

மற்ற தீமைகளை விலக்குவதற்கு, அந்தஸ்து, பிரக்யாதி ஆகிய இவைகளைப்பற்றிய மெய்யெண்ணமோ, பொய்யெண்ணமோ, ஏதுவாயிருக்கிறது. ஆனால் வறுமையினால் வருத்தமும் துக்கமுமே விளைகின்றன. தரித்திரத்தால் உண்டாகும் துன்பங்களுக்கு அற்ப பரிகாரங்களுமில்லை. அவற்றால் உடலன்றி உயிரும் வருந்துகிறது; நற்குணங்களும் மறைந்து போகின்றன; எவ்வித நடத்தையும் பழக்கப்பட இடமாகிறது. தரித்திரர் படும்பாட்டுக்குக் கௌரவமுமில்லை; அவர் செய்யும் தொழிலுக்குச் சன்மானமுமில்லை.

இவ்வித வியாகூலங்களைப் பற்றிச் சிந்தியாதார் யாருமில்லை. எத்திசை நோக்கினும் வியாபாரத்தின் சந்தடியாயிருக்கிறது. தெருக்களில் ஜனங்கள் திரள் திரளாய்ச் செல்கின்றனர். அவர்கள் முகக்கலக்கமும் விரைந்த நடையும் எதைத் தெரிவிக்கின்றன? பொருள் ஈட்டும் ஆசையையே! உலக விவகாரங்களுக்கெல்லாம் செல்வம் ஆதாரமாயிருக்கிறது. தரித்திரத்தினின்றும் அது அளிக்கும் விமோசனமே திரவியத்தின் முக்கிய உபயோகம். செல்வம் தரும் பயன் சிறிதேயெனினும் அதனாலுண்டாகும் தற்காப்பு மிகவும் உபயோகமானது; அதனால் உண்டாகும் நன்மை சிறிதெனினும் செல்வம் பலவகைக் கேடுகளை நீக்க வல்லது.

ஆயினும், சிலர் தரித்திரத்தை எவ்வளவு கவலையுடன் தூரவிலக்குகின்றனரோ அவ்வளவு ஆவலுடன் மற்றும் சிலர் தரித்திர தசையை நோக்கி விரைந்து ஏகுகின்றனர். பின் கூறியவர்கள் தினந்தோறும் தங்கள் வரும்படி குறைவதையும், முன்னோர் தேடி வைத்த நிலங்களும் வீடுகளும் நகை நாணயங்களும் ஒன்றொன்றாய்த் தொலைவதையுங் கண்டும் தம்வாழ்க்கை வகைகளை மாற்ற மனோதிடமற்றவர்களாயிருக்கின்றனர். இவர்கள் தம் முன்னர்த்தோன்றும் கேடென்னும் உயர் பாறையை நோக்கி அதினின்றும் விழுந்தழிய அதிவேகமாய்ச் செல்லுகின்றார்கள்.

மாடமாளிகைகள் கட்டுவதிலும் சிங்காரத் தோட்டம் முதலியவை அமைப்பதிலும் ஏராளமான பணத்தை வாரி இறைத்து, ஆடம்பரத்துடனும் ஆவலுடனும் எப்படித் தொடங்கினரோ அதே கௌரவத்துடன் அவற்றைப் பூர்த்தி செய்யவேண்டும் என்ற ஆசையால் தம் பொருளனைத்தையும் அழிக்க அஞ்சாத மனிதரை நல்வழிக்குத் திருப்புவது அஸாத்யம். இவர்கள் பின்னர் பெருங்கேடு விளையுமே என்று நினையாது தற்கால அகௌரவத்துக்குப் பயந்து வறுமையின் வருத்தங்களை அனுபவிக்குமட்டும் தம் அறிவின்மையைப் பற்றி மனமழியார்கள். மற்றும் சிலர், தமது கெட்ட ஸ்வபாவத்தினாலோ அல்லது தமக்குத் தீய நடத்தையைப் பழக்கிக் கொடுக்கும் சிநேகிதருடைய ஸஹவாஸத்தினாலோ பொருளை அழிக்கும் வழக்கமுள்ளவர்களாய்த் தமது நிலைக்குத்தகாத செலவு செய்து, இந்த அப்பியாசத்தினின்றும் மீளச் சக்தியற்று தமது நிலைமையைப் பற்றி நினையின் வருத்தமுண்டாவதால் அச்சிந்தனையை அகற்றி நாளடைவில் கடன்பட்டுக் கடும் பட்டினி யென்னும் ஆழ்ந்த குழியில் இறங்குகின்றனர்.

இத்தகைய மடமை பரிதபிக்கத்தக்கதல்ல. ஏனெனின் இது திடீரென்று உண்டாகும் ஆவேசத்தால்வந்தகேடல்ல. கோபத்தினாலோ, காமத்தினாலோ புத்திமாறி விளைந்த தீமை என்று இரக்கப்படத் தக்கதல்ல. இத்தகைய மனிதர்

தரித்திர தசையை நோக்கி வெகு நாளாய்ப் பிரயாணம் செய்து வருகிறார்கள். இவர் மெதுவாய் நாளடைவில் கொல்லும் விஷத்தைத் தினந்தோறும் அருந்துகிறவர்களை யொப்பார். இவ்வாறு தற்கொலை புரிவோருமுளரோ என்று ஆச்சரிய முண்டாகிறது. ஆனால் இவ்வாறு மனிதர் நடந்து கொள்வதை நாம் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கிறோம். சில பெரிய குடும்பங்கள் இன்பத்துக்கும் பெருமைக்கும் வேண்டிய பணத்தைபழித்து அலக்ஷியம் அசட்டை வறுமை இவைகளுக்கு ஆளாவதை நாம் அடிக்கடிக் கேள்விப்படுகிறோம்.

புகழப் படுவோரின் குணாதிசயங்களை ஆராய்ந்து அவர் புகழைச் சீர்தூக்கின் மிதமீறிச் செலவழிப்போன் விலைக்கு வாங்கும் புகழ் பலனற்றது என அறிவோம். அவன் போகும் வழிகளில் அவனுக்கு யார் உற்சாக முண்டாக்குகின்றனர்? அவனை யொக்கும் கெட்ட நடத்தை யுடையவர்களும். உலகம் பரம்பரையாய் நல்லவை என்று காட்டியிருக்கும் விஷயங்களைச் சிறிதும் அறியாதவர்களும், கல்வி குணங்கள் சிறிதும் இல்லாதவர்களுமே. அவன் செய்யும் விருந்தை யார் புகழ்கின்றனர்? தம் காரியத்தை அவனால் சாதித்துக் கொள்ள முயலும் சூழ்ச்சியுடையவர்களே! இவர்கள் இவன் போகும் கப்பலைக் கவிழ்க்கும் புயலுக்கும் கல்லுக்கும் சமானம்; இவனை விழுங்கிவிட நினைக்கும் ராக்ஷஸர்கள் எனினும் இவர்களுக்குத் தகும்.

இவ்வகையாய்ச் சிற்றின்பச் சிரோமணிகள், தங்கள் வலைக்குள் சிக்கிவைக்கும் அறிவிலியைக் கல்வியினாலும் ஸ்வபாவ நற்குணங்களினாலும் மஹிமையடைந்துள்ள மனிதர் வெறுப்புடனும் பரிதாபத்துடனும் காண்கிறார்கள்.

வீண்செலவு செய்தும் கெட்டவழியில் பணத்தை உபயோகித்தும் தன் ஆஸ்தியை அழிக்கும் மனிதன் மற்றவரைவிட அதிக ஆனந்தமடைகிறான் என்பது பொய். சுகம் உண்மையாய் இருக்கவேண்டின் அது ஸ்திரமென்ற நம்பிக்கை வேண்டும். யாதொரு பொருளையோ சௌக்கியத்தையோ நாம் இழந்துவிடுவோம் என்ற அச்சம் இருந்தால், நமக்கு உண்மையான ஆனந்தம் ஏது? தனது ஸ்திதிக்கு மீறிச் செலவழிக்கும் மனிதனுடைய நிலைமையைப் பார்த்து யார்தான் பொறுமை கொள்வர்? சிறிது காலத்தில் தரித்திரத்தின் வசத்தில் அகப்பட நேரிடும் என்பது அவனுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம். தனது இன்ப நுகர்ச்சிக்கு வேண்டி எவ்வளவு தாராளமாய்ப்பணத்தை வாரி யிறைத்தானோ அவ்வளவு தன்னால் பொறுக்க வியலாத தரித்திர தசையின் துன்பங்களுக்குத் தான் ஆளாவதையும் அவன் நன்றாய் அறிவான்.

செலவு செய்வதினாலுண்டாகும் சுகத்தைப் பூரணமாய் அனுபவிக்கவேண்டுமாயின், செட்டு அவசியமென்று வெளிப்படையாகிறது. தமது ஆஸ்திக்கு மீறிச் செலவு செய்கிறவர்கள் தங்கள் கொண்டாட்டத்தின் இடையில் அதிருப்தியும் அவசரமும் படுகிறார்கள் என்பதற்குக் குறிகள் காண்கின்றன. இவர்கள் யோசனை யின்றித் தமது பணத்தைச் செலவிடுகின்றவரையில் தாராள மனதுடையவர் போல் நடிக்கின்றனர். கொலைசெய்த ஒரு குற்றவாளி தன்னைத் தூக்கிடுவது நிச்சயம் என்று தெரிந்த பின்னர் தைரியத்துடன் தூக்கு மேடை ஏறுவதுபோல் இவர்கள் நடந்து கொள்ளுகிறார்கள். சிற்சில வேளைகளில் இவர்கள் லோபிகளைப்போலவும் பணத்தின் மேல் அதிகக் கருத்தும் கவலையு முள்ளவர்கள்போலவும் பாசாங்கு செய்கிறார்கள். இவர்களுக்குத் தமது இந்திரியங்கள் வலிமையை அடக்கச் சக்தியுமில்லை, அவற்றைத் திருப்திப்படுத்தத் தைரியமுமில்லை. தாம் அனுபவிக்கும் சுகத்தைத் தாமே வெறுக்கிறார்கள். இத்தகைய மனிதர் களிப்பது போல் காணினும் மனச் சமாதானமும் உண்மை உற்சாகமும் அவர்களுக்குச் சிறிதேனுமில்லை. அவர் அடையும் எளிய சுகமும் நீடித்திருப்பதல்ல; பலவகையிச்சைகள் முன்போலவே மனதைப் பற்றி வாதிப்பினும் அவற்றை நிறைவேற்ற தேக சௌக்கியமும் திரவிய சகாயமுமில்லாததால், தங்கள் வாழ்நாளின் மிகுந்த காலத்தைத் தமது மடமையை நினைந்து மனமழிவதில் செலுத்த வேண்டி நேரிடுகிறது.

C. சுந்தரம் ஐயர், பீ. ஏ.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை.'—கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை என்னும் வாக்யம், ஸ்த்ரீகள் கணவன் சொற்படியே கேட்டு நடத்தலே அவர்களுக்குத் தர்மம், என்று பொருள் படுகின்றது. மனிதனுக்குக் கற்புடைப் பெண்டிரிற் சிறந்தது இல்லை யென்பதை விளக்க, கல்வியே மனுஷனுக்குக்கற்புடைப் பெண்டீர்எனக் கூறப்பட்டிருக்கிறது. அஹல்யா, த்ரௌபதே, ஸீதா, தாரா, வண்டோதரி, "ததா பஞ்சகந்யா ஸ்மரே நித்யம் ம்ஹா பாதக நாசனம்" என்பதினின்றும், பதிவ்ருதைகளின் மஹிமை இப்படிப்பட்டதென்று தெரிகிறது. "காதல் மங்கையர் கற்பினுக்கோர் மழை" என்பதனால், வானமும், கடவுளும், கொண்டவன் குறிப்பறியும் பெண்டாட்டியின் பேச்சைக் கேட்டு அதன்படி நடக்கின்றன என்பது பதிவ்ருதையாகிய நளாயினி கதையினின்றும் அறியலாம். ஆணி மாண்டவ்வியர், நளாயினிக்கு அமங்கலத்வம் விடிவதற்குள் வருதல் வேண்டுமென்று சபித்ததும், அவளது கற்பன்றோ அவளது மங்கலியத்தைக் காப்பாற்றியதும், அப்பத்துராப்பொழுதுகளை விடியாமற் பண்ணியதும்! அப்பத்துராப்பொழுதுகள் நளாயினிக்காக ஏற்பட்டிருக்க, அப்பத்துராப்பொழுதுகளினால் உலகத்துள்ள மஹத்தான அரும்பெருங் காரியங்களை நடவாமல் நின்று போகா வண்ணமாகவும், தினஸரிக் கணக்குகள் ஸரியான கணக்கிலிருக்கவும் காரணமாயிருந்தது. அத்ரி மஹரிஷி பத்நி அநஸூயையின் தபஸும், விசேஷமான பதிவ்ருத்யமன்றோ? தேவார்ஹமான பரம காரியங்களை யுண்டுபண்ணி களிக்கச் செய்து வரும் பதிவ்ருதையான இவ்வநஸூயையின் பாதிவிருத்யத்தைப் பரீக்ஷிக்க ப்ரம்ம விஷ்ணு ருத்ரரே மிகுதியும் முயன்று பார்த்து, அன்னவர்கள் அவள் கையில் குழந்தைகளாக்கப்பட்ட கதைகள் கேட்ட எந்த ஸ்த்ரீ தன் பாதிவிருத்யத்தில் குறையப் பார்ப்பள்? ஸாவித்ரி ஸத்யவான் கதையும், 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்னும் அற்புத வாக்கியத்திற்கு உதாரணமாக்கப்படலாம். நைஷ்டிக ப்ரம்மசாரியொருவன், தன் உக்ர ப்ரம்மசாரிய ஆச்ரமத் தபவிலிருக்கையில், ககனமார்க்கக் கொக்கொன்று தெரியாமல் இவன்மீது எச்சமிட்டது. இதுகண்ட ப்ரம்மசாரி அதனை உற்றுநோக்க அது சாம்பலாகியது. இப்படிப்பட்ட தபோமஹிமை தன்னிடத்திருப்பதை யறிந்த ப்ரம்மசாரி, தன்னிலும் மிகுந்தவனும், ஆச்ரமநிஷ்டை தவறாதவனும் உலகத்திலில்லை எனத்தனக்குள் தானே கருதி, ஒரு க்ரஹஸ்தன் வீடு போய் 'பவதிபிக்ஷாம்தேஹி' என, க்ரஹணி வீட்டினுள் பிக்ஷை கொணரச் சென்றாள். வீடுவிட்டு க்ரஹக்ருத்யத்தைநாடி வெளிச்சென்று அப்போது தான் வியர்த்துப்போய் ஆயாஸப்பட்டுவந்த, தன் கணவனை உபசாரம் செய்துக் காலம் தாமதித்துப் பிக்ஷை கொணர்ந்த க்ரஹணியை, ப்ரம்மசாரி உறுத்து நோக்க, அன்னவள், "கொக்கைப் பார்த்ததுபோல், உன்ஜபம் என்னிடத்தில் செல்லாது" என்று சொல்லி, அன்னவனைத் தர்மோப தேசம்பெற, காசி க்ஷேத்ரத்திலுள்ள வணிகனிடம் போக்கினாள் என்றால், பாதிவ்ருத்யத்திற்கு த்ரிகால ஞானமும் எளிதென்பது தெரிந்தஎவர், கற்புக்கு அதியுன்னதமான பெருமையுண்டு என்பதை மறுப்பார்? ஆகவே கற்பு தெய்வாம்சமேயாகும்.

* * *

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்".—எக்காரியத்தையும் தம்மாலாகாது என்று அசிரத்தை செய்யாமல், ப்ரயத்தனம் மிகுதியும் கொண்டு அது முடியுமட்டும், முயன்று பார்க்கும் எவரும், தாழமாட்டார்கள், பெருமையையே அடைவார்கள் என்பது முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பதன் அர்த்தம். ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யும்படிக்கு வேண்டிய விசேஷ ப்ரயத்தனம், கடைசியில், அவனுக்கு அஷ்டைச்வர்யத்தையும் உண்டுபண்ணும் என்பது நிச்சயம். அப்படி முயலாமலிருந்தால், எக்காரியமும் ஆகாது; ப்ரயத்தனப்படாமல் வீணாக்காலம் போக்கல் மூதேவியைக் கொண்டுவிடும் என்னும் பொருள் கொண்ட திருவள்ளுவநாயனாருடைய வாக்யம் எவருடைய மனதிலும் குடிகொண்டிருக்க வேண்டியதே.

ராபர்ட் புரூஸ் என்னும் யுத்தவீரன் தன் எதிரியோடு ஐந்து தடவை சண்டை போட்டும் அபஜயத்தையே அடைந்து, அதனால் மனம் நொந்துகொண்டிருக்குங்காலத்தில், அவன் படுத்திருந்த வீட்டுத்தூலத்தின் ஒன்றினின்று மற்றொன்றக்குத் தாண்ட முயன்று ஆறாவது தடவையே வெற்றிபெற்ற சிலந்தியைக் கண்டு மனம்தெளிந்து, இவன் ஆறாவது தடவை, முயல அம்முயற்சியினால் வெற்றி பெற்றான் என்ற கதையைக் கேட்ட எவர்தான் எக்காரியத்திலும் முயலாது இருப்பர். ம்ருகண்டு முனிவரின் புத்ரன் மார்க்கண்டேயன், தன் வயது பதினாறு என்பதை என்றும் பதினாறகச் செய்து கொண்டது, தனது இடைவிடாத முயற்சியுடைய பகவத் தியானத்தினாலன்றோ? முயற்சியில்லாமல், இவன் இருப்பானேயானால், இவன் புகழுக்குரியவனாவனோ? இப்படி முயற்சியால் முன்னுக்கு வந்தவர் அநேகர். முயற்சி இடைவிடாது செய்தவினால் தலை விதியையும் ஒரு ஸமயத்தில் மாற்றிவிடினும் விடலாம்.

ஒருகாலத்தில் சிறிய ஆண் பெண் குருவிகளிரண்டு கடலோரத்தில் முட்டையிட்டு அவயங்காத்திருந்தன. இரண்டும் இரைக்காக வெளியே போயிருக்கும் ஸமயத்தில், கடல் பொங்கி, அவ்விரண்டு

முட்டைகளையும் அடித்துக்கொண்டு போயிற்று. இதுகண்ட அக்குருவிகள் மிகவும் வ்யஸனப்பட்டன. அவைகளுக்கு ஆத்திரம் பொங்கிற்று. நிரபராதியான தங்களுடைய முட்டைகளை அநியாயமாய்க் களவு செய்துபோன ஸமுத்ரத்தின்மேல் இவைகளுக்குக் கோபம் பொங்கிற்று. ஸமுத்ர ஜலத்தை வெளியெடுத்து வற்றச்செய்து இம்முட்டைகளைக் கொணருவதென்று இக்குருவிகள் தீர்மானித்தன. அப்போது தொடங்கி இக்குருவிகள் ஜலத்தில் இறங்கி தங்களுடைய சிறகை நனைப்பதும், கரையில் கொண்டு சேர்த்து விடுவதுமான கார்யங்களைச் செய்ய மூர்த்தன்யமாய் முயன்றன. இது கண்ட அக்குருவிகளின் இனங்களும் இவைகளுடன் சேர்ந்து ஸமுத்ர ராஜனைப் பழிவாங்க ஆரம்பித்தனபோல், இதில் கலந்து ஒத்தாசை செய்தன. இதுநோக்கி எல்லாரும் மனம் நொந்தார்கள். அற்பக்குருவிகளின் வ்யஸனத்தை மாற்ற ஒருவராலும் முடியவில்லை. இவ்விஷயத்தைப் பார்த்திருந்த உலகப்பத்ரிகாதிபதியான நாரதர், பக்ஷிராஜனாகிய கருடனிடம்போய் இவ்வர்த்தமானத்தைச் சொல்லி, ஸமுத்ரராஜனிட மிருந்து இழந்த முட்டைகளை வாங்கிக்கொடுத்தார் என்பது பழைய புத்தகமொன்றில் காணப்படுகின்றது. முயற்சிமட்டும் இடைவிடாதிருந்தால், மலைபோலிருக்கிற கார்யத்தையும் வெகு ஸுலபமாய்ச் செய்துவிடலாம் என்பது இக்கதையால் அறியலாம். முயற்சியினால் கைகூடாத கார்யம் இல்லை என்பது இதிலிருந்து அறிகிறோம். எக்கார்யத்தையும் முயற்சி என்னும் உதவி கொண்டே செய்தல் புகழுக்கிடமாகும்.

***

முன்னொரு காலத்தில் பாண்டிய நாட்டின் இராஜதானியான மதுரைமாநகரத்தில் மூன்று ஸஹோதரர்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவர் இருவருக்கு விவாகமாகி, தங்கள் மனைவிகளோடு வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களது இளைய ஸஹோதரனோ நிர்மூடனாய் இருந்தான். ஆனதினால் தான் அவனுக்குக் கலியாணமாகவில்லை. அவன் ஒன்றும் அறியாத பேதையாதலால் யாவரும் அவனை நிஷித்தம் செய்தார்கள்.

ஒருநாள் அவனது தமையன்மார் இருவரும் ஓர் அலுவலாக அயலூருக்குப் போகவேண்டியதாய் இருந்தது. அப்பொழுது அவர்களில் மூத்தவன் மூடனை அழைத்து, "தம்பி! நாங்கள் இருவரும் திருநெல்வேலிக்குப் போகிறோம். நாங்கள் திரும்பி வருவதற்குப் பதினைந்து தினமாகும். அதுவரை உன் அண்ணிகள் சொல்வதைக்கேட்டுச் சரிவர நட. வீட்டை ஜாக்ரதையாய்ப் பார்த்துக் கொள்" என்று சொல்லி அவனும், அவனது அடுத்த தம்பியும் பிரயாணமாகச் சென்றனர்.

அந்த முட்டாளான இளையவனோ ஸதா காலம் தூங்குவான். தூக்கமே உலகத்தில் ஓர் மனிதரூபமாக அவதரித்த கும்பகர்ணன்கூட தூக்கத்தில் இவனுக்கு இணையல்லன். இவன் குறட்டைவிட்டுக் கொண்டு பகலில் கூடத்தில் விரிப்பு ஒன்றுமில்லாமல் தரையில் நித்திரை செய்துகொண்டிருந்தான். அவனது ஸஹோதரர்களின் மனைவிமார்களுக்குத் தண்ணீர் தேவையாய் இருந்தது. இவன் காடாந்தகாரமாய்த் தூங்குவதைப்பார்த்து, அவனை எழுப்ப முடியாதென்று அவன் அண்ணிகள் எண்ணினார்கள். ஆனால் அவர்களுக்குக் குடிக்கத்தண்ணீர் ஆவசியமாய் இருந்தது. அவர்கள் வீட்டைவிட்டு வெளியே போகும் வழக்கம் கிடையாது. மேலும் சாப்பாட்டுராமன் வீட்டிலிருக்க இழிவான வேலைகளைத் தாங்கள் ஏன் செய்யவேண்டுமென்று எண்ணினார்கள். ஆகையால் அவர்களில் ஒருத்தி மிளகாயைச் சுட்டு அம்மூடனது மூக்குக்கு நேராகக் காண்பித்தாள். மற்றொருத்தி ஒரு தடி எடுத்து நன்றாய்ப் புடைத்தாள். இப்படி அவர்கள் பலதரம் செய்தபிறகுதான் மூடனுக்குச் சற்று பிரக்ஞை வந்து அசைந்து கொடுத்தான். 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்பதுபோல கடைசியாக அவன் எழுந்து கண்களைத் துடைத்துக்கொண்டு "யார் என்னைத் தொந்தரவு செய்கிறது" என்றான். பிறகு அவன் தன் தமையன்மார் ஸம்ஸாரங்களைப் பார்த்தவுடன், "அண்ணி! ஏன் என்னை எழுப்பினீர்கள்? உங்களுக்கென்ன தேவை," என்று தன் மூத்த அண்ணியைக் கேட்டான். உடனே அவள், "தம்பீ! அதி சீக்கிரம் பசுமலை கிணற்றுக்குப்போய் ஒரு தவலை தண்ணீர் மொண்டுவா" என்று சொல்லி ஒரி பெரிய தவலையைக் கொடுத்தாள். பசுமலை என்பது அவர்கள் இருக்கும் இடமிருந்து சுமார் இரண்டு மைல் தூரம் இருக்கும். பக்கத்தில் வைகை ஆறு ஓட அவர்கள் அவனை இரண்டு மைல் தூரம் போய்த் தண்ணீர் கொண்டுவரும்படியாக ஏன் சொன்னார்கள்? பசுமலைக் கிணற்றில் இரும்பு ஸத்து இருப்பதால் தேகத்திற்கு ஆரோக்கியத்தையும், இரத்த விருத்தியையும் உண்டாக்கும். இந்த விஷயம் அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, அவர்கள் தங்கள் சோம்பேறி மைத்துனன் மீதுள்ள அருவருப்பால், அவன் அண்ணியர்கள் அவ்விதம் சொன்னார்கள். மூடன் சற்று நேரம் மௌனமாயிருந்தான். உடனே மூத்தவன் மனைவி "தடியாண்பிள்ளை! நாங்கள் உனக்குச் சமையல்செய்து கொட்டுகிறோம். உனக்கு ஒரு காசு ஸம்பாத்யம் கிடையாது. உனக்கென்ன பாங்கி, சீக்கிரம் போ" என்றாள்.

உடனே அம்மூடன் தவலையைத் தோளில் வைத்துக்கொண்டு கையில் கயிறு கொண்டு கிணற்றை நோக்கி மெள்ள ஊர்ந்து சென்றான். கிணற்றை அடைந்தவுடன் தவலையின் கழுத்தில் சுருக்கிட்டு கீழே இறக்கி அதுநிறைந்தவுடன் மேலே தூக்கினான்.

உடனே அவன் அந்தத் தவலையில் பளபளவென்று மின்னுவதைக் கண்டான். அவன் அதை என்னவென்று எடுத்துப் பார்த்தபொழுது அது ஒரு சிறந்த மீன் என்று அறிந்துகொண்டான். அம்மூடன், "எனக்கு நல்ல அதிர்ஷ்டம்! இம்மீனை நானே தின்பேன். என் அண்ணிகளுக்குக் காண்பிக்கமாட்டேன். இம்மீனைத் தின்றால் என்ன ருசியாய் இருக்கும்!" என்று உரக்கப் பேசலுற்றான். உடனே அம்மீன், "ஏ வாலிபனே! என்னைக் கொல்லாதே; விட்டுவிடு. என் வேண்டுகோளிற் கிணங்கினால் நீ விரும்பியதெல்லாம் அடைய அநுக்கிரகஞ் செய்கிறேன்" என்றது. அவன் அம்மீனைக் கையில் வைத்துக் கொண்டு, "ஏ தவலையே! என்வீட்டின் சமையலறைக்குப் போய்ச்சேரு" என்று தவலையைப் பார்த்து உத்தரவுசெய்தான். உடனே அந்தத் தவலை புறப்பட்டது. அது அவன் வீட்டை நோக்கி அதிக வேகமாய்ச் சென்றது. ஆனால் ஒருசொட்டுத் தண்ணீர் வடியவில்லை. இதையெல்லாம் பார்த்த அம்மூடன் ஸந்தோஷம் அடைந்தவனாய் மீனைத் திரும்பக் கிணற்றில் போட்டுவிட்டு வீட்டிற்கு ஏகினான். அங்கே தவலை நிரம்பத் தண்ணீர் இருக்கக் கண்டு ஆச்சரிய மடைந்து திரும்பவும் நித்திரை செய்யப்போனான்.

சிறிது நேரஞ் சென்றபிறகு அவனது தமையன் மனைவி திரும்பவும் எழுப்பி, "தம்பீ! வீட்டில் சமையல் செய்ய விறகு இல்லை. பக்கத்திலுள்ள காட்டிற்குப்போய் விறகுகொண்டுவா;" என்று சொன்னாள். அம்மூடன் உடனே வீட்டிலிருந்த மொட்டை வண்டியில் ஏறிக்கொண்டான். மாடு இல்லை. ஆகையால், "வண்டியே! நேராகக் காட்டிற்குச் செல்" என்றான். உடனே அது அதிவேகமாய்ப் புறப்பட்டது. போகும் மார்க்கத்தில் ஒரு சிறிய பட்டணம் இருந்தது. அந்நகரவாசிகளெல்லாம் மாடு இல்லாமல் வண்டி ஓடுவதைக்கண்டு ஆச்சரியமடைந்தார்கள். வண்டி ஸமீபத்தில் வந்தவுடன் அதில் உட்கார்ந்திருந்தவன் மூடனென்று அறிந்துகொண்டார்கள். வண்டி அவ்வளவு வேகமாய் வந்ததால் அதில் அறைபட்டு அநேகர் யமலோகஞ் சேர்ந்தார்கள். கணக்கில்லா ஆடுமாடுகள் செத்தன. இவ்வளவு சேதமானதால் ஜனங்களெல்லாம் கூக்குரல் போட்டுக்கொண்டு தங்களால் இயன்ற அளவு அவ்வண்டியை நிறுத்த முயன்றார்கள். ஆனால் அது பாணம்போல் சீறிக்கொண்டு போனதால் அதை அவர்களால் நிறுத்த முடியவில்லை. காட்டிற்குப் போனவுடன் அம்மூடன் வண்டியிலிருந்த கோடரியை எடுத்து மரங்களையெல்லாம் வெட்டிக் குவிக்கும்படி உத்தரவு செய்தான். அது கண்மூடித் திறப்பதற்குள் மரங்களை வெட்டிக் குவித்தது. பிறகு அவைகளையெல்லாம் கட்டாய்க்கட்டி வண்டியில் வந்து சேரும்படியாக விரும்பினான். கோடரியைத் தனக்கு ஒரு தடி கொண்டுவரும்படியாக ஏவினான். அது கொண்டுவந்து கொடுத்தது. அவன் வண்டியின் மூகக்கணையில் உட்கார்ந்துகொண்டு வண்டியைப்போகும்படி சொன்னான். அவ்வண்டி உடனே முன்னிலும் அதிக வேகமாய்ப் போயிற்று. அச்சிறிய பட்டணத்தைச் சேர்ந்தபொழுது அவ்வூர் வாசிகளெல்லாம் இவனைக்கட்டி அரசன் முன் கொண்டுபோக முயன்றார்கள். அதைக்கண்ட அம்மூடன், "ஏ தடியே! வெகு நாழிகையாக இரை இல்லை என்று சொன்னாயே! என்னிடத்தில் வரும் இம்மனிதர்களை அடித்துத்தள்ளு" என்று சொல்லித் தடியை ஏவினான். அதுவும் அப்படியே செய்து அவனது கையில் வந்து சேர்ந்தது. பிறகு வீட்டிற்குப் போய் வண்டியை ஒரு மூலையில் தள்ளிவிட்டு நித்திரை செய்யப்போனான்.

அச்சிறிய பட்டணத்து ஜனங்களெல்லாம் அம்மூடன் செய்த கொடுமையைப் பற்றிப் பாண்டியனிடத்தில் போய் முறையிட்டார்கள். அவ்வரசன் அம்மூடனைக் கொண்டுவரும்படியாக ஆக்ஞாபித்தான். அரசனால் அனுப்பப்பட்ட சேவகர்கள் மூடனை நித்திரையிலிருந்து வெகு சிரமப்பட்டு எழுப்பி அவனை அரசன் முன்கொண்டு நிறுத்தினார்கள். அச்சமயத்தில் அரசனது மகள் அவ்வழியே சென்றாள். அவளைப் பார்த்தவுடன் அம்மூடன் அவளை விவாகஞ் செய்து கொள்ள விரும்பினான். அரசனோ அவனைத் தூக்குப் போடும்படியாகக் கட்டளை யிட்டான். அரசன் மகள் ஓடிவந்து, "பிதாவே! நான் இம்மூடனைத்தான் மணந்து கொள்ளுவேன். சீக்கிரத்தில் விவாகத்தை நிறைவேற்றிவையுங்கள்" என்றாள். அரசனுக்கோ ஒரே மகள். ஆகையால் அவள் மீது மிகப்பிரியமுள்ளவனாய் இருந்தான். எத்தனையோ ராஜகுமாரர்களையெல்லாம் நிராகரித்த தன் குமாரத்தி அம்மூடனை விரும்புவதைக்கண்டு ஆச்சரியப்பட்டான். அரசன் தன் மகளை அவள் கொண்ட எண்ணத்தை ஒழிக்கும்படிப் பல தடவை சொல்லியும் கேட்காததால் மனதில் திருப்தியில்லாமல் விவாகத்தை நிறைவேற்றினான். தம்பதிகள் இருவரும் இரவில் மஞ்சத்தில் நித்திரை செய்து கொண்டிருந்த பொழுது அரசன் அவர்களை வைகையாற்றில் மஞ்சத்தோடு தூக்கிப்போடும்படியாக உத்தரவு செய்தான். அரசன் ஒரு குடியானவனுக்குத் தன் மகளைத் திருமணஞ்செய்து கொடுத்ததற்கு அவமான மடைந்தான். மேலும் அம்மூடன் விழித்துக் கொண்டிருக்கும்பொழுது ஏதாவது செய்தால் தன்னை எங்கே கொல்வானோவென்று அரசன் பயந்தான். அதனால் தான் அவர்கள் தூங்கிக் கொண்டிருந்த பொழுது அவ்விதம் செய்யும்படியாகச் சொன்னது. வருஷம் 365 நாளில் 20 அல்லது 30 நாள் தண்ணீர் ஓடுவது அரிதான அவ்வாற்றில் அன்றையதினம் இருகரையும் ஒரு கரையாக ஓடிற்று.

ஆற்றில் போடப்பட்ட அம்மஞ்சம் அதில் மிதந்து சென்றது. சூரியோதயமானவுடன் அம் மூடன் நித்திரை தெளிந்து எழுந்தான். மஞ்சத் தோடு ஆற்றில் மிதந்து செல்வதை மூடன் கண்டு அம்மஞ்சம் கரைபோய்ச் சேரும்படியாக விரும்பி ஞன். கரை சேர்ந்தவுடனே தன் மனைவியை எழுப்பி இருவரும் அங்குள்ள ஒரு பெரிய வனத்திற்குச் சென்றூர்கள். அம்மூடன் அக்காடு அழிந்து அங்கே ஒரு பெரிய பட்டணமும், அதன் மத்தியில் ஓர் சிறந்த அரண்மனையும் உண்டாக வேண்டுமென்று விரும்பிஞன். ஒருக்ஷண நேரத்தில் அவன் விரும்பி னது போல் நடந்தேறியது. அம்மூடன் தன் மனைவியுடன் அதில் இருந்து கொண்டு சுகமாய் வாழ்ந்துகொண்டிருந்தான்.

ஒரு நாள் பாண்டியராஜன் வேட்டைக்குப் புறப் பட்டான். அப்பொழுது இப்புதியநகரத்தையும் அதி லுள்ள அரண்மனையையுங் கண்டு ஆச்சரியமடைந்து அது யாருடையதென்று அறிந்து வர அதை நோக் கிச்சென்றான். ஆசாரவாயிலில் போனவுடன் வாயிற் காப்போன் வந்திருக்கிறவர் யாரோ ஒரு அரச னென்று எண்ணி உள்ளே சென்று மகாராஜாவி னிடத்தில் தெரிவித்தான். உடனே மூடனும் அவன் மனைவியும் வெளியே வந்தார்கள். மூடன் மனைவி வந்திருக்கிறவர்கள் தன் பிதாவென்றறிந்த வுடன் ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ் செய்தாள். அரசன் தன் மருமகனது சாமர்த்தியத்தைக் கண்டு வியந்து சோபந்தணிந்து, தன் நகருக்கு அவர்களை அழைத்துக்கொண்டு சென்றான். அரசன் இறந்த வுடன் அம்மூடன் பாண்டிய நாட்டிற் கதிபதி யானன்.

## புத்தக வரவு

### BOOKS RECEIVED

1. புதிய ஜப்பான். சுதேசமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் ஜீ. சுப்ரமண்ய அய்யரவர்கள் எழுதியது. விலை ரூபா 1-0-0. புஸ்தகம் வேண்டுவோர் சென்னை, சுதேசமித்திரன் ஆபீசுக்கு எழுதி வரவழைத்துக் கொள்ளலாம்.

2. ஜீவவர்க்கபோதினி * 2,3-ம் பாகங்கள் இஃது ம-ள-ள-ஸ்ரீ V. R. துரைசாமி சாஸ்திரி M. A., L. T. அவர்களால் எழுதப்பெற்றது. அநேக சித்திரப் படங் களடங்கியது. விலை ரூ 1-0-0.

3. பிரதாப முதலியார் சரித்திரம். மூன்றும் பதிப்பு. இஃது மாயூரம் மாஜி முன்சீப் ச. வேதநாயகம் பிள்ளை அவர்கள் எழுதியது. மேற்படியார் குமாரர் Mr. வி. துரைப்பிள்ளையவர்களால் பிரசுரம் செய்யப்பட்டது.

* விவேகபோதினி மானேஜருக்கு எழுதிப் பெற் றுக்கொள்ளவும்.

## ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

### LADIES' PAGES

### த்ரௌபதி அல்லது மனத்தினிலை

#### 6. அகந்தையடங்கு காதை.

எம்பெருமான் ஸத்யபாமையோடு தன் புரமா கிய த்வாரகையடைந்தானென்று சொல்லமறந்து விட்டோம். அதை மன்னிக்கும்படிக் கேட்டுக்கொள் ளப்படுகிறது. இது ஒருபால் இருக்க, துர்யோதனன் பாண்டவர்கள், காட்டிலும், கஷ்டமில்லாமல் ஸுக மாக இருக்கிறார்களென்று கேள்விப்பட்டிருக்கலா மென்பதும், அவனதை அறியும்படியாக முயன்று இருப்பான் என்பதும், அவனுடைய கீழ்மையான ஸ்வபாவத்தை அறிந்தவர் யாவர்க்கும் தெரியாதிரு க்கமுடியாது. கீழ்மை ஸ்வபாவத்தில்முயல்பவர்மேல் வழியில் நடப்பவரைக் கண்டால் அவர்களுடைய நல்ல செயலை எவ்வாறு கெடுப்பதென்று முன் வழி தேடுவர். அவ்வாறு செய்யத் தன் பிராணனையும் விட வித்தமாயிருப்பார். அதிலும் தன்னுடைய நாட்டிற்கு பங்காளியாகவும், உலகத்தில் எல்லாரு டைய அன்புக்கும் பாத்ரனாகி, நன்மையே கைப் பிடித்து நடக்கின்றவனைக் கண்டால் பொறாமை உண்டாகாதிருக்க முடியுமா? தான் காட்டில் ராக்ஷ ஸர்களிடம் அகப்பட்டுத் தவிக்கத் தன்னையும் காப் பாற்றும் படியான தயாளகுணமுடையவன் தனது எதிராளியானால் அவனிடம் கீழ்மகனுக்கு க்ருதஞ் யதை உண்டாவதற்குப் பதிலாக மிக்க கோபா வேசத்தோடு தீமை செய்ய முயல்வதே கொடு மையின் ஸ்வபாவம்.

ஆத்திரத்தோடு ஆட்டைத் தின்றதில் நெஞ் சுள் என்பு தைத்திட, வலியற்ற ஓநாய் ஓர் கொக் கைக் கண்டாற்போல பாண்டவர்க்குக் கெடுதி செய்ய வேண்டும் என்னும் ஆத்திரங்கொண்ட துரியோதனனுக்குத் தன்னுடைய எண்ணம் நிறை வேறுமை என்னும் எண்ணம் நெஞ்சுள் தங்கி நிற்கும் ஸமயத்தில் தவத்திற் சிறந்து கோபக்கொழுந்து விட் டெரிய ஜடை வீசிவரும் முனிச்ரேஷ்டராகிய தூர் வாஸர் துர்யோதனன் ஸபைக்கு வந்தனர். அவர்க் குச் செய்யவேண்டிய கடமைகளை முற்றும் தவறாது செய்து அவர் கோபத்துக்குத் தக்கவாறு நடந்து அம்முனிவனை ஸந்தோஷப்படுத்தித் தனக்கோர் வரமும் பெற்றான்.

இதற்குள் தூர்வாஸர் குரு நாட்டை விட்டுக் காட் டுப்பிரதேசங்களில் சுற்றிக்கொண்டு தருமர் இருக் கும் இடம் கண்டு வந்தனர். அப்பொழுது த்ரௌபதி உண்டு ஆகிவிட்டதென்று அறிந்த தூர்வாஸர் தன் னுடைய சிஷ்ய பரிவாரத்துடன் தருமன் முன்பு தோன்றினர். தருமர் விருந்தாக இவர் வந்திருப்

பதைக்கண்டு அம்முனிச்ரேஷ்டருக்கு அர்க்ய பாத்யாதிகள் தந்து தவிசு இட்டுக் கைகூப்பித்தொழுது "தேவரீர் ஸ்நாநம் செய்து வாரும். உம்முடைய பூஜை முதலியவைகள் முடிந்ததும். வயிறார உணவு கொள்ளலாம்" என்றார். அவரும் தமது சிஷ்யபரிவாரத்துடன் ஸ்நாநம் செய்யச் சென்றார்.

த்ரௌபதி இவை முற்றையும் கவனித்தாள். முனிவர்களுக்கு எவ்வாறு விருந்திடுவதென்றெண்ணினாள். தன்னிடம் இருந்த அக்ஷயபாத்திரத்தில் சோறுஇனி, அப்பொழுது, கிடைப்பதரிதாகுமல்லவா என்று மனத்தில் பலவாறு எண்ணிப் பின் கண்ணபிரானை நினைந்து நினைந்து "'கஞ்சனையடர்த்த கண்ணா! ஹேக்ருஷ்ணா! வலியுள் சிறந்தாய்! என்று முள்ளாய்! தேவகிமதலாய்! ஹே வாஸுதேவா! உலகமுதல்வா! அன்பாது துன்பமொழித்திடு மருளே! உலகினுயிரே! ஆக்கிடும்பொருளே! அழித்திடுமுதலே! மூவா முதல்வா! முடிவில்பொருளே! அசரசரண்ய! கோபாலா! உயர்வினுயர்வே! அறிவின் முதலே! உனக்கே அடைக்கலம். தெய்வீகப்பொருளே! அறவாழியந்தணா! தீனசரண்யா! மூலபுருஷா! உயிரின் தலைவா! மனவாக்கெட்டா மாதவப்பொருளே! மாண்பினிற் சிறந்தோய்! குணப்பெருங் குன்றே! உன்னையே அடைக்கலமடைந்தேன். உன்னடி சரணம்! ஆபத்பாந்தவ! அன்பரின் அன்பா! தயவுசெய்தெனைக் காரும். அண்டர்தம் தலைவா! அஞ்சனவண்ணா! குவளைக்கண்ணா! என்னைக்காப்பாற்று. பீதாம்பரதரா! கௌஸ்துபமணிந்தாய்! என்னைக்கைவிடேல். நீயே எவற்றிற்கு முதல்வன். முதலும் நீயே. முடிவுநீயே. உன்னுடைய அருள் வீசாது எவ்வுயிர் நிலைக்கும்? அது எங்கும் படர்ந்தளிப்பதல்லவா? அவ்வருள் வெள்ளம் என்மேல் பாய்வதரிதோ? கடவுளரேறே! உன்னை யடைந்தார்க்கும் துயரமும் உண்டோ? எல்லாமுனது செயலல்லவா? உன் அருளுக்கு அளவாமோ? என்னை இவ்வாறு பரீக்ஷிப்பது உன் புகழ்க்கு அழகாமோ! இனி என்னால் ஒன்று முடியாது! உன்னாணையின்றி எவ்வாறு நான் வாழ்வது? துற்சாஸனிடமிருந்து அன்று காத்தாய்! இன்று இங்கும் என்னைக் காப்பாயாக!" என்று தொழுதகையினளாய் ஒன்றும் தோன்றாது மனமுழுதும் கண்ணன்பால் சேர்த்துத் திடசித்தமாக அவனையே துதித்துத் துதித்து உளம் நெக்கு நெக்குருகினாள்.

முதலைவாயிலகப்பட்ட யானை "ஹரி! ஹரி!" வென்றலறி மூவா முதல்வனைக்கூவ பிராட்டியாரைவிட்டு அதைக்காக்க வந்த எம்பெருமான் ருக்மணியை விட்டு த்ரௌபதியின்பால் வராதிருக்க முடியுமோ? தேவாதிதேவன் அவளது துயரை ஒழிக்க அவள் முன்வந்து தோன்ற, த்ரௌபதி யாவற்றையும் கூற, கண்ணன் "ஹே! த்ரௌபதி! எனக்கு இப்பொழுது பசி காதை அடைக்கின்றது, எனது பசியைத் தணியச் செய். பின் யான்எல்லாம் செய்வேன்" என்றார். "ஸூரியன் தந்த அக்ஷய பாத்திரத்துள் நான் உண்ணும்வரை உணவு நிறைந்திருக்கும். நான் உண்டாகிவிட்டதே. நான் உண்டபின் அதில் உணவு இருக்காதே" என்றாள். "என்னை இப்பொழுதா பரிஹாஸம் செய்வது? பசியோ பிராணன் போகின்றது. களைப்பு மேலிடுகின்றது. எங்கே அந்தப் பாத்திரத்தைக் கொண்டு வா. எனக்குக் காட்டு அதை நான் பார்க்கவேண்டும்" என்று பகவான் பதில் கூறினார். கட்டாயப்படுத்தப்பட்டவளாகி த்ரௌபதை அக்ஷயபாத்திரத்தை எடுத்து வந்தாள். அதன் ஓர் மூலையில் ஓர் சோற்றுப்பருக்கையும் சாதத்துண்டும் இருக்கக் கண்டு அவற்றை நகத்தால் பெயர்த்து வாயுள் கொண்டு "பரந்தாமன் இவற்றால் ஸந்தோஷமடையட்டும்! யக்ஞபோக்தாவாகி இருக்கும் தலைவன் அவற்றையுண்டு உள்ளம் தேக்கிடுவானாக!" என்று கூறிக்கொண்டு ஸஹாதேவனைப் பார்த்து 'அம்முனிவரை விருந்துண்ண அழைத்து வா' என்று ஏவினார். ஸஹாதேவனும் அவரை அழைத்து வரச் சென்றான். இதற்குள் அவர்கள் ஸ்நாநம் செய்து உடம்பைத் துடைத்துக்கொண்டு, தூர்வாஸரை நோக்கி "நாம் அரசனை உணவு சேகரிக்கச் சொல்லிவிட்டு இங்கு ஸ்நாநமாட வந்தோம். நமக்கிப்பொழுது வயிறு நிறைந்திருக்கின்றது. நெஞ்சில் எதிர்த்து வருகின்றது. நமக்காக ஆக்கிய உண்டி முழுதும் பாழாயிற்றல்லவா? நாம் இப்பொழுதென்ன செய்வது?" என்றார்கள். "துர்யோதனன் செய்த மரியாதைக்கு உவந்து அவனுக்கு என்னவரம் வேண்டும் என்று கேட்டேன். அதற்கவன் 'தருமபுத்திரன் அதிதிகளை எல்லாம் விசாரித்து அவருக்கு உணவிட்டு விட்டு தன்னுடைய உடன்பிறந்தாரோடு சூழ்ந்து முனிவர் சூழ, இப்பொழுது காட்டில் வசிக்கின்றனன். அவரும் நீர் சென்று பெண்ணிற் பெருந்தகையாகிய த்ரௌபதி உணவுகொண்டு வீற்றிருக்கும் ஸமயத்தில் எனக்காக நீர் அங்குச்சென்று பிக்ஷையிடும்படி கேளும்' என்று கேட்டுக்கொள்ள நானும் அவ்வாறே ஆகட்டும் என்று அவனுடைய மொழிகளை வெல்லமிட்ட வேப்பு என்று எண்ணாது தருமமே உருவெடுத்த தருமபுத்திரனை உணவு அளிக்கும்படிச் சொல்லி பெருங்குற்றம் செய்தேன். பாண்டவர்கள் தமது கோபக்கண்ணால் பார்த்தாலும் போதும். நாம் சாம்பராய் விடுவோம்; அம்மன்னன் தருமத்திற் சிறந்து தவத்தில் பெருத்திருக்கின்றனன். ஹே! விப்ரர்களே! ஹரிசரண ஸேவையிலீடுபட்டவரைக் கண்டாலே எனக்குப்பயம். அப்பாண்டவர் பெருந்தன்மை, தயை, கல்வி, வீரம் இவை நிறைந்தவர், தவத்திலுழைத்தவர். தெய்விகத் தன்மையுடையவர். பழியின்

வழி நடவாது பரந்தாமனையே நம்பினவர். அவரது கோபம் நம்மைப்பருத்தி நெருப்புப்போல் எரித்து விடும். ஆகையால் நீங்கள் மூலைக்கொருவராக ஓடுங்கள். இங்கினி நாம் நிற்பது அழகன்று; தாமஸம் செய்யாது ஓடும்'' என்று தூர்வாஸர் சொல்ல ப்ராம்மணர்கள் யாவரும் பயந்து ஓடினார்கள். அவரும் அவருடன் ஓடி ஒளிந்தனர்.*

ஸஹாதேவன் வந்ததும் முனிவரைக் காணாது தேடினான். காடுமுழுவதும்தேடினான். அவரைக் காணவில்லை. பின் வேறு முனிவர்களால் அவர்கள் ஓடிவிட்டனர், என்னும் செய்தியை அறிந்து அதை ஸ்ரீகிருஷ்ணபகவானிடம் கூறினான். பாண்டவர் சில நேரம் அவர்கள் திரும்பிவருவார்கள் என்று காத்திருந்தனர். பின் தருமபுத்திரர் ''நடுராத்திரியில் வந்து அம்முனிவர்கள் நம்மை அடைந்தாலும் அடையலாம். விதியை யார் வெல்வது? வருவது தானே வரும். நாம் என் செய்வது'' என்று கவலையடைய கண்ணன் பின்வருமாறு கூறினார்:—

''ஹே! குந்தீபுத்ரா! பயப்படவேண்டாம். த்ரௌபதியின் வேண்டுகோளால் யான் இங்குவந்தேன். உம்முடைய கஷ்ட நிலைமையைப் போக்க த்ரௌபதியின் ஸ்துதியாகிய வலையில் சிக்கிவந்தேன். கோபக்கொழுந்து வீசிவரும் முனிவனாகிய தூர்வாஸனால் உனக்கு ஒன்றும் பயமில்லை. அவன் உன்னுடைய தபோபலத்திற்குப் பயந்து அப்பொழுதே ஓடிவிட்டான். தருமத்திற் கீடுபட்டவர் கஷ்டமடையமாட்டார். கவலையற்றிரு. இனியான் வீடுசெல்வேன்.''

த்ரௌபதி இம்மொழிகளைக்கேட்டு ''ஹே! கோவிந்தா! கோபாலா! உன் நாமமொன்றே கஷ்டமென்னும் கடலைக்கடக்கும் ஓடம் ஆகும் அல்லவா? உன்னுடைய கிருபாவிலாஸத்தினால் இக்கஷ்டத்தைக் கடந்தோம். இனி ஸுகமே நீ போகலாம். நீ நீடூழிவாழி'' என்ன தாஸானுதாஸனாகிய எம்பெருமானும் த்ரௌபதியின் விடைபெற்று த்வாரகை அடைந்தான்.

த்ரௌபதையும் தனது கணவரோடு காடுகாடாக அலைந்து அவற்றின் அழகை அனுபவியா நின்றாள்.

* வில்லிபுத்தூர் ஆழ்வார் பாரதத்தில் இங்கு வேறுபடுகிறது. அதுவருமாறு.—தூர்வாஸர் ஸ்நானம் செய்யச்சென்றதும் பாண்டவரும் த்ரௌபதியும் கண்ணனைத் துதிக்க, கண்ணன் அங்குவர, நடந்தவைகளை அறிந்து த்ரௌபதியை அக்ஷயபாத்திரத்தில் ஒரு சோற்றுப் பருக்கைகூட இல்லையா என்றுகேட்க, அதைப்பார்த்து அதிலொரு சோற்றுப்பருக்கை இருப்பதாகச்சொல்ல ஸ்ரீ கிருஷ்ணன் அப்பருக்கையைத் தன்வாயுள்கொண்டு முனிவர்களுடைய பசியினதுதாபம் தணியட்டும் என்று நினைத்தார். முனிவர்க்கும் பசியடங்கியது. தூர்வாஸர் இவ்வாறானது பரந்தாமனது திருவருளால் என்று அறிந்து பாண்டவர் முன்வந்து ''நாங்கள் வயிறார உண்டோம். உம்மைக் காணவந்து காணுதற்கரிய பரந்தாமனையுங் கண்டோம்'' என்றுகூறிப் பின் துர்யோதனனிடை தாம் சென்றதையும் அவன் கேட்டுக்கொண்டதையும் தாம் வந்ததையும் கூறினார். பின்பு தருமபுத்திரரை உனக்கு வேண்டியவரம் கேளும்; நான் ஸித்தமாயிருக்கிறேன் என்ன ''தாங்கள் வேறுயார்க்கும் துர்யோதனுக்குக் கொடுத்தவரம்போல் கொடுக்காதிருக்கவேண்டும்'' என்று தருமர் கேட்டுக்கொள்ள முனிவரும் அவ்வாறே ஆகட்டும் என்று கூறிப் போனார்'' என்பதே.

# ஸ்ரீ ஸரஸ்வதி படிகநிலை

## THE STATUE OF SRI SARASVATI

ஸ்ரீ ஸரஸ்வதியின் உருவ நிலையை இந்த மாதத்து ஸஞ்சிகையின் முகபடமாகப் பதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வுருவம் படிகத்தில் சித்திர வேலையால் அமைத்த நிலையின் பொடகிராப்பின் சித்திர அமைப்பு, இது காலஞ்சென்ற சித்திரவித்பன்னனாகிய ரவிவர்ம ராஜாவினுடைய ஸரஸ்வதி உருவம்போல் இலாது வேறுபடுகிறது. அது உட்கார்ந்த நிலையிலிருப்பதன்றிக் கையில் வீணையுமில்லாமல் இருப்பினும் சின்முத்திரை பொருந்தி உபதேச மூர்த்தம் அமைந்திருக்கின்றது. அதுவுமன்றி வெண் சலவைக் கல்லால் அமைக்கப்பட்டது. ஞானத்தின் நிலையைக் குறிக்கும். இவ்வுருவத்தின் நிலையை ஒருவாறு சரிவர மதுரை மூன்றாவது சங்கத்து வித்வானாக இருந்த பாரதம்பாடிய பெருந்தேவனார்,

''புத்தகமும் ஞானத்து முத்திரையும் பொற்பளிங்கும்
வைத்த கமண்டலமும் வன்னிகையும்—முத்து
வடங்கொண்ட பூண்முலையி னாளென் மனத்தே
இடங்கொண்டாள் நீங்கிற் றிடர்.''

என்று பாடி இருக்கின்றார்.

இவ்வுருவ அமைப்பில் வடநாட்டாரது கை சமத்காரமும் தென் நாட்டாரது கைநாட்டுங் கலந்து இருப்பது ஆரியதிராவிட சித்திரவேலைகள் ஒன்றிலொன்று மயங்கியதைக் காட்டுகின்றது. இத்தகைய உருவம் சித்ரலேகன சாரித்ர ஸங்க்ரஹத்திற்கு முக்கியமாகிய ஆதாரமாகும்.

இந்தப் பூஜார்ஹமாகிய ஸ்ரீ ஸரஸ்வதியின் உருவத்தைப் பார்க்குந்தோறும் ஸ்ரீகவி சக்கிரவர்த்தியாகிய கம்ப நாடரது

சேதிக்க லாந்தர்க்க மார்க்கங்கள்
ளெவ்வெவர் சிந்தனையுஞ்
சோதிக்க லாமுறப் போதிக்க
லாஞ்சொன்ன தேதுணிந்து
சாதிக்க லாமிகப் பேதிக்க
லாமுத்தி தானெய்தலாம்
ஆதிக்க லாமயில் வல்லிபொற்
றாளை யடைந்தவர்க்கே.

என்னும் பாட்டு மனத்தை உருக்காது விடாது என்பது ஆச்சரியமன்று.

# விசேஷ வர்த்தமானங்கள்

## GENERAL NEWS

**மட்பாண்டங்கள் செய்தல்.**—பம்பாய் பட்டினத்திலுள்ள ஸர் J. J. ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ் என்ற தொழிற் கல்விச்சாலையில் மற்றத் தொழில்கள் கற்பிக்கப்படுவதோடு, மட்பாண்டம் செய்யும் தொழிலும் கற்பிக்கப்பட்டு வருகிறது. இப்படிக் கற்பிக்கப்பட்டு வருவதில், இதுவரையில் கண்ணுக்கழகான பாத்திரங்கள் செய்வதைப்பற்றி மட்டும் கவனம் செலுத்தப்பட்டு வந்தது. இது சரியல்லவென்று இப்போது பம்பாய்க் கவர்ன்மெண்டார் தீர்மானித்து, எவ்விதமான மட்பாத்திரங்கள் அன்னிய தேசங்களிலிருந்து வருகின்றனவோ, எவைகள் ஜனங்களுக்கு உபயோகமாகக் கூடியவைகளோ, அவைகளைச் செய்வதில் சோதனைகள் செய்யும்படியாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். முக்கியமாய்த் தட்டுகள், கோப்பைகள், கூரை ஓடுகள், இவைகளைத் தற்கால இயந்திரங்களின் உபயோகத்தால் எப்படிச் செய்தால் தொழிலாளிகளுக்கு லாபங் கிடைக்குமோ அப்படி இந்த ஸ்கூலில் செய்து காட்டவேண்டுமென்று உத்திரவு செய்திருக்கிறார்கள். இதற்காகப் புது இயந்திரங்கள் தருவிப்பதற்காகவும் வேறு செலவுக்காகவும் ஐவேஜித்திட்டம் செய்திருக்கிறார்கள்.

* * *

**சிவ சமுத்திரத்தில் இன்னொரு மின்சார விசை யந்திரம்.**—மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த சிவசமுத்திரத்தில் காவேரி யாற்றின் ஜலவேகத்தைக் கொண்டு மின்சார விசை யுண்டாக்க ஏற்கெனவே மூன்று யந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது அந்தச் சமஸ்தான கவர்ன்மெண்டார் 85-லட்சம் ரூபாய் செலவில் நான்காவது யந்திரமொன்று ஸ்தாபிக்கப் போகிறார்களென்று தெரிகிறது. கோலார் பொன் சுரங்கக் களங்களுக்கும், பங்களூருக்கும் மைசூருக்கும் இப்போது கிடைத்து வரும் மின்சாரசப்ளை வசதியை அதிகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடும் அந்த சமஸ்தானத்திலுள்ள மற்றப் பெரிய பட்டணங்களுக்கு மின்சாரவசதி யேற்படும்படியாய்ச் செய்துவிட வேண்டுமென்ற நோக்கத்தோடும் அந்த யந்திரத்தைச் சிவ சமுத்திரத்தில் ஸ்தாபிக்கப்போகிறார்களெனப்படுகிறது.

* * *

**ஓர் பனையில் ஏழுகிளை.**—நாகப்பட்டணத்தைச் சார்ந்த ஒடாச்சேரிக் கிராமத்தில் ஓர் பனை மரத்தில் ஏழு கிளைகள் இருக்கின்றனவாம். (யாழ்ப்பாணத்தைச் சார்ந்த கொட்டைக்காட்டில், ஓர் தோட்டத்தில் ஏறக்குறைய 100 இளம்பனைகள் வளர்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஒன்றுமுதல் பத்துக்குக் குறையாத கிளைகளுடையனவாய் இருப்பதை நாம் நேரில் கண்டேம். பா-ப.)

* * *

**தண்ணீர் கலந்த பாலைச் சோதிக்கு முறை.**—ஒரு பாத்திரத்திலுள்ள பாலைக் கலப்பான பாலென அறிய ஒரு சுலபமான வழியுண்டு. அதாவது, ஒரு பளபளப்பான பின்னலூசியைப் பால் நிரப்பியுள்ள பாத்திரத்தில் விட்டு உடனே வெளியே எடுத்துப் பிடிக்க பால் கலப்புள்ளதாயிருப்பின் ஊசியில் ஒட்டிக் கொண்டிராது.

* * *

**இந்திய ரெயில்வேய்கள்.**—அடுத்த வருஷத்து வரவு செலவு மதிப்புத்திட்டக் கணக்குகளில் (Budget) $14\frac{1}{4}$ கோடி ரூபாய் இந்திய இருப்புப் பாதைகளின் செலவுக்காக எடுத்து வைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

**பம்பாய் கவர்ன்மெண்டார் கள்ளுக்கடை முதலியவைகள் எந்த ஜாகாவில் வைப்பது கூடாது, அல்லது கூடும், என்னும் விவரமறிவதற்காக, ஆங்காங்குள்ள பெரிய தனக்காரரைச் சங்கத்தவராக்கியிருக்கிறார்கள். கலெக்டர்கள் இனி யிவர்களுடைய இஷ்டத்தை யனுசரித்தே கடைகளை வைக்க லைசென்ஸ் கொடுக்கவேண்டுமென்றும், இவர்கள் வேண்டாத இடங்களில் வைக்கக்கூடாதென்றும் உத்தரவு பிறந்திருக்கிறது. இதை யெல்லோரும் கவனிக்க வேண்டும்.**

---

## புத்தகவரவு

**ஸ்ரீ** குமுதவல்லி **திருமங்கை மன்னன்.—இஃது ஓர் கற்பனைக் கதை. நாகப்பட்டணம் ம-ா-ா-ஸ்ரீ, ஜே. ராஜகோபால் பிள்ளையவர்களால் பதிப்பிக்கப்பெற்றது. 124-பக்கங்கள் கொண்டது. விலை அணு 8.**

குறிப்பு.—இச்சஞ்சிகையின் 213-வது பக்கத்தில் பரிபாலணை என்பதை பரிபாலனை என்றும், 215-வது பக்கத்தில் 'ஊரினிதாங்கினிடே' என்பதை ஊரினி தாங்கினிதே என்றும், 215-வது பக்கத்தில் ஏற்பட்டு என்பதை ஏற்பட்ட என்றும், 225-வது பக்கத்தில் ராயுசம் என்பதை சராயுசம் என்றும் திருத்தி வாசிக்க.

சிறிதுகாலத்திற்கு விலை குறைக்கப்பட்டது

அறுபத்துமூவர் சரிதங்களடங்கிய

# பெரிய புராணம்

## மூலமும், அரும்பதவுரையும், வசனமும்

இச்சிலவுலகத்தில் ஆன்ம நாயகனையடைய பலவித நெறிகளிருப்பினும் அவைகளுள் சிறந்தது பக்தி நெறியேயாகும். இதனைப்பற்றி விரிவாகக் கூறும் பதி நூல் பெரியபுராணம் ஒன்றே.

இப்பெரியபுராணத்தை உரையோடு 19 ரூபாய்க்கும், மூலம்மாத்திரம் 3-ரூபாய்க்கும் விற்கின்றமையால் எளியவர் எளிதில் பெற முடியவில்லை. ஆனது பற்றி இந்நூல், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் அச்சிட்ட பிரதிக்கிணங்கப் பரிசோதித்த மூலத்தோடு அரும்பதவுரையும், வசனமும் சேர்த்து உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் டிம்மி 109-பாரம் அல்லது 872-பக்கங்கள் கொண்ட புத்தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. இடையிடையே தேவாரங்களுஞ் சேர்க்கப்பட்டுள்ளன. இளங்கல்வியுடைய சிறுமியர்களும் வாசித்து எளிதில் பத்திச் சுவையையுணர்ந்து களிப்பார்கள். இதுபோன்ற பிரதி இதுகாறும் வெளிவந்ததில்லையென்பதை இதனை வாங்கி வாசிப்போர் உணர்வர். உயர்ந்த கலிகோ பயிண்டு செய்து தயாராயிருக்கிறது. சொற்ப காபிகள் விற்பனைக்கு இருக்கின்றமையால் வேண்டியவர்கள் ஆர்டர் சீக்கிரம் அனுப்பவேண்டியது.

விலை ரூ. 3 0 0

சிறிதுகாலத்திற்குச் சந்தாதாரர்களுக்கு மாத்திரம் ரூபா. 2 க்குக் கொடுக்கப்படும்.

திருமந்திரம்.—மூவாயிர வருடஞ் சிவயோகமிருந்து ஒவ்வோராண்டிற்கு ஒவ்வோரருட்பாவாகத் திருமூலநாயனாரவர்களால் அருளிச்செய்யப்பட்டது. தனைபிரித்திருக்கிறது. அரும்பாக்கட்கு நக்ஷத்திரப் புள்ளியிட்டிருக்கிறது. திருமூலநாயனார் கலர்படம் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. உயர்ந்த காகிதத்தில் (24 lbs Double Foolscap) அச்சிடப்பட்டிருக்கிறது. (F. Cap.) 59½-பாரம் அல்லது 476-பக்கங்கள் உடையது. கலிகோ பயிண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 1 8 0

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி

மயிலாப்பூர், மதராஸ்.

ம-ா-ா-ஸ்ரீ, பண்டித நடேச சாஸ்திரியாரால் எழுதப்பட்ட அரிய தமிழ்ப் புத்தகங்கள்

இனிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. சிறுவர் சிறுமிகள் கூட வருத்தமின்றிப் படிக்கக் கூடியவை. யாவராலும் சிலாகிக்கப் பெற்றவை.

| | ரூ. | அ. |
|---|---|---|
| தீக்கற்ற இருதுழந்தைகள்.—புதிய பதிப்பு. பண்டித நடேச சாஸ்திரியார் எழுதிய புத்தங்களுள் முதன்மையானது. இப்பதிப்பின் விலையும் குறைத்திருக்கிறது. முன் பதிப்பின் விலை 1 4 | | |
| இப்பதிப்பின் விலை ... ... ... | 0 | 12 |
| மதிகெட்ட மனைவி ... ... ... | 1 | 0 |
| தீனதயாளு (மூன்றாம் பதிப்பு) ... ... | 0 | 8 |
| ஸ்ரீ மாமி கொலுவிருக்கை ... ... ... | 0 | 8 |
| தலையணை மந்திரோபதேசம் ... ... | 0 | 8 |
| முத்திராராக்ஷஸம்... ... ... ... | 0 | 4 |
| மிருச்சகடி... ... ... ... ... | 0 | 4 |
| வேணீ ஸம்ஹாரம்... ... ... ... | 0 | 3 |
| ஷேக்ஸ்பீயர் நாடகக் கதைகள் ... ... | 0 | 6 |
| பாலகாண்டம் (வால்மீகி இராமாயண வசனம் உயர்ந்தபதிப்பு) .. | 1 | 12 |
| அயோத்தியாகாண்டம் .. | 3 | 0 |
| ஆரண்யகாண்டம் .. | 1 | 12 |
| கிஷ்கிந்தாகாண்டம் .. | 1 | 12 |
| குமாரஸம்பவம்.—ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளின் அவதாரத்தைப் பற்றிய வர்ணனை. மூல கிரந்தத்தின் சொன்னயம் குன்றாது மிகவும் அழகாய் மொழி பெயர்க்கப்பட்டது. அநேக சித்திரப்படங்களுடன் கூடியது ... ... ... ... | 0 | 12 |
| நளோபாக்யானம்.—இவ்வரியபுத்தகத்தைப் பற்றி ஜாஸ்தியாய் எழுதவேண்டுவது அனாவசியம். நிரம்பவும் தெளிவாய் இனிய நடையில் எழுதப்பெற்றது. மிகவும் அழகான சித்திரப்படங்கள் சேர்த்திருக்கிறது. சிறந்த நீதிகள் அடங்கியது. ஒவ்வொருவரும் நளமஹாராஜன், தமயந்தி இவர்கள் கதையை அவசியம் வாசிக்கவேண்டியது ... ... .. ... | 0 | 12 |
| தானவன் எனும் போலீஸ் நிபுணன் கண்டுபிடித்த அற்புதக்குற்றங்கள் ... ... | 1 | 0 |
| திராவிட மத்தியகாலக் கதைகள் ... ... | 0 | 8 |
| திராவிட பூர்வகாலக் கதைகள் ... ... | 0 | 8 |

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி

மயிலாப்பூர், மதராஸ்.